நல்லிணக்கத்துக்கு ஆஸி. அரசு உதவும் | பக்கம் 11

உதயன்

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 | கதிர் 162 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 25. வெள்ளிக்கிழமை 08.05.2015

# மஹிந்தவின் சொத்து விவரம் அம்பலம்

## 2,40,000 கோடி ரூபா என அரசு நேற்றுப் பகிரங்கப்படுத்தியது



கொழும்பு, மே 8

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் சொத்து மதிப்பு 2 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபா (18 பில்லியன் அமெரிக்க டொலர்) என்ற தகவலை நேற்று வெளியிட்ட வெளிவிவ்கார அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச நாடுகளின் புலனாய்வுப் பிரிவின ரின் தொழில்நுட்ப உதவிகளின் அடிப்படையிலேயே மஹிந்தவின் சொத்து விவரம் மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்தினார்.

ராஜபக்ஷ குடும்பத்தின் சொத்து பக்.02

## களவாக மணல் ஏற்றியவர் பொலிஸின் சூட்டில் காயம்

### வடமராட்சியில் நேற்றுச் சம்பவம்



நெல்லியடி, மே 8

வடமராட்சி வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையாக உள்ள புளியங்கன் சுடலைக்கு அருகில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது. அதன்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார். பொலிஸார் இருவர் தாக்குதலால் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு பிள்ளையின் தந்தையான துன்னாலையைச் சேர்ந்த ஜெயசிங்கம் தர்சன் (வயது–27) என்பவரே தோள்ப் பட்டையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்கு உள்ளானார். அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பக்.02

## எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, மே 8

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்குஅனுமதிவழங்குமாறுஇலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் என்பன கோரிக்கை விடுத்துள்ளன.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் கடந்த காலங்களில் பல தடவைகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுரேன் படகொட தெரிவித்தார். பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் சில உற்பத்திகளால் நட்டம் ஏற்படுகின்றது என்று அந்த நிறுவனங்கள் அமைச்சுக்கு தெரியப்படுத்தியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கப் போவதில்லை என்று சுட்டிக்காட்டிய அவர், மாற்றுவழியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா பக்.02

## வளலாயில் குண்டுகள் மீட்பு



யாழ்ப்பாணம், மே 8

அச்சுவேலி, வளலாயில் நேற்று மூன்று குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். மண்ணில் புதைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு அந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பக்.02

## இரகசிய முகாம்களின் தகவல்களை தாருங்கள்

### அமைச்சர் மங்கள சமரவீர கோருகின்றார்

கொழும்பு, மே 8

"இலங்கையில் இருக்கின்றதாகக் கூறப்படும் இரகசிய முகாம்கள் தொடர்பாக தகவல் வழங்கினால், அது குறித்து விசாரணைகளை முன்னெடுக்க அரசு தயாராக உள்ளது" – என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் காயங்களை ஆற்றவேண்டிய நிலையில், அரசு இருக்கின்றது என்றும், இறுதிக் கட்டப் போரில் காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும், இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்புவதற்கு தமிழ் மக் களுக்கு பக்.02

## தேசம் ஒன்றைக் கைப்பற்ற போதையே முதல் ஆயுதம்

### சுட்டிக்காட்டுகிறார் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணம், மே 8

ஒரு நாட்டை – தேசத்தை கைப்பற்றுவதற்கு முதலில் அந்த நாட்டு மக்களை போதைப் பொருளுக்கு அடிமையாக்குவார்கள். சீனாவை அபின் என்னும் போதைப் பொருளுக்கு அடிமையாக்கியே, நாட்டைக் கைப்பற்றினார்கள். வடக்கு மாகாணத்திற்கும் சீனாவின் நிலைமைதான் ஏற்படப் போகின்றதோ தெரியாது. – இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க.

காங்கேசன்துறையிலுள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு பக்.02

## பஸிலுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, மே 8

திவிநெகும திணைக்களத்தின் நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவுக்கு விளக்க மறியல் பக்.02

## போக்குவரத்துப் பொலிஸார் விரைவில் ஒழுங்குமுறைக்குள்

### உறுதியளித்தார் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க

யாழ்ப்பாணம், மே 8

வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் நடவடிக்கைகள் விரைவில் ஒழுங்கு முறைக்குள் கொண்டு வரப்படும் என்று தெரிவித்த வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க, எந்தவொரு பொலிஸ் நிலையத்திலாவது முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையாயின் உடனடியாகத் தனது பக்.02

# மிரட்டிய மஹிந்தவும் மசியாத மைத்திரியும்

கொழும்பு, மே 08

ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையிலான சந்திப்பில், ஒரு கட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவின் கோரிக்கைகளுக்கு மறுப்புத் தெரிவித்ததும், மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்திலிருந்து வெளியேறப் போவதாக மிரட்ட, அவர் வெளியேறினால் பரவாயில்லை என்று மைத்திரிபால சிறிசேன பதிலளித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்களை இருவரும் வெளியிடவில்லை. ஆனாலும், அமைச்சர் துமிந்த திசாநாயக்கா மற்றும் முன்னாள் அமைச்சர் குமார வெல்கம ஆகியோர் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தெரிவித்தனர்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம், இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் சிலவற்றை நேற்று வெளியிட்டுள்ளது. சந்திப்பில் கலந்து கொண்ட நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தாகக் குறிப்பிட்டே இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், இருதரப்பு கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தால், விரிசல்கள் இன்னும் அதிகமாகியுள்ளது. இதனால் இனி மேல் இருவருக்கும் இடையிலான சந்திப்புக்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவு.

பேச்சின் ஒரு கட்டத்தில், கூட்டத்தில் இருந்து வெளியேறப் போவதாக மஹிந்த ராஜபக்ஷ எச்சரித்த போது, அதற்கு மைத்திரிபால சிறிசேன, தேவையானால் அவர் வெளியே போக முடியும் என்று கூறிவிட்டதாகவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

மைத்திரிபால சிறிசேன, பேச்சுக்குச் சென்றது அவர் பற்றிய மோசமான எண்ணங்களைத் தோற்றுவித்திருப்பதாகவும், எனவே மேலதிக பேச்சு நடக்காது என்றும், அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் தனது ஆதரவாளர்களுக்கு எதிரான ஊழல் மோசடி விசாரணைகளை நிறுத்துமாறு மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார். அதற்கு மைத்திரிபால, இது நல்லாட்சியை பேணும் நடவடிக்கை என்றும், ஊழல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடரும் என்றும் தெரிவித்ததுடன், சட்டத்தில் தான் தலையிட மாட்டேன் என்றும் குறிப்பிட்டுள்ளதாக, சீன செய்தி நிறுவனமான சின்ஹவா செய்தி வெளியிட்டுள்ளது. (ற-5)



## மஹிந்தவின்

மதிப்பானது, நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில்நான்கில் ஒரு பங்கு என்றும், இலங்கையின் மிகப்பெரிய நிதியமானஊழியர்சேமலாபநிதியின் இரு மடங்கு என்றும், 100 தலைமுறைகளுக்குப் போதுமானது என்றும்தெரிவித்தவெளிவிவகாரஅமைச்சர், அமெரிக்காவில்கூட குறிப்பிட்ட சிலரிடம் மட்டுமே இதுபோன்ற பெரியளவு சொத்துகள் உள்ளன என்றும் கூறியதுடன், இந்தச் சொத்து மதிப்பை கணக்கிட்டால் தலைசுற்றும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களின் நிதி மோசடி தொடர்பில் சர்வதேச நாடுகளின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும், அது சிக்கலானதாகவே இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

"கடந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், மோசடிகள் குறித்து நாம்விசாரணைகளைமுன்னெடுத்து வ்ருகின்றோம். இவற்றைத் தேட வேண்டாம் என அவர்கள் கூறுகின்றனர். ஆனால், நாம் இந்த விசாரணைகளைநிறுத்தமாட்டோம்.வெளிநாடுகளில் வேறு பெயர்களிலும், வேறு நிறுவனங்களின் பெயர்களிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் பணம் பதுக்கி வைத்துள்ளனர். இது தொடர்பில் 4 சர்வதேச நாடுகளின் புலனாய்வுத்துறையின் தொழில்நுட்ப உதவிகளுடன் நாம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இந்த புலனாய்வுத் தகவல்களுக்கமைய மஹிந்தராஜபக்ஷ குடும்பத்துக்கு 18 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, ரூபாவில் 2.2 ட்ரில் லியன்களாகும் (2 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா). நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 64 பில்லி யன் அமெரிக்க டொலர்களாகும். இந்தப் பணத்தில் நான்கில் ஒரு பங்கு மஹிந்தவின் சொத்தாக உள்ளது.

அதுபோல, ஊழியர் சேமலாப நிதி 1.4 ட்ரில்லியன்களாகும். மஹிந்தவின் சொத்துமதிப்பு இதில் இரு மடங்காகும்.இவற்றைக்கண்டுபிடிப்பது மிகவும் இலகுவான விடயமல்ல. இது தொடர்பாக 4 சர்வதேச நாடுகளின் உதவியுடன் முன்னெடுக்கும் நடவடிக்கையை நாம் தொடருவோம். இவை எந்த நாடுகள் என்பது தொடர்பான தகவல்களை இப்போது வெளியிட முடியாது" – என்றும் தெரிவித்தார். (ற-சி)

## பஸிலுக்கு

நீடிக்கப்பட்டுள்ளது. இவரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவல நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. கடுவல நீதிவான் நீதிமன்றில் நேற்று இவர் முற்படுத்தப்பட்டபோது இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ஷவுடன் சேர்த்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர், திவிநெகும திணைக்களப் பணிப்பாளர் மற்றும் சாரதி ஆகியோருக்கும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் நிஹால் ஜயதிலக சுகயீனம் காரணமாக நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை. (ற-சி)

## எரிபொருள்

ஐ.ஓ.சி.நிறுவனங்களின் நட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். எரிபொருள்கள் தொடர்பில் விலைச் சுட்டெண் தயாரிக்கப்படவுள்ளது என்றும் அதை அடுத்த மாதமளவில் அறிமுகப்படுத்த உள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்தது. (ற-4)

## களவாக

பொலிஸார் தரப்பில் பொலிஸ் சார்ஜெண்ட் சரங்கேவே, பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் புளியங்கன் மயானத்துக்கு அருகே ஹன்ரர் வாகனம் ஒன்றில் இளை ஞர்கள் சிலர் அனுமதியின்றி மணல்ஏற்றுவது தொடர்பில்பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதையடுத்து அங்கு விசேட பொலிஸ் அணி ஒன்று விரைந்தது. – என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் தெரிவித்தார்.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்காகஅமைக்கப்பட்டவிசேட அணியே சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. பொலிஸ் குழு சென்ற ஜீப் சம்பவ இடத்தில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் மணலினூடாகப் பயணிக்க முடியாது நின்று விட்டது. ஜீப்புடன் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிற்க, இரு பொலிஸார் மணல் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த இடத்துக்குச் சென்றுள்ளனர். அப்போது அங்கு நின்றிருந்தவர்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது பொலிஸார் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் அங்கு ஏற்பட்ட இழுபறியில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்து ஒருவர் காயத்துக்குள்ளாகினார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மணல் ஏற்றியபின்னர் ஹன்ரரின் ஆசனத்தில் அமர்ந்திருந்தபோது தன்மீது துப்பாக்கிச் சன்னம் பாய்ந்தது என்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ஜெயசிங்கம் தர்சன் தெரிவித்தார்.

மணல் ஏற்றிக் கொண்டிருந்த சமயம் திடீரென தமக்குப் பின்னால் எந்தவித எச்சரிக்கையும் இன்றி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும், அதன்போது தர்சன் காயமடைந்தார் என்றும் மணல் ஏற்றியவர்கள் தரப்பில் கூறப்பட்டது. காயமடைந்த தர்சனை மோட்டார் சைக்கிளில் தூக்கிக் கொண்டு தாம் ஓடியதாகவும், அவரை வைத்தியசாலையில் சேர்த்ததாகவும் அவர்கள் மேலும் கூறினர். (ற-109)

## தேசம்

தெரிவித்தார். வடக்கு மாகாணத்தில், யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. போதைப் பொருள் விற்பனையாளர்களைக் கைது செய்வதற்கு இரகசியப் பொலிஸ் படைப் பிரிவை பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொண்ட போதும் அது எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. பொலிஸார் சிவில் உடையில் சென்றாலும், குற்றவாளிகள் பொலிஸாரை இலகுவாக அடையாளம் கண்டு கொள்கின்றனர். – என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள்தான் எமக்குத் தகவல்தரவேண்டும்.போதைப்பொருளை ஒழிப்பதற்கு பொதுமக்கள் விரும்பினால் அவர்கள் தாரளமாக தகவல்களை எமக்கு நேரடியாக வழங்க முடியும். எனக்கு வழங்கப்படும் தகவல்களை நான் ஒரு போதும் வெளிப்படுத்த மாட்டேன். தென் பகுதியில்நான்பணியாற்றியபோது, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடும் ஒருவர் எனது மனைவியின் ஊடாக கோடி ரூபா தருவதாகவும், தகவல் தந்தவரை தெரிவிக்குமாறும் கூறினார்.

எத்தனை கோடி தந்தாலும் நான் தகவல்களை வழங்க மாட்டேன் என்று தெளிவாகவே அவருக்குத் தெரிவித்து விட்டேன். அதனையே இங்கும் சொல்கின்றேன். எனக்கு தகவல் வழங்குபவர்களை நான் எந்தவொரு சந்தர்பத்திலும் காட்டிக் கொடுக்க மாட்டேன்.– என்றும் அவர் தெரிவித்தார்.

சீனாவை கைப்பற்ற எண்ணிய வெளிநாட்டவர்கள், அந்த நாட்டில் உள்ளவர்களை அபின் என்னும் போதைப் பொருளுக்கு அடிமையாக்கினார்கள். அதன் பின்னர் அந்த நாட்டை இலகுவாக கைப்பற்றினார்கள். அதே போன்றுதான் வடக்கில் ஹெரோயின் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. சீனாவின் நிலைமைதான் இங்கும் ஏற்படப் போகின்றதோ தெரியாது.

வடக்கு மாகாணத்தின் மீது அக்கறை கொண்டவர்களாக இருந்தால், இந்த மக்கள் மீது அக்கறை கொண்டவர்களாக இருந்தால், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் தகவல்களைத் தாருங்கள். நான் நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன் – என்றும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர்களால், கடந்த காலங்களில் பாடசாலைக்கு அருகில் வைத்து போதைப் பொருள் விற்பனை செய்தவர்கள் தொடர்பில் யாழ்.பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பின்னர், குறித்த உத்தியோகத்தர்களே தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தனர். இது தொடர்பில் பொலிஸார் எடுத்த நடவடிக்கை என்ன என்று கேட்ட பொழுது, கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக, பழைய கோப்புக்களை பரிசீலித்து வருகின்றேன். அதன் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படும். – என்று ஜெயசிங்க தெரிவித்தார். (ற-5)

## இரகசிய

உரிமை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் இரகசிய முகாம்கள் இருக்கின்றன என்றும், இந்த முகாம்களில் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார். இதையடுத்து, வடக்கில் இரகசிய முகாம்கள் எதுவும் இல்லை என்ற கருத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இரகசிய முகாம்கள் இருக்கின்றதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக எவரும் சரியான தகவல்களை வழங்கினால் அது பற்றி விசாரிக்கத் தயார் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (ற-சி)

## போக்குவரத்து

கவனத்துக்கு கொண்டு வருமாறும் தெரிவித்தார். குறித்த பொலிஸ் அதிகாரிகளைச் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்கவுக்கும், யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு காங்கேசன்துறையில் நேற்று இடம்பெற்றது. அதில் பொதுமக்களால் பொலிஸாருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், ஊடகவியலாளர்களால் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் லஞ்சம் வாங்குவதை நோக்கமா[illegible]க் கொண்டு வாகனங்களை மறிப்பது, வீதிகளில் ஒளிந்திருந்து திடீரென கையைக் காட்டி வாகனத்தை மறிப்பது, அந்தச்சமயம் வாகனத்தை அவர்கள் மறித்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் நிறுத்தியதும் தமது கட்டளையை மீறிச் செயற்பட்டதாக முறைப்பாடு பதிவது, இரவு வேளைகளில் வாகனச் சாரதிகளின் முகங்களுக்கு திடீரென ரோச் லைட் வெளிச்சத்தை பாய்ச்சி மறிப்பது போன்ற பல குற்றச்சாட்டுக்கள் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முன்வைக்கப்பட்டது.

இதனைக் கேட்டறிந்த அவர், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு உடனடியாக தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். போக்குவரத்துப் பொலிஸார் லஞ்சம் வாங்குவதைத் தனக்கு இயன்றவரை ஆதாரத்துடன் தெரியப்படுத்துமாறும், அவ்வாறு தெரியப்படுத்தினால் உடனடியாகவே குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைப் பணியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

பொலிஸ் நிலையங்களில் இரவு 10 மணிக்குப் பின்னர், முறைப்பாடுகள் பதிவு செய்வதற்குச் சென்றால் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், 24 மணி நேரமும் பொலிஸார் செயற்பட வேண்டும். இன்று முதல் (நேற்று) அவ்வாறு செயற்படுவார்கள். இனிமேல் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றால் தெரிவியுங்கள். நான் உடனடியாகவே அவர்கள் மீது மிக்க் கடுமையான நடவடிக்கை எடுப்பேன்.

தற்போது இரவு வேளைகளில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிய ஊடகவியலாளர்கள், முக்கிய சந்திகளிலாவது பொலிஸார் இரவு வேளைகளில் கடமைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், தற்போது ரோந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. இனிமேல் அதனை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்கின்றோம் என்று குறிப்பிட்டார். (ற-5)

## வளலாயில்

குண்டுகள் பெரியதாகக் காணப்படுகின்றன என்றும் அவை யாருடைய தயாரிப்பு என்பது தெரியவில்லை என்றும் கூறப்பட்டது. வீசப்பட்டபோது அவை மண்ணில் புதைந்து வெடிக்காது போயிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பகுதியில் முன்னர் இராணுவத்தினரின் முகாம் ஒன்று இருந்தது என்றும் கூறப்படுகின்றது. (ற-4.5)

## சுமுகமாக நடைபெற்ற பல்கலை பேரவை கூட்டம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.பல்கலைக் கழகப் பேரவைக்குப் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னரான முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

புதிதாக நிமியக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்துக்குச் சமூகமளித்திருந்தனர். முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமான கூட்டம் பிற்பகல் 2 மணிவரை நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

சுமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர்கள் சுதந்திரமாகத் தமது கருத்துக்களை முன்வைத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. முன்னைய காலங்களில் அப்படியான நிலைமை காணப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ற-4)

## கிளிநொச்சிக்கு கஞ்சா கடத்த முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.மத்திய பஸ் நிலையம் அருகே ஒரு கிலோ கஞ்சாவுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாதகல் பகுதியில் கஞ்சாவைப் பெற்றுக் கொண்ட அவர் யாழ்.பஸ் நிலையத்துக்கு வந்து பின்னர் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளார். உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணை இடம்பெறுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

## கசிப்பு, சட்டவிரோத கள் வைத்திருந்த ஐவருக்கு தண்டம்

சட்டவிரோதமான முறையில் கசிப்பு, கள் வைத்திருந்தார்கள்–விற்றார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று.

100 மில்லி லீற்றர் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்த பெண்ணுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டமும் கட்டத்தவறின் 5மாத சிறைத்தண்டனையும், 1000, 500, ஆயிரத்து 500, 750, 6 ஆயிரத்து 500 மில்லி லீற்றர்கள் வைத்திருந்தார்கள் – விற்றார்கள் என்ற குற்றச் சாட்டுக்காக கைது செய்யப்பட்ட ஐவர் குற்றத்தை ஒப்பு கொண்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் கட்டத்தவறின் 2 மாதகால சாதாரண சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. வகாப்தீன்.

கைது செய்யப்பட்ட இந்தக் குற்றவாளிகள் அனைவரும் கடந்த வெசாக் காலப்பகுதிகளின் போது கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களத்தால் நடத்தப்பட அதிரடிச் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டிருந்தார்கள்.

சிலர் நேற்று மன்றிற்கு சமூகமளிக்காததையடுத்து அவர்களுக்கான தவணைகள் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (ற-21)

# வேள்வியால் விவாதம்

### யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 8

ஆலயங்களில் நடத்தப்படும் வேள்வி தொடர்பில், கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

ஆலய வேள்விகளின் போது பாதுகாப்புக்குப் பொலிஸாரை அழைக்க வேண்டும் என்று தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார் கேட்டுக் கொண்டார். ஆயினும் வேள்வி நடைபெறும் பகுதியில் அமைதியீனம் ஏற்பட்டால் மாத்திரமே பொலிஸார் வருவார்கள் என்றுவடக்குமாகாணசிரேஷ்டபிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இடம்பெற்ற கூட்டத்தில் ஆலயங்களில்வேள்விகள்நடத்தப்படும்பொழுது, பொலிஸார் பாதுகாப்புக்கு வரவேண்டும் என்று தெல்லிப்பழை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார், பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக் கொண்டார். நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். தெல்லிப்பழைப் பொலிஸார் இதற்கு ஒத்துழைக்கின்றனர் என்றும், இளவாலைப் பொலிஸார் இந்த விடயத்தில் ஒத்துழைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தச் சமயம் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், நீதிமன்றத்தால் அவ்வாறான எந்தத் தீர்ப்பும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். அத்துடன் உரிய அனுமதியைப் பெற்று வேள்வியை நடத்த நீதிமன்றம் அனுமதித்துள்ளது. அதனை மேற்பார்வை செய்வது பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கடமை. அதன்ன அவர்கள் செய்யாமல் விட்டு, பொலிஸார் மீதோ ஏனைய தரப்பினர் மீதோ குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை. மேலும், வேள்வியின் போது அமைதியீனம் ஏற்பட்டால் மாத்திரம் பொலிஸார் வரலாம் – தலையீடு செய்யலாம் – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்துப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிடுகையில், வேள்வி என்பதும் மிருகங்களைப் பலியிடல் என்பதும் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையாகும். மேற்கத்தேய நாடுகளில், மிருகங்கள் கொல்லப்படுவதற்கு எதிராக கோஷம் எழுப்புகின்றனர். அவ்வாறானவர்கள் இங்கும் சத்தம் போடுகின்றனர்.

நீதிமன்றம் எந்வொரு சந்தர்ப்பத்திலும் வேள்விகளை நிறுத்த உத்தரவிடவில்லை. இதனை எந்தச் சட்டத்தரணிகள் ஊடாகவும் நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும் பொலிஸார், குறித்த வேள்வியின் போது அமைதியீனம் ஏற்பட்டால் மாத்திரமே தலையீடு செய்வார்கள் – என்று அவர் குறிப்பிட்டார். (ற-5)

# மரக்கறி விலைகள் சடுதியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை திடீரென சடுதியாக அதிகரித்துள்ளது. தற்போது ஆலயங்களின் மஹோற்சவங்கள் ஆரம்பமான நிலையிலும் மற்றும் சுப காரியங்கள்நடைபெறும்காலப்பகுதியாகையாலும் மரக்கறி பாவனை அதிகரித்துள்ளது. இதன் காரணத்தால் சந்தைகளில் மரக்கறி வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்படுவதோடு, அவை சடுதியாக விற்றுத் தீர்ந்தும் விடுகின் றன.

கடந்த வாரத்தில் மரக்கறி வகைகளின் விலை சற்று வீழ்ச்சியடைந்து காணப்பட்டதோடு இந்த வாரத்தில் அவற்றின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த மர்க்கறி வகைகள் தற்போது கிலோ 80 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன. அதனைவிட மழையும் சீரற்றுப் பெய்வதால் மரக்கறிப் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதோடு அவை நோய்த்தாக்கத்துக்கும் இலக்காவதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ற-17)

# டைனமற் உபயோகித்து மீன்பிடித்த மூன்று பேருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம், குருநகர், வெண்புரவிநகர் பகுதியில் டைனமட் வெடிவைத்து மீன்பிடித்த மீனவர்கள் மூவரையும் படகுகளையும் தலா 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆட்பிணையில் விடுவிக்க ஊர்காவற்றுறை நீதிவான் செல்வநாயகன் லெனின்குமார், நேற்றுமுன்தினம் அனுமதியளித்தார். மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மீன்களை நாரா நிறுவனத்துக்கு பரிசோதனைகளுக்காக அனுப்பி, அடுத்த வழக்குத் தவணையின் போது அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் கடந்த 2ஆம்திகதி நடத்திய சோதனை நடவடிக்கையில் டைனமட் வெடிவைத்துப் பிடித்த மீனவர்கள் மூவரையும் பிடித்ததுடன், அவர்கள் வசமிருந்த இரண்டு படகுகள், வள்ளம், வெடிவைத்து பிடிக்கப்பட்ட 80 கிலோகிராம் மீன் ஆகியவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர். நீரியல் வளத்துறை அதிகாரிகள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். (ற)

# பொலிஸ்மா அதிபர் அறிவித்தால் அசோகா ஹோட்டல் ஒப்படைப்பு

### சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் அமைந்துள்ள அசோகா ஹோட்டலை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு, பொலிஸ்மா அதிபர் எழுத்து மூலம்அறிவித்தால்,பொலிஸார் அங்கிருந்து வெளியேறுவர் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க தெரி வித்தார்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு, துரையப்பா விளையாட்டரங்குக்கு அண்மையில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில் தற்போது, பொலிஸ் நிலையம் அமைந்துள்ள அசோகா ஹோட்டலை சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்படும் நிலையில் ஏன், தற்போதைய பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று, ஊடகவியலாளர்களால் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், இன்னமும் 6 மாதங்களில் புதிய பொலிஸ் நிலையம் அமைக்கபட்டு விடும். அதன் பின்னர் பொலிஸார் அங்கு சென்று விடுவார்கள் என்று குறிப்பிட்டார். அப்படியானால் ஏன் சுவீகரிப்புக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்று மீண்டும் கேள்வி எழுப்பிய போது, அது முன்னர் மேற்கொள்ளப்பட்டதாக இருக்கலாம் என்று பதிலளித்தார். குறித்த கட்டடத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு பொலிஸ்மா அதிபர் எழுத்துமூலமாகஅறிவித்தால்அதனை வழங்குவோம் – என்றார்.

அதேவேளை, காணி சுவீகரிப்புக்கு காணி உரிமையாளர் எதிர்ப்புத் தெரிவித்தால் காணியை சுவீகரிக்க முடியாது என சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. (ற-5)

## கஞ்சா வைத்திருந்த இளைஞருக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மே 8

கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்தார் என்று தெரிவித்து கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவருக்கு 6 மாதம் கடூழியச் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம்.

ஆயிரத்து 360 மில்லிக்கிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்தார் என்று தெரிவித்து கிளிநொச்சிப் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளைஞர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

குறித்த இளைஞர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 10ஆயிரம் ரூபா தண்டப்பணமும் கட்டத்தவறின் 5மாத சாதாரண சிறைத்தண்டனையுடன் 6 மாத கடூழியச் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ. வகாபதீன். (ற-21)

# கிளி. மாவட்ட கூட்டுறவுப் பணியாளருக்கு முப்பது சதவீத சம்பள உயர்வு நடைமுறை

### மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், மே 8

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுப் பணியாளர்களுக்கான முப்பது வீத சம்பள உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இரண்டாம் படி சங்கங்கள் போன்றவற்றில் பணியாற்றும் சகல பணியாளர்களுக்கும் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக முப்பது வீத சம்பள உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களுக்கான மாதாந்தக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களும் இந்தப் புதிய சம்பள உயர்ச்சியை நடைமுறைப் படுத்தியதைப் பாராட்டியதுடன் சங்கங்களின் நிதி நிலைக்கேற்றவாறு பணியாளர்களின், சகல கொடுப்பனவுகளும் ஒழுங்கான முறையில் வழங்கப்படவேண்டும்.

அதனைவிட இந்த சம்பள உயர்ச்சிக்கான ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான நிலுவைகளும் பணியாளர்களுக்கு விரைவாக கிடைப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் கூட்டுறவு நிறுவனங்களில் நிரந்தர நியமனம் இன்றி தற்காலிகமாக டமையாற்றும் பணியாளர்களை விரைவாக நிரந்தரமாக்குவதற்கும் ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக சங்கங்களில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்த தற்காலிக பணியாளர்கள் சகலருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும். – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-17)

## மன்றில் தொலைபேசி சத்தம்: ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், மே 8

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகள்இடம்பெற்றபோது,தொலைபேசியை ஒலிக்க விட்ட 55 வயதுடைய நபருக்கு, ஆயிரம் ரூபா அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார். நேற்றுமுன்தினம் வழக்கு ஒன்றுக்காக வருகை தந்திருந்த நபரின் தொலைபேசி, அதிக சத்தமாக ஒலித்ததையடுத்து, அங்கு நின்ற பொலிஸார் அவரைக் கைது செய்து நீதிவானின் முன்னிலை யில் முற்படுத்தினர். எச்சரிக்கை செய்த நீதிவான்,அபராதம்விதித்துவிடுவித்தார்.(ற)

## போதையில் மகளை வெட்டி காயப்படுத்திய நபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 8
13 வயதுடைய தனது மகளையும் பக்கத்து வீட்டுப் பெண்ணையும் கத்தியால் வெட்டிக்காயப்படுத்திய கீரிமலையைச் சேர்ந்த நபரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.
அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். குறித்த நபர் மதுபோதையில் மகளையும் பக்கத்து வீட்டுப் பெண்ணையும் வெட்டிக் காயப்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.
இச்சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-103)

## சாவகச்சேரி நகர் தவிர்ந்த இடங்களுக்கு ஓட்டோ தரிப்பிட கட்டணம் குறைப்பு

தென்மராட்சி, மே 8
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாவகச்சேரி நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஓட்டோ தரிப்பிடக் கட்டணத்தை மாதாந்தம் 200 ரூபாவாகக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் சபை உறுப்பினர் ஞா.கிசோர் சாவகச்சேரி நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள ஓட்டோ தரிப்பிடங்களில் தரிக்கும் ஓட்டோக்களுக்கு மாதாந்தம் அறவிடப்படும் கட்டணமான ரூபா 300ஐ 200 ரூபாவாகக் குறைக்க வேண்டுமென்ற தனி நபர் பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார். சாவகச்சேரி நகர் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள ஓட்டோக்களுக்கு சேவை குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
இந்தப் பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினர். குறித்த பிரேரணை சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று சபையின் தலைவர் இதேவசகாயம்பிள்ளைதெரிவித்தார்.
கடந்த மாதம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஓட்டோ சாரதிகள் அனைவரும் வாகனம் செலுத்துவதற்குரிய சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டுமெனவும் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் தினமும் 10 ரூபா வீதம் வாடகைப் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு வைத்திருக்க வேண்டுமெனவும் ஓட்டோ சாரதிகளுக்கு வசதியாக மாதத்தில் ஒரு நாள் மாதாந்தத்திற்குரிய கட்டணத்தை செலுத்திப் பற்றுச்சீட்டு வைத்திருக்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டிருந்தது.(ற-9)

# ஒத்திவைக்கப்பட்ட பிரதேச சபைத் தேர்தல் வேட்பாளர்களோ சம்பளம் அற்ற விடுப்பில்

### கடும் நெருக்கடி நிலையில் உள்ளதாகக் கவலை
### சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 8**
**முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தல் என்பன ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால், தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுத் தாக்கல் செய்த 25க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் வேலைக்கு மீளச் செல்ல முடியாமல் தொடர்ந்தும் சம்பளமற்ற விடுப்பில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.**

தேர்தல் சட்டத்தில், தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் அரச உத்தியோகத்தர்கள் கடமைக்கு திரும்பலாமா இல்லையா என்பது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படாமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்றது. இந்த நிலையில் பிரதேச எல்லைகளுக்குட்பட்ட சில கிராமங்களில் முழுமையாக மீள் குடியமர்வு இடம்பெறாததைக் காரணம் காட்டி வழக்குத் தொடுக்கப்பட்டது.
அதனால் அந்த ஆண்டு ஜுலை மாதம் 23 வரை தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்னரும் வேட்பாளர்களான அரச ஊழியர்கள் பணிக்குத்திரும்ப முடியாத நிலைமை இருந்தது. இறுதியில் அமைச்சரவையில் விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதையடுத்து 2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஊழியர்கள் பணிக்குத் திரும்பினர். ஆனாலும் அரச ஊழியர்களுக்கு 2011ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையிலான காலப் பகுதிக்குரிய சம்பளமே வழங்கப்பட்டிருந்தது.
இதன் பின்னர் அரச ஊழியர்கள் தொடர்ந்து தமது பணிகளைச் செய்து வந்தனர். இந்த நிலையில் தேர்தல் திணைக்களத்தால் மீண்டும் இந்த இரண்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல், இந்த வருடம் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இதனால் வேட்பாளர்களான அரச உத்தியோகத்தர்களுக்கு, பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் சம்பளமற்ற விடுப்பு வழங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு வேட்பு மனுவின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதையடுத்து நீதிமன்றம் தேர்தலை மீண்டும் ஒத்திவைத்தது. இதனால் அரச உத்தியோகத்தர்களான வேட்பாளர்கள் மீண்டும் நிர்க்கதியான நிலைக்குள்ளாகியுள்ளனர். கடந்த மூன்று மாதங்களாக அவர்களுக்கான மாதாந்த சம்பளம் வழங்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் சம்பளமற்ற விடுப்பில் உள்ளமையே இதற்குக் காரணமாகும்.
இதேவேளை, தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டால், அதில் வேட்பாளர்களாகப் போட்டியிடும் அரச ஊழியர்கள் கடமைக்குத் திரும்ப முடியுமா இல்லையா என்பது தொடர்பில் தேர்தல் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பில் சட்ட விளக்கம் வழங்குமாறு கோரி, தேர்தல்கள் ஆணையாளர், சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் இன்னமும் பதில் வழங்கவில்லை.
அதனால் வேட்பாளர்களான அரச உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் நெருக்கடியான நிலைக்குள் உள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-5,102)

# தேர்தலின் பின்னர் பலாலி விமான நிலையம் இலங்கையின் பிரதான விமான நிலையமாகும்

### கிளிநொச்சியில் தெரிவித்தார்
### மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்

யாழ்ப்பாணம், மே 8
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையமும் இலங்கையின் பிரதான விமான நிலையமாக்கப்படும். அத்துடன் திருகோணமலைத்துறைமுகமும் திருத்தப்பட்டு இலங்கையின் சிறந்த பொருளாதார வலயமாக்கப்படும். - இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.
கிளிநொச்சி அறிவியல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் காரியாலய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
100 நாள் காலத்திலே பெருந்தொகையான மகிழ்ச்சிகரமான முக்கியத்துவத்தைக் கொண்டு வர முடியாத நிலைமையிலும் அந்தக் கால எல்லைக்குள் எங்கள் சமுதாயத்திற்கும் எங்கள் மக்களுக்கும் ஒரு விழிப்புணர்ச்சியைக் கொண்டு வந்திருக்கின்றோம்.
என்னுடைய அமைச்சின் கீழ் வடக்கு மாகாணத்தில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை உரியவர்களிடம் கையளித்திருக்கின்றோம். அதிலும் சில



பிரச்சினைகள் உள்ளன அதை ஏற்றுக்கொள்கின்றேன் அதையும் நாங்கள் தீர்ப்போம். சம்பூர் பகுதியில் ஆயிரம் ஏக்கரை மக்களிடம் கையளிப்பதற்கு முன்வந்திருக்கின்றோம். அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுவும் மிக விரைவாக மக்களுக்குக் கொடுக்கப்படும் என்பது உறுதி. ஓர் அமைச்சர் என்றரீதியில் நான் பேசவில்லை. நான் ஒரு தமிழன் என்ற ரீதியில் தான் பேசுகின்றேன். தமிழ் மக்களுக்கான முற்போக்கான அறிவை கொண்டு வருவது தான் எங்களுடைய அவா. அந்த வகையில் முக்கியமான பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான முதல் திட்டம், முதல்கண், முதல்கால் இதுவே. இதை வைத்து நாங்கள் வடமாகாணத்துக்கும் பொருளாதார ரீதியிலே பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழ்க்கை நடத்துவதற்கு வழிசமைத்துக் கொடுத்துள்ளோம்."- என்று தெரிவித்தார். (ற-21)

## கடைகள் தீயிடப்பட்ட வழக்கில் ஐவருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 8
கொடிகாமம் சந்தைப் பகுதியில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்கள் எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் ஐவருக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி நீதிமன்றம் அபராதம் விதித்தது.
கடந்த ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி இரவு கொடிகாமம் சந்தைப் பகுதியில் உள்ள மூன்று கடைத் தொகுதிகள் தீயிடப்பட்டன. அது தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டி ருந்தது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது ஐவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)

## கரைதுறைப்பற்றில் மைதானங்களுக்கு சுற்றுவேலி தேவை

முல்லைத்தீவு, மே 8
கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் ஆறு கிராமங்களில் உள்ள விளையாட்டு மைதானங்கள் செப்பனிடப்பட்டு சுற்றுவேலி அமைத்து புனரமைக்கப்பட வேண்டும் என்று கரைதுறைப்பற்று பிரதேசசபை 2015 இன் பொதுவான புள்ளி விவரத்திரட்டு தெரிவிக்கின்றது.
மைதானங்கள் செப்பனிடப்படாமலும் சுற்றுவேலிகள் அமைக்கப்படாமலும் இருப்பதாகவும் இவைகளை செப்பனிட்டு புனரமைக்க வேண்டுமெனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் தாய் சேய் பராமரிப்பு நிலையம் அழிவடைந்துள்ளமையால் தற்போது இயங்குவதில்லை எனவும் 148 பொதுக்கிணறுகள் மூலமும் 18 குழாய்க் கிணறுகள் மூலமும் குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்படுகிறது எனவும் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. (ற-500)

# தராசுகளில் விதிமுறை பேணாத 23 வியாபாரிகளுக்கு அபராதம்


யாழ்ப்பாணம், மே 8
பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பொருள்களை அளவிடும் தராசுகளில் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாத 23 பேருக்கு நீதிமன்றம் ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.
மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய பகுதிகளிலுள்ள கடைகள், சந்தைகள் என்பனவற்றில் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்ததாக யாழ்.மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.ராஜேந்திரன் தெரிவித்தார்.
"குறித்த பகுதிகளில் சோதனை மேற்கொண்டபோது 28 நிலையங்களில் உரிய நடைமுறைகள் இருக்கவில்லை. பரிசோனையின்போது முத்திரை பதிக்கப்படாத தராசுகள் வைத்திருந்தமை, மாவட்டச் செயலகத்தால் அனுமதிக்கப்படாத தராசுகள் வைத்திருந்தமை, முன்னைய வருட பதிவைப் புதுப்பிக்காது தராசுகளை பயன்படுத்தி வந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் 28 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் நேற்று 23 பேருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தபோது அவர்கள் தம்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்கு ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய 5 பேருக்கும் வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது."- என்று அவர் மேலும் தெரிவித்தார்.
இது தவிர உடுவில் பிரதேச சபையின் உப அலுவலகமான மருதனார் மடத்திலுள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமையும் தராசு முத்திரை பதித்தல் இடம்பெற்றது என்றும், எதிர்வரும் 11, 12, 14, 15 ஆகிய திகதிகளில் சுன்னாகம் பிரதேச சபை அலுவலகத்தில் தராசு முத்திரையிடல் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

# பதவி விலகுகின்றார் இராதாகிருஷ்ணன் ?

## கல்வி அமைச்சின் செயலாளரின் அசமந்தப் போக்கே காரணமாம்

கொழும்பு, மே 8

கல்வி அமைச்சின் செயலாளரின் அசமந்தப்போக்குக் காரணமாக கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகவுள்ளதாக அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்ததாவது, பெருந்தோட்ட ஆசிரியர் உதவியாளர்கள் நியமனம் தொடர்பாகக் கல்வி அமைச்சின் செயலாளர் அக்கறையின்மையோடு செயற்பட்டுள்ளதுடன் ஆசிரியர் உதவியாளர்களுக்கான நியமனங்கள், குறித்த திகதியில் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு பலமுறை அறிவித்த போதும் அவர் அசமந்தப்போக்குடன் செயற்பட்டு வருகின்றார்.

இந்த ஆசிரியர் உதவியாளர் நியமனம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் பேச்சொன்றும் இடம்பெற்றது. இந்தப் பேச்சு திருப்தியற்ற நிலையில் முடிவுற்றதால், மீண்டுமொரு பேச்சு நேற்று இடம் பெறவிருந்தது.

பேச்சின்போது பெருந்தோட்ட உதவி ஆசிரியர் நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப் படாவிடின் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் பதவி விலக உள்ளதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை, கல்வி அமைச்சின் செயலாளர் பல்வேறு விடயங்களில்அசமந்தப் போக்குடனும்பொறுப் பற்றும் செயற்பட்டு வருகின்றார். இவர் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கருத்துக்களுக்குச் செவிமடுக்காமல் தன்னிச்சையுடன் செயற்பட்டு வருவதால், அது புதிய அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் அமைவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (த)

# லலித் வீரதுங்க உள்ளிட்ட 9 பேருக்கு அழைப்பாணை

கொழும்பு, மே 8

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகக் காவியுடைக்கான துணிகளை விநியோகித்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 9 பேருக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்ட ஒன்பது பேருக்கே அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற பிரசாரத்தின்போது, பொதுச் சொத்துக்களை நாசம் செய்தமைக்காக இந்த ஒன்பது பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த அடிப்படை உரிமை மீறல் மனு பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப் பட்டபோதே நீதிமன்றம், அந்த ஒன்பது பேரையும்எதிர்வரும்ஜூலை மாதம் 08 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளது. இந்த மனு, உயர் நீதிமன்றப் பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன், ரோஹினி மாரசிங்க மற்றும் பியசாத் டெப் ஆகிய மூன்று நீதியசரசர்கள் கொண்ட குழுமத்தினால் பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. (த)

# குழந்தையை விற்க முயன்ற பாம்புப் பெண் பிணையில்

கொழும்பு, மே 8

தனது 10 மாதக் குழந்தையை, விற்பனை செய்ய முற்பட்ட பாம்புப் பெண் நிரோஷா விமலரத்ன (வயது 23) மற்றும் அவரது கணவர் லக்மால் அபேசிங்க (வயது 24) ஆகிய இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளில் செல்ல, கெக்கிராவ நீதிவான் புத்தினி அபேசிங்க உத்தரவிட்டார்.

கொள்ளுப்பிட்டி களியாட்ட விடுதியில் இரவு நேர நடனப் பெண்ணாகப் பணியாற்றியவரான 'பாம்புப் பெண்' என்றழைக்கப்படும் நிரோஷா, கடந்த ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் திகதி ஆண்குழந்தையொன்றைப் பெற்றெடுத்தார்.

இந்தக் குழந்தையை அவரும் அவரது கணவரும் இணைந்து விற்க முற்பட்டார்கள் என்ற முறைப்பாட்டின் பிரகாரம், கெக்கிராவப் பொலிஸின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்பட்டு வந்தன.

இருப்பினும், தாங்கள் குழந்தையை விற்க முற்படவில்லை என்றும் குழந்தையை பார்த்துக் கொள்வதற்காகவே உறவுக்காரப் பெண்ணிடம் கையளித்திருந்ததாகவும் அவ்விருவரும் பொலிஸாரிடமும் நீதிமன்றத்திடமும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே, அவ்விருவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அனுமதி வழங்கியது. (த)

# கச்சதீவை மீளப்பெறுக

## இந்திய மத்திய அரசிடம் தமிழக எம்.பி.க்கள் கோரிக்கை

சென்னை, மே 8

கச்சதீவை மீளப்பெற இந்திய மத்திய அரசு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் எனத் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதற்காக இலங்கை அரசுடன், இந்திய மத்திய அரசு கலந்துரையாடிக் கச்சதீவை மீளப்பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், திரா விட முன்னேற்ற கழகம் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய வற்றின் நாடாளுமன்ற உறுப்பினர் களே இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டமையானது அரசியல் சாசன அடிப்படையில் மேற்கொள் ளப்படவில்லை எனவும், இது இந்தியாவின் நன்மைக்காகவும் வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே கச்சதீவை இலங்கைக்கு வழங்கியமையானது சட்டவிரோதமானது என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

# புதியதில் முடியாவிடின் பழையதிலாவது தேர்தல்

## மாதுளுவாவே சோபித தேரர் கோரிக்கை

கொழும்பு, மே 8

20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக புதிய முறையில் தேர்தல் நடத்த முடியாவிட்டால் பழைய முறையிலேனும் தேர்தல் நடத்தப் படவேண்டுமென நீதியான சமூகத்துக்கான தேசிய அமைப்பின் அழைப்பாளர் மாதுளுவாவே சோபித தேரர் கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலின்போது 20 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்துவது குறித்து உறுதியளிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் 20ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது.

எதிர்காலத்தில் அனைத்துத் தேர்தல்களும் 20ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்.

நாட்டு மக்களின் நன்மைக்காக 19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதனைப் போன்று, 20ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி எந்த நேரத்திலும் நாடாளுமன்றைக் கலைத்துப் புதிய நாடாளுமன்றம் ஒன்றை நிறுவ முடியும்– என்றார். (த)

# வெலே சுதாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

சர்வதேச போதைப்பொருள் வர்த்தகரான சமந்த குமார என்னும் வெலே சுதாவுக்கு எதிரான வழக்கு இம் மாதம் 18ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஐராங்கனி பெரேராவினால் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், வெலே சுதாவுக்கு தொடர்ந்து விளக்கமறியல் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

வெலே சுதாவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் இடையில் போதைப் பொருள் கடத்தலில் சம்பந்தம் இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

# சு.க பிளவடைந்தால் நன்மை ஐ.தே.கவுக்கே

## *ஹெல உறுமய அமைப்பாளர் கூறுகிறார்*

கொழும்பு, மே 8

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைந்தால் அதன் நன்மைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கிடைக்கும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மஹிந்த தரப்பு, மைத்திரி தரப்பு எனப் பிளவடைந்து சென்றால் அதன் நன்மைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கும். தற்போதைய ஜனாதிபதிக்கும், முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள் முரண்பாடுகளை தீர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பேச்சுக்களினால் தேசிய அரசியலில் எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. இதனால் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் இடையிலான சந்திப்பை ஜாதிக ஹெல உறுமய, உட்கட்சி முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் முயற்சியாகவே கருதுகின்றது – என்றார். (த)

# முஸ்லிம் கட்சிகள்- மஹிந்த சந்திப்பானது கேலிக்குரியது

## முஜிபூர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

முஸ்லிம் சமூகத்தின் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப் பட்ட போது கண்டுக்கொள்ளாத முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது முஸ்லிம் தலைமைகளை சந்திக்கத் திட்டமிட்டுள்ளமையானது கேலிக்குரியது எனத் தெரிவித்துள்ளார் மேல் மாகாண சபை உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளருமான முஜிபூர் ரஹ்மான்.

மத்திய கொழும்பு ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களுக்கு அதிக அநியாயம் இழைக்கப்பட்டது ஒல்லாந்தர் காலத்திலாகும். அவர்கள் நாட்டைக் கைப்பற்றிய போது கொழும்பிலுள்ள முஸ்லிம்களை விரட்டினர். அத்துடன் வர்த்தகத்தைச் சீர்க்குலைத்தனர். இந்த இருண்ட யுகத்திற்கு பின்னர் மஹிந்தவின் ஆட்சிக்காலத்திலேயே அதிகமான அட்டூழியங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக ஏவிவிடப் பட்டன.

குறிப்பாக 30 இற்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கு எதிராக பெளத்த பேரினவாதிகள் போர்க் கொடி தூக்கினர். தம்புள்ளை, கிராண்பாஸ், ஜெய்லானி பள்ளிவாசல்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் பெஸன் பக், நோலிமிட் உள்ளிட்ட முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் முஸ்லிம்களின் வியாபார நிலையங்களுக்கு எதிராகப் பல வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

பல அராஜகங்களைப் பொதுபல சேனா, சிங்கள ராவய, ராவண பலய உள்ளிட்ட பெளத்த பேரினவாத அமைப்புகள் முன்னெடுத்த போது நாட்டின் சாதாரன சட்டங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மெளனம் காத்தார். அந்த சர்வதிகார ஆட்சிக்கு மக்கள் முடிவு கட்டினர்.

இந்த நிலையில் மீண்டும் அரசியலுக்கு பிரவேசிக்க அவர் முயற்சி செய்து வருகிறார். அவருடைய காலத்தில் பல வரபிரசாதங்களுடன் செயற்பட்டு வந்த சில ம்ஸ்லிம் தலைமைகள் இன்றும் மஹிந்தவின் பின்னால் இருந்து செயற்படுகின்றனர். இது முஸ்லிம் சமூகத்தை காட்டிக்கொடுக்கும் செயற்பாடாகும். இலங்கை முஸ்லிம்கள் மஹிந்த ஆட்சியிலிருந்து பல பாடங்களைப் படித்து விட்டனர். அவரின் மீள் வருகை முஸ்லிம் சமூகத்திற்கே பேராபத்தாகும். அவரின் மீள்வருகையை தோற்கடிக்க எமது சமூகம் ஒன்றுப்படுவார்கள்– என்றார். (த-10)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** எந்த ஒரு காரியமும் மந்தமாக நடக்கும். எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் வராவிட்டாலும், சுமாராக இருக்கும்.

**இடபம்:** நீண்டநாளைய எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு தேவை, உடல்நலக் குறைவு ஏற்படலாம்.

**மிதுனம்:** குடும்பத்தாரின் தேவைகளைக் காலம் அறிந்து நிறைவேற்ற முடியாமல் போகும். அதனால், குடும்பத்தில் குழப்பங்களும் ஒற்றுமைக் குறையும் ஏற்படும்.

**கடகம்:** எதிலும் ஈடுபடாமல் ஒதுங்கிச் சென்றாலும் மற்றவர்கள் விடாமல் வம்புக்கு இழுப்பார்கள். எனவே கவனமாக இருப்பது நல்லது. நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த சில காரியங்கள் நடந்து முடியும்.

**சிங்கம்:** உடல் நலத்தில் கவனம் தேவை. புதிதாகத் தொழில் செய்ய நினைப்பவர்கள் கவனமாகச் செயலாற்றவேண்டும். தேவையில்லாத இடமாற்றம் வரும். மனக் குழப்பங்கள் நீங்கும்.

**கன்னி:** நற்பலன்கள் நடக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரம் மேன்மையடையும். தொழில் சம்பந்தமான வெளிநாட்டு பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். சிலருக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** ஞானிகள், சாதுக்களின் தரிசனமும் ஆசியும் கிடைக்கும். பூர்வீகச் சொத்தினால் ஆதாயமும் மேன்மையும் கிடைக்கும். அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு வேலைப்பளு குறையும்.

**விருச்சிகம்:** அலுவலகத்தில் சுமுகமான நிலை ஏற்படும். உடன் வேலை செய்பவர்களால் உங்களுக்கு அனுகூலம் கிடைக்கும். நல்ல கூட்டாளி கிடைப்பார். சிலர் புதிய வீடுகட்டி கிரகப்பிரவேசம் செய்வார்கள்.

**தனுசு:** நல்ல வேலை வாய்ப்புக் கிடைக்கும். பெரியோர்கள் ஞானிகளின் தரிசனம் கிடைக்கும். உங்களுடன் பழகும் நண்பர்களுக்கு தக்க சமயத்தில் உதவிகள் பல செய்வீர்கள். நண்பர்களின் துயரங்களைப் போக்குவீர்கள்.

**மகரம்:** பல பொறுப்பான பதவிகளும் உங்களுக்குக் கிடைக்கும். உங்களுக்கு அதிகாரமான பதவி அந்தஸ்து முதலியவை உண்டாகும். உங்களுடைய முயற்சி இல்லாமலே வருமானம் உங்களைத் தேடி வரும்.

**கும்பம்:** இதுவரை குடத்துக்குள் இட்ட விளக்காக உங்கள் திறமைகள் வெளி உலகுக்குத் தெரியாமல் இருந்த நிலை மாறி, இனிமேல் குன்றின் மேலிட்ட விளக்காக உங்கள் திறமைகள் வெளி உலகுக்குத் தெரிய வரும்.

**மீனம்:** தற்போது உங்களுக்கு எதிராக உங்கள் எதிரிகளால் செய்யப்படும் காரியங்கள் கூட உங்களுக்குச் சாதகமாக மாறி உங்களை மேம்படுத்தும். அலைச்சல் அதிகரிக்கும்.



## குழந்தை மம்மி கண்டுபிடிப்பு

ரஷ்யாவில் கைவிடப்பட்ட நோயியல் ஆய்வகத்தில் மம்மி குழந்தை கொண்ட ஜாடிகள், எலும்புகள் மற்றும் மனித உறுப்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதனை யார் வைத்திருந்தார்கள் என்பது கண்டறியப்படவில்லை.

இவற்றின் உரிமையாளர்கள் யார் இவை எவ்வாறு ரஷ்யாவுக்கு வந்தன என் பது தொடர்பில், ரஷ்ய நகரம் முழு வதும் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## ஹன்சிகாவின் இதயம் நொறுங்கி விட்டதாம்



நடிகர் சல்மான்கானுக்கு தண்டனை விதிக்கப்பட்டமை குறித்து அறிந்ததுமே இதயமே நொறுங்கியது போல உணர்கிறேன் என்று நடிகை ஹன்சிகா மோத்வானி கூறியுள்ளார்.

நடிகர் சல்மான்கானுக்கு மும்பை நீதி மன்றத்தினால் நேற்று முன்தினம் 5 வருட சிறைத்தண் டனை விதிக்கப்பட்டது. இதனைய டுத்து பொலிவூட்டைச் சேர்ந்த பிரப லங்கள் அது குறித்துக் கருத்துத் தெரிவித்து வருகின் றனர்.

பல நடிகர், நடிகையர் சல்மான்கானின் வீட்டுக்குச் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து வருகின்றனர். அதேபோல டுவிட்டரிலும் பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

நடிகை ஹன்சிகா தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், 'இதயமே நொறுங்கியது போல உள்ளது. பேச வார்த்தை இல்லை. சல்மான் கான் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன்' என்று கூறியுள்ளார்.

## மாற்றுத்திறனாளிகளின் சாதனை



சீனாவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி நண்பர்கள் இருவர், 13 வருடங்களில் 12 ஆயிரம் மரங்களை நட்டு மிகப்பெரிய சாதனையை ஏற்படுத்தி உள்ளனர்.

ஜியா வெங்கி பார்வையை இழந்தவர். இவரது நண்பர் ஜியா ஹாயாக்சியா 2 கைகளையும் இழந்தவர். மாற்றுத் திறனாளிகள் என்ற காரணத்தால் இவர்கள் இருவருக்கும் வேலை கொடுக்க எவரும் முன்வரவில்லை.

இயற்கையின் மீது அதிக ஈடுபாடு கொண்ட இந்த மாற்றுத்திறனாளி நண்பர்கள், மரங்களை நட்டு அவற்றைப் பராமரிப்பதைத் தங்களது அன்றாட வேலையாக மாற்றிக்கொண்டனர். கைகளை இழந்தவர், பார்வையற்ற நண்பரைப் பல இடங்களுக்கும் அழைத்துச்சென்று மரங்களை நட்டார். இவர்கள் கடந்த 13 வருடத்தில் சுமார் 12 ஆயிரம் மரங்களை நட்டு அவற்றைப் பராமரித்தும் வருகின்றனர்.

## மணிரத்னம் மருத்துவமனையில்

பிரபல திரைப்பட இயக்குநர் மணிரத்னம் நெஞ்சு வலி காரணமாக நேற்று முன்தினம் அதிகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 59 வயதாகும் மணிரத்னத்துக்கு லேசான மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக அவர் தனியார் மருத் துவமனையில் சிகிச்சைக்காகசேர்க்கப்பட்டார்.

சம்பவம் குறித்து மருத்துவமனை வட்டாரங்கள் கூறுகையில்; மணிரத்னத்துக்கு ஏற்பட்டது லேசான நெஞ்சுலிதான் என்றும், சிகிச்சைக்குப் பிறகு அவர் உடல் நிலை சீராக உள்ளதாகவும் தெரிவித்தன. இப்போது ஓய்வெடுத்து வருகிறார் மணிரத்னம்.

மணிரத்னத்துக்கு மாரடைப்பு ஏற்படுவது இது இரண்டாவது முறையாகும். சில ஆண்டுகளுக்கு முன்



அவருக்கு முதலாவது முறையாக மாரடைப்பு ஏற்பட்டது. அதன் பிறகு தான் அவர் குரு, ராவ ணன், கடல் போன்ற படங்களை இயக்கியிருந்தார். ஓ காதல் கண் மணி அவர் இயக்கிய கடைசிப்பட மாகும்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்....

மூன்று பேர் தாங்கள் எவ்வளவு பெரிய செல்வந்தர்கள் என்று ஒருவருக்கொருவர் பெருமையடித்துக் கொண்டே சென்றனர்.

வழியில் ஒரு வைரம் கிடந்தது. முதலாமவர் அதைக் காட்டி, இது என்னுடையது அல்ல என்றார்.

இரண்டாமவரும் அப்படியே சொன்னார்.

மூன்றாமவர் அந்த வைரத்தைக் கையில் எடுத்து இது என்னுடையதாகத்தான் இருக்கும். இந்த வழியாக வரும் பொழுது என் சட்டைப் பொத்தானைத் தொலைத்து விட்டேன் – என்றார்.

## தமிழ்த்தினப் போட்டிகள்

தென்மராட்சி, மே 8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய நிலை தமிழ் மொழித் தினப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக்கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

நாளை பிரிவு 11 இற்கான வாசிப்பு, பிரிவு 11 தொடக்கம் பிரிவு 5 வரையான பேச்சு, பாவோதல், வில்லுப்பாட்டு, நாட்டார் பாடல் ஆகியவையும், நாளை மறுதினம் பிரிவு ஒன்றுக்கான வாசிப்பு, ஆக்கத் திறன், பேச்சு, பாவோதல், நடனம் (தனி), நடனம் (குழு), நாட்டிய நாடகம், மேடை நாடகம், தமிழ் அறிவு விவாதம் ஆகியவையும் இடம்பெறும் என்று அறிவித்துள்ளார்.

போட்டிகள் காலை 8 மணிக்கே ஆரம்பமாவதால் குறித்த நேரத்துக்கு முன்னர் மாணவர்களை அழைத்து வருமாறும் அறிவித்துள்ளார். (வ-9)

# கிழக்கு மாகாணசபை நடத்தும் மாபெரும் நடமாடும் சேவை

மட்டக்களப்பு, மே 8

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒரே நாளில், ஒரே இடத்தில் தீர்ப்பதற்கு ஏதுவாக மட்டக் களப்பு மாநகர சபை மண்டபத்தில், எதிர் வரும் 14 ஆம் திகதி மாபெரும் நடமாடும் சேவை இடம்பெற வுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண சகல அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர், சகல திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் அனை வரையும் ஒன்றிணைந்து இந்த நடமாடும் சேவை நடை பெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் சகல பிரச்சினைக ளுக்கும் முடிந்தளவு குறித்த தினத்தன்றே உடனடித் தீர்வுகள் பெற்றுக் கொடுப்படும் என்று கிழக்கு மாகாணசபை முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

குறித்த நடமாடும் சேவையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் காணி, விவசாயம், மீன்பிடி, கால்நடை, வேலைவாய்ப்பு, பாதைகள், வடிகால்கள், கட்டடங்கள், சமுர்த்தி, பட்டதாரிகள், முதியோர், சிறுவர், மாணவர்கள், ஆசிரியர்கள், மாதர் சங்கங்கள் மற்றும் கிராமிய சங்கங்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரின் பிரச்சினைக ளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு வரலாற்று நிகழ்வாக இது இடம்பெற இருக்கிறது.

இந்தநிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியதுறை அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர், வீதி அபிவிருத்தி காணி அமைச்சர் ஆரியபதி கலபதி, கல்வி விளையாட்டுத்துறை அமைச்சர் தண்டாயுதபாணி, விவசாய கால்நடைகள் அமைச்சர் துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண சபை தவிசாளர் சந்திரதாச கலபதி ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

மேலும், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட அரச அதிபர் சரோஜினிதேவி சாள்ஸ், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## 'களனி'ச.சமூக நிலையத்துக்கு புதனன்று நடப்பட்டது அடிக்கல்



யாழ்ப்பாணம், மே 8

வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் 15000 கிராமங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தருமபுரம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்படவுள்ள 'களனி' சனசமூக நிலையத்துக்கான அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் புதன் கிழமை நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொண்டதுடன் நிகழ்வில் பொருளாதார பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சனசமூக நிலையத்துக்குத் தேவையான நூல்களை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக் கீட்டின் கீழ் வழங்குவதாகவும் உறுதியளித்தார் விஜயகலாமகேஸ்வரன். (வ-10)

## முப்பது வீத சம்பள உயர்ச்சி நீர்வேலி சங்க பணியாளருக்கும்

யாழ்ப்பாணம்,மே 8

நீர்வேலி, அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தமது பணியாளர்களுக்கான முப்பது வீத சம்பள உயர்வை நடைமுறைப்படுத்தியுள்ளன.

கடந்தசித்திரைப் புத்தாண்டில் இந்த சம்பள உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு இந்தச் சம்பள உயர்ச்சிக்கான நிலுவையும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாதாந்தம் சங்கம் வியாபார நடவடிக்கையில் கூடிய இலாபம் அடையும் பட்சத்தில் வாழ்க்கைச் செலவுப்படி தொடர்ந்தும் பணியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது இந்தச் சங்கங்கள் தமது கிளை நிலையங்கள் ஊடாக வியாபார நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கவும் நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளன.

அத்துடன் சங்கங்களின் கோப்சிற்றிகளில் தற்போது வியாபார நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

## சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளராக சீதா ரஞ்சனி



யாழ்ப்பாணம், மே 8

சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளராக சுயாதீன ஊடகவியலாளர் சீதா ரஞ்சனி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளரர்கச் செயற்பட்ட சுனில் ஜயசிறி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பிரிவு பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதனை அடுத்து சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் பதவி யில் இருந்து கடந்த 17ஆம் திகதி அவர் விலகிக் கொண்டார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சீதா ரஞ்சனி நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

## உணவுப்பாதுகாப்பு மாதத்தையொட்டி மீளாய்வு

தென்மராட்சி, மே 8

சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட் பட்ட அனைத்து உணவு கையாளும் நிலையங்கள் குறித்து பொது சுகாதார பரிசோதகர்களால் தரப்படுத்தல் தொடர்பான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீளாய்வின்போது உணவு கையாளும் நிலையங்களுக்கான தரப்படுத்தும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)

## ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 8

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீநீலாயதாக்ஷி அம்பிகா சமேத ஸ்ரீ காயா ரோஹண சுவாமிகள் ஆலய வருடாந்த திருவிழா கடந்த மாதம் 30ஆம் திகதி வியாழக் கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது.

19 தினங்கள் உற்சவம் இடம் பெறும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருமஞ்ச உற்சவமும், எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை கைலாச வாகன உற்சவமும் நடைபெறும். எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (வ-7)

## சிதம்பர நடராசர் அபிஷேகம்

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயில் வருடாந்த சித்திரை மாத சிதம்பர நடராசர் அபிஷேகம் ஆயிரத்தி எட்டு சங்காபிஷேகத்துடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறும். சங்காபி ஷேகத்தைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (வ-7)

**Fully Separated Portion Offered on rent**

A Separate portion in Nallur area available for rent. One room with attached tileds bath a kitchen a big parlour and separate entrance available in this portion.
Small respected families with 2-3 members of Retired persons and Government servants without kids 5 years preferred.
**Advance: Rs.250,000/= Rent: Rs.10000/= monthly**
Apply with fill details of family members.
**Ad.No. 5058** (59554)(4.3.7)
**C/o Uthayan Publication Pvt. Ltd**
**361, Kasthuriyar Road, Jaffna.**

**FOR SALE**

Fully Reconditioned Scooty Pep for Sale
Green Colour MG Series
Inspection time: 11.00 a.m. - 12 p.m.
today and tomorrow only
517, Wyman Road Jaffna.
Expected Offer: Rs.93,000 onwards.
(59546) (45.3.7)

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய் மூன்று கோயில் அருகில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 657 0596
(59545)(4.3.7)

**பெண்பணியாளர் தேவை**

01. சிட்டை ஆய்வாளர்
02. இருப்பு பதியுநர்
03. கணினி தரவுப் பதியுநர்
தகைமை: A/L Com 3 பாடங்களில் சித்தி, கணினியறிவு.
(59543) (4.3.7)
தொடர்பு: 021 222 2120
(8.30 AM தொடக்கம் 6.30 PM வரை)

**மொழிபெயர்ப்பாளர் தேவை**

கொழும்பில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஊடக நிறுவனமொன்றுக்கு பகுதிநேர ஆங்கிலம், தமிழ் மொழிபெயர்ப்பாளர் தேவை.
தொடர்பு: 077 010 2377
Email: (59547)(4.3.7)
shree.ccsabeo@gmail.com

**மணமகள் தேவை**

யாழ்.இந்து 1980, 1 இல் செவ்வாய், மூல நட்சத்திரம், 63½ கிரகபாவம், அரச எழுதுவினைஞர் (Clerk), HNDA, நற்பழக்கமுடைய மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 077 955 8170 (பெற்றோர்)
(59492)(4.3.7)

**இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்**

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.
இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்வீதந்தினர் வீதி, G.G.Hotel, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 595 0463 (59478) (45.3.7)

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கஸ்தூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக, நாவலர், யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)



## 3 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



அமரர் பொன்னையா கனேசன்
(ஸ்தாபகர் – கனேசன் ஸ்ரோர்ஸ் மட்டுவில் தெற்கு)

மண்ணில் 07.01.1947

விண்ணில் 10.05.2012

திதி: அபரபக்க பஞ்சமி

ஆண்டவன் திருவடிக்கீழ் நீங்கள் அடைக்கலம் புகுந்து இன்று
ஆண்டுகள் மூன்று ஆனதப்பா! ஆண்டுகள் மூன்று மட்டுமல்ல
ஆயிரம் தான் கடந்தாலும் ஆறுமோ எங்கள் துயர்?
உங்கள் நினைவுடன் நாம் என்றென்றும் வாழ்கின்றோம்
இறைவனின் திருவடிக் கீழே நிறைவுடனே வாழ்ந்திருப்பீர்கள்.

வாகையடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### கந்தையா பிறேம்நாத்

தோற்றம்
11 . 11 . 1982

மறைவு
08 . 05 . 2007



கண்ணிமைக்கும் கணப்பொழுதினை விட
கடுகதியாய் கரைந்ததுவோ எட்டு வருடங்கள்
மலரும் நினைவுகள் தேக்கி வைத்து
எவரும் காணாத உலகம் சென்று விட்டாய் எம் அன்புச் செல்வமே
தவிக்கின்றோம் உன் நினைவால்
உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிநிற்கின்றோம்,

வரணி இயற்றாலை,
வரணி.

தந்தை கந்தையா, தாய் ஞானேஸ்வரி,
தம்பி நரேஸ்குமார் (லண்டன்) மற்றும் உறவினர்கள்.



## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி ஆதிபுவனேஸ்வரி
செல்வராசா
(ஓய்வுநிலை ஆசிரியை)

பிறப்பு 08.11.1938

இறப்பு 08.05.2009

ஆறாம் ஆண்டு நினைவு நாளான இன்று
கண்ணீர் சிந்தி பூச் சொரிந்து
வணங்குகின்றோம் அம்மா உங்களை
வேறு என்ன தான் செய்ய முடியும்
எங்களால் அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(59517)(4.3.7) குடும்பத்தினர்.
கோப்பாய் மத்தி, கோப்பாய்.



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
செல்வரத்தினம்
சிவபாலன்
(முன்னாள் கொத்தணி அதிபர் - உரும்பிராய் இந்துக்கல்லூரி)

தோற்றம்
24.09.1931

மறைவு
30.04.2013

திதி : 08.05.2015

எம்முடன் கலந்து எம்மை
வழிநடத்திக் கொண்டிருக்கும்
உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

"சிவாலயம்,"
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.




வவுனியா நொச்சி மோட்டை விவேகானந்தா சனசமூக நிலை யத்துக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்நடும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது நொச்சிமோட்டை கிராம அலுவலர் பா.ஜெய பாலன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வா.ஜிபாயுனைற் ஆகியோர் அடிக்கல் நட்டனர். (வ–402)

# வடக்கு அ. உதவியாளர் ஒன்றிய போசகராக முன்னாள் அரச அதிபர்

யாழ்ப்பாணம், மே 8

பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்கும் திட்டத்தின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டு அரச சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உதவியாளர்கள், தாம் தொழில் நிமித்தம் எதிர்கொள்ளும் பலதரப்பட்ட சிக்கல்கள் தொடர்பாக மாவட்ட ரீதி யாக கலந்துரையாடல்களை மேற் கொண்டு, தமது மாவட்ட ரீதியான தொழில் சங்கத்தை ஏற்கனவே ஆரம் பித்திருந்தனர்.

இதனை மேலும் விஸ்தரிக்கும் முக மாக வடமாகாணம் தழுவிய வட மாகாண அபிவிருத்தி உதவியாளர்கள் ஒன்றியம் எனும் அமைப்பை ஆரம்பித்துள்ளனர். குறித்த ஒன்றியத்தின் போசகரும், ஆலோசகருமாக இந்தத்துறை யில் நன்கு பரிச்சயம் பெற்ற வரும், இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட ஓய்வு நிலை அதிகாரியும், யாழ். மற் றும் வவுனியா மாவட்ட முன் னாள் அரச அதிபராகக் கடமையாற்றி, பின்னர் வடக்கு கிழக்கு மாகாண வீட மைப்பு புனரமைப்புத் திட்டப் பணிப்பா ளராகவும், பின்னர் வடக்கு மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செய லாளராகவும் கடமையாற்றிய செல்லையா பத்மநாதன் அபிவிருத்தி உதவியாளர்கள் அனைவரது விருப் பத்துக்கும் வேண்டுகோளுக்கும் அமை வாக ஒன்றியத்தின் போசகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் ஆரம்பக் கூட்டம் கடந்த 2 ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட் டத்தில் யாழ்.மாவட்ட ஒன்றிய பிரதி நிதிகளுடன் வட மாகாணத் தின் ஏனைய மாவட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தமது மாவட்டத்தில் தாம் எதிர்நோக் கும் தொழில் நிலைமைகள் தொடர் பாக விரிவாகக் கலந்துரையாடிய துடன் எதிர் காலத்தில் முன்னெடுக் கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆக்கபூர்வமான தீர்மா னங்களையும் எடுத்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (வ)


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் தி.தில்லைச்சிவன்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி செம்மனச்செல்வி
தில்லைநடராஜா அவர்களின் மரணச்செய்தி
கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின்
ஆத்மாசாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், (சி/15773)(4.3.7)
மானிப்பாய் இந்துக்கல்லூரி.



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சின்னத்தம்பி
நவரத்தினம்
(ஓய்வுபெற்ற மீன்பிடித்
திணைக்கள பரிசோதகர்)

மண்ணுலகம் 15.05.1928

விண்ணுலகம் 09.04.2015

கடந்த 09.04.2015 சிவபதமடைந்த குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்குப் பல்வேறு வகைகளில் உதவிகள் இன்று வரை மேற்கொள்ளும் அன்பு உள்ளங்களுக்கும் நேரடியாகவும், தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும் அஞ்சலியைச் செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எமது அன்புத் தெய் வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (09.05.2015) சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு. T.P:077 147 3192 (58497)(4.7.3) குடும்பத்தினர்.


# கூட்டுறவு தின போட்டியில் முதலாம் இடம்

யாழ்ப்பாணம்,மே 8

93ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு மாவட்டக் கூட்டுறவுச் சபை யால் நடத்தப்பட்ட கயிறு இழுத்தல் போட்டியில், ஏழாலை மேற்கு ஸ்ரீவிநா யகர் ஐக்கிய நாணய சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே தனித்தனியே நடத்தப்பட்ட இரு போட்டிகளிலும், மேற்படி சங்கமே முதலாம் இடத்தைப் பெற்றது.

இரண்டாம் இடத்தை ஆண் களுக்கான போட்டியில் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கமும் பெண்களுக்கான போட்டியில் கோண் டாவில் கலைவாணி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கமும் பெற் றுக் கொண்டன.

இந்தக் கயிறு இழுத்தல் போட்டியில் வெற்றிபெற்ற சங்கங்களுக்கு பரிசில் கள் வழங் கப்படவுள்ளன. (வ–17)

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,மே 8

அராலி மத்தி உலோலைசிட்டி சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெற வுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழா வும் இடம் பெறும். (வ–14)

★★★

யாழ்ப்பாணம்,மே 8

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆல யத்தின் வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெற வுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திரு விழாவும், மறுநாள் ஞாயிற் றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (வ–14)

★★★

யாழ்ப்பாணம்,மே 8

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத் தின் வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திரு விழாக்கள் நடைபெறவுள்ளன.

இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும், மறுநாள் திங் கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திரு விழா வும் இடம் பெறும்.(வ–14)

# இரத்த சுத்திகரிப்பு மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மே 8

இரத்த சுத்திகரிப்பு மருத் துவமுகாமொன்றுநாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமைகாலை9மணிக்கு நொதேன் சென்றல் மருத் துவமனையில்நடைபெற வுள்ளது. இதன்போது இலவச ஆலோசனை களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று மருத்துவமனையின் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (வ–14)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, மே 8
கைதடி நுணாவில் ஏ -9 வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஒருவருக்கு கால் பாதம் சிதைவடைந்தது. மற்றையவருக்குகையில் பாதிப்பு ஏற்பட்டது இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம் பெற்றது.

பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பித்துவிட்டு ஏ-9 வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளை அந்த வழியே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப் பட்டது.

விபத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பிர பாகரன் (வயது-30) என்பவரது கால் பாதம் மோசமாகச் சிதைவடைந்தது. மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி பொது மருத்துவமனை மருத்துவரான தாளையடி உடுத்துறை வடக்கைச் சேர்ந்த அஜித் (வயது-26) என்பவரும் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டனர்.

இதேவேளை சில நாய்களால் துரத்தப்பட்ட நாயொன்று வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்தவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை தாவளை இயற்றாலையில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினராசா சிவராசா (வயது-31) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கடந்த திங்கட்கிழமை மாலை தோட்டத்தில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் பணியில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தரொருவரை அங்கு வந்தவர்கள் மோசமாகத் தாக்கியதில் அந்த நபர் காயங்களுக்கு இலக்கானார். மீசாலை வடக்கு, வேம்பிராய் கலட்டி தோட்டத்தில் இருந்த சமயம் மீசாலை வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் (வயது 54) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-9)

# நாடாளுமன்றத் தகவல்களை பெற்றுக்கொள்ள இணையத்தளம்

கொழும்பு, மே 8
நாடாளுமன்றம் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக முக்கியத்துவம் வாய்ந்த புதிய இணையத்தள சேவை ஒன்று சர்வதேச வலைப் பின்னல் ஊடாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.

கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோருக்கும், ஊடகவியலாளர்களுக்கும், அரசியல் சம்பந்தப்பட்ட ஆர்வமுள்ளோருக்கும் கூட பெரிதும் பயன் தரும் இந்த இணையத்தளத்துக்கு (www.manthri.lk என்று பெயரிடப்பட்டுள்ளது.

அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் நடவடிக்கைகள், மாவட்ட மட்டங்களிலான தகவல்கள், நாடாளுமன்றத் தரவுகள் போன்றே 100 நாள்களுக்குள் அரசு மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும்கூட, இதில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஊடகவிய லாளார்களுக்கு விழிப்புணர் வூட்டுவது தொடர்பாக கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி நீர் கொழும்பு பெரடைஸ்ஹோட்டலில் இடம்பெற்ற கருத் தரங்கு ஒன்றில் இந்த இணையத்தளம் தொடர்பான தக வல் கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. (வ-22)

# சட்டவிரோத மது விற்பனை; ஆறு பேர் வசமாகச் சிக்கினர்

தென்மராட்சி, மே 8
வெசாக் போயா தினத்தன்று மது பானம் விற்பனை செய்த ஆறு பேர் வசமாக மாட்டிக் கொண்டனர்.

கள்ளு விற்பனை செய்த ஐந்து பேர் சாவகச்சேரி மதுவரி நிலைய உத்தியோகத்தர்களிடமும் கசிப்பு விற்பனை செய்த ஒருவர் பொலிஸாரிடமும் வச மாக மாட்டிக்கொண்டனர்.

இந்த ஆறு பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசார ணைக்கு எடுக்கப்பட்டன. கசிப்பு விற்பனை செய்த கொடிகாமம் வாசிக்கு 30 ஆயிரம் ரூபாவும், கள்ளு விற்பனை செய்த ஐந்து பேருக்கு தலா 3ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.

மே தினம் மற்றும் வெசாக் விடுமுறைகளை ஒட்டி மதுபான நிலையங்கள் மூடப்பட்டிருந்த நிலையில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்ததாக அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (வ-9)

# தரிசனம் முடித்து திரும்பினர்

## நவாலி ஸ்ரீகதிர்காம யாத்திரிகர்கள்

மானிப்பாய், மே 8
மட்டக்களப்பு – கொழும்பு – அம்பாந்தோட்டை பகுதிகளிலுள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற 14 ஆலயங்களை தரிசிக்கச் சென்ற நவாலி ஸ்ரீகதிர்காம கந்தன் யாத்திரிகர்கள், யாத்திரையை முடித்துக் கொண்டு நவாலி திரும்பியுள்ளனர். நவாலி ஸ்ரீ கதிர்காம கந்தன் ஆலய பிரதம குரு சிவத்திரு மா.பத்மநாதன் தலைமையில் 54 பேர் கொண்ட யாத்திரிகர் கள் மற்றும் பஜனை குழுவினரே இவ்வாறு வெளிமாவட்ட ஆலயங்களைத் தரிசித்து விட்டுத் திரும்பியுள்ளனர்.

யாத்திரை முடிந்து திரும்பிய பின்னர் கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் சிறப்பு பூசை வழி பாடுகளையும் பஜனை வழிபாடுகளையும் மேற்கொண்டனர்.

கடந்த மாதம் 30பேர் கொண்ட நவாலி ஸ்ரீகதிர்காம கந்தன் ஆலய அடியார்கள், இந்தியா சென்று வரலாற்றுப் பிரசித்தி பெற்ற 60 ஆலயங்களை தரி சித்து விட்டுத்திரும்பியுமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-50)

# யெகோவாவின் சாட்சியங்கள் வட்டார மாநாடு

யாழ்ப்பாணம், மே 8
யெகோவாவின் சாட்சியங்கள் நடத்தும் 'யெகோவாவுடைய நீதி நெறிகளைத் தொடர்ந்து பின்பற்றுங்கள்' எனும் தொனிப் பொருளிலான வட்டார மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வீரசிங்கம் மண்ட பத்திலும், எதிர்வரும் 17 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்திலும் நடை பெறவுள்ளன. (வ-14)

# சிங்கள மொழித்திறன் பாடநெறி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே 8
வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படும் சிங்கள மொழித் திறன் விருத்திப் பாடநெறி வகுப்புகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாடநெறியில் பாடசாலையை விட்டு விலகியோர் மற்றும் தொழில் புரிவோர் பங்குபற்றலாம் என்று பாட சாலையின் அதிபர் த.மாதவன் அறிவித்துள்ளார். (வ-14)

# இந்துக்களின் குரல் இதழ் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 8
இந்துக்களின் குரல் எனும் இந்து தேசிய மாத இதழ் அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி ஓய்வூதியர் சங்கத் தலைவர் செ.சுப்பிர மணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். சஞ்சிகையின் மதிப்பீட்டுரையை சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியால யத்தின் ஆசிரியர் சி.கா.கமல நாதன் நிகழ்த்துவார். (வ-14)

# சிறப்பாக நடைபெற்ற சித்திரா பூரணை

முல்லைத்தீவு, மே 8
சித்திரா பூரணை விரதம் முல் லைத்தீவில் அதிக ஆலயங் களிலும் வெகு சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

ஆலயங்களில் விசேட பூசைகள் நடைபெற்று தாயை இழந்த வர்கள் விரதமிருந்து சித்திரைக் கஞ்சி காய்ச்சியும் பொங்கலிட்டும் மக்களுக்குப் பரிமாறினர். அத்துடன் சித்திரபுத்திரனார் கதை படிக்கப் பட்டது.

அம்பகாமம்பகுதியில் உள்ள மம்மில் பிள்ளையார் ஆலயத் தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு விரதம் அனுட்டித்தனர். ஆலயத்துக்கு விசேட போக்குவரத்துச்சேவையும்இடம்பெற்றது.(வ-500)


உடனடித் தேவை

யாழ். நகரின் மத்தியில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

* காசாளர் 01 (பெண்)
* உணவு பொதி செய்பவர் 01 (பெண்)

உணவு மற்றும் பாதுகாப்பான தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: பணிப்பாளர், (59541)(4.3.7)
பரந்தாம், இல.575, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் இந்துக் கல்லூரி அதிபர்
மு.செல்வஸ்தான் அவர்கள்
இலங்கை அதிபர் சேவையில் தரம்-1
பதவியுயர்வு பெற்றமையையிட்டு
பாராட்டுவதுடன், மேன்மேலும் பதவி
உயர்வு பெற்று சீரும் சிறப்புடனும் வாழ
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
(59548)(3.6.4)
பழைய மாணவர் சங்கம்
இணுவில் இந்துக் கல்லூரி.



வடமாகாண அதிபர்கள் சங்கம்
அதிபர்கள் சங்கமம்-2015

இடம்: ரில்கோ விருந்தினர் விடுதி- யாழ்ப்பாணம்
(TILKO JAFFNA CITY HOTEL)
காலம்
10.05.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி
தலைமை
ச.சிவனேஸ்வரன்
(அதிபர்-யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி,
தலைவர்- வடமாகாண அதிபர்கள் சங்கம்)
முதன்மை விருந்தினர்
கௌரவ த.குருகுலராஜா
(கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர்,
வடக்கு மாகாணம்)
கௌரவ விருந்தினர்
இ.இரவீந்திரன்
(செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
அமைச்சு, வடக்கு மாகாணம்)
சிறப்பு விருந்தினர்கள்
* செ.உதயகுமார்
(மாகாணகல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
* வடமாகாண வலயக்கல்விப் பணிப்பாளர்கள்,

(59551)(4.3.7)
வடமாகாண அதிபர்கள் சங்கம்.



ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் & பயிற்சியகம்
Angel's Beauty Parlour & Training Centre
06.03.2015 இல் புதிய கிளை திறப்பின்
விசேட கட்டண சலுகைகள்....

* பேசியல்
* திரட்டிங்
* பேமிங்
* கெயார் கட்டிங்
* தலைமுடிக்கு வர்ணம் பூசுதல்
* தலைமுடிசீராக்கல்
* கை, கால் அலங்காரம்
* மணப்பெண் அலங்காரம்
* பிளிச்சிங்
* கேக் ஐசிங் மற்றும் பல....

09.05.2015 இல் அழகுக்கலை, கேக் ஜசிங் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
முதல் பதிவு செய்யும் 25 பேருக்கு விசேட சலுகைகள்...
தொ.இல: 077 627 7332
தலைமையகம்:
இல.94, கன்னாதிட்டி வீதி,
(காளிகோயில், மக்கள் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.
கிளை: இல.37/5, 5 ஆம் ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
(TOPAZ MALL இற்கும் ராசி சில்க் இற்கும் இடையில்)
யாழ்ப்பாணம்.
(59540)(4.3.7)



போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
ஏல விற்பனை

யாழ். போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருள்கள் 2015.05.15 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) முற்பகல் 10.00 மணிதொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01. இரும்புக் கட்டில்கள்
02. சில்லுக் கதிரைகள்
03. பழைய மேசைகள் அலுமாரிகள் (ஸ்ரீல்)
04. மர அலுமாரிகள்
05. இரும்பு, மர கதிரைகள்
06. கணினிகள்
07. துவிச்சக்கர வண்டி
08. குளிர்சாதனப் பெட்டிகள்
09. ஏனைய தளபாட உபகரணங்கள்
10. பழைய இரும்பு அலுமினியப் பொருள்கள்
11. உடைந்த தளபாடங்கள்
12. பாவித்த வாகன ரயர்கள்
13. பழைய பிளாஸ்ரிக் பொருள்கள்
14. பழைய இரும்புக் கேடர்கள்

இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் மேற்குறிப்பிட்ட தினத்தில் முற்பகல் 10.00 மணியளவில் வைத்தியசாலைக் களஞ்சியத்திற்கு சமுகமளிக்கவும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தைக் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று பொருள்களை அன்றையதினம் பி.ப.4.30 மணிக்கு முன்னர் வைத்தியசாலை வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோர் மின்சாரக் கதிரையில் அமர்த்தப்பட வேண்டும்

## சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட அமைச்சரான ஜோன் அமரதுங்க கூறுகிறார்

கொழும்பு, மே 8
போதைப்பொருள் கடத்தல் காரர்கள் மின்சாரக் கதிரையில் அமர்த்தப்பட வேண்டும் என்பதே தமது கருத்தாகும் என்று சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட அமைச்சரான ஜோன் அமர துங்க தெரிவித்தார்.
போதைப்பொருள் கடத்தல் காரர் களுக்கு இந்தோனே ஷியாவில் துப்பாக்கியால் சுட்டு சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது. எமது நாட்டில் போதைப் பொருள் கிராமங்களுக்கும் ஊடுருவியுள் ளது. போதைப்பொருள் தொகைகள் கைப்பற்றப்பட்டு சிறைச் சாலைகளுக்குச் செல்வோர் மீளவும் விடுதலை பெறுகின்ற னர் என்பதோடு வெளியே வந்தும் மீளவும் அதையே செய்கின் றனர்.
எனவேஅன்றும்– இன்றும்போதைப் பொருள் கடத்தல் காரர்கள் மின் சாரக் கதிரையில் அமர்த்தப்பட வேண்டும் என்பதே எனது கருத் தாகும். எனது இந்தக் கருத்துக்கு பல்வேறு அமைப்புக்கள் எதிராக நிற்கின்றன. ஆனாலும் இந்த போதைப்பொருள் பாவனை காரணமாக நிகழும் குற்றங் களை முற்றுமுழுதாக நிறுத்தி விட வேண்டும் எனில் இது நடை முறைக்கு வர வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் ஜோன் அமர துங்க தெரிவிக்கிறார்.
அவர் தொடர்ந்தும் கருத்து வழங் கியிருந்த போது:–
தூக்குமரம் நடைமுறைக்கு வர வேண்டும் என்று அண்மையில் நான் தெரிவித்திருந்தேன். தூக் குக் கயிற்றைத் தருவித்திருந்ததும் நானே. ஆனால் அவை இன்று உக்கிப்போயுள்ளன. தற்காலத் துக்கு தூக்கு மரம் நடைமுறைச் சாத்தியமானதல்ல என்பதால் மின்சாரக் கதிரையே நடை முறைப் படுத்தப்பட வேண்டியுள்ளது. எம் மைப் போன்ற மூத்த அரசி யல் வாதிகளின் கருத்துக்கள் தொடர்ச் சியாக ஊடகங்களில் வெளி வரும் போது காத்திரம் காட்டிச் செயற்படும். ஜனாதிபதி அதைக் கவனத்தில் கொள்ளக் கூடுமென வும் நான் கருதுகிறேன்.
போதைப்பொருள் பாவனை கார ணமாகவே இன்று சமுதாயம் சீர் கெட்டுள்ளது. அத்தகைய நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆனாலும் போதைப்பொருள் கிராமங்கள் வரையில் ஊடுருவிச் செல்கிறது என்பதே உண்மை யான நிலைப்பாடாகும். எவ் வாறானாலும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இன்று வழங்கப்படும் தண்டனை போது மானதல்ல; பொருத்தமானதல்ல என்பதே எனது வாதமாகும்– என்றார்.
கடந்த 30 ஆம் திகதி முற்பகலில் இரட்டைக் குடியுரிமை வழங்கு வதற்குத் தெரிவு செய்யப்பட்டு வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்திருந்த இலங்கையர் களுக்கு இரட்டைக் குடியுரிமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வொன்றை அடுத்து இடம் பெற்றிருந்த ஊடகச் சந்திப் பொன்றில் வைத்தே அமைச் சர் மேற்கண்டவாறு கருத்து வழங் கியிருந்தார்.
(வ–22)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தேவதாசன்
(Rtd. Postmaster - Colombo)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தேவதாசன் 03.05.2015 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ் சென்ற முருகேசு தம்பதிய ரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தி, ஜெயந்தி, வசந்த குமார், ஜெயந்தகுமார், பிரேம்குமார், ராஜ் குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகலிங்கம், காலஞ்சென்ற ராம் குமார் மற்றும் மீரா, எழிலரசி, சாந்தி ஆகி யோரின் அன்பு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.05.2015) வியாழக்கிழமை இந்தி யாவில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: (59549) (45.3.7)
சந்திரா - லீலா, நல்லூர்.


# கூட்டம்

யாழ்ப்பாணம், மே 8
வட்டு, மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 62 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம், நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக் கோட்டை மூளாய் வீதியில் அமைந் துள்ள சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ–14)

# சேதனப் பசளை தயாரிக்கும் ஆலைக்கு புதிய கட்டடம் திறப்பு



மட்டக்களப்பு, மே 8
மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனைப்பற்று பிரதேச சபைப் பிரி வில் சேதனப் பசளை தயாரிக்கும் தொழிற்சாலைக் கான புதிய கட்ட டம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.
ஐரோப்பிய ஒன்றியத்தின் 7 மில் லியன் ரூபாய் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம், உள்ளூராட்சி திணைக்களம் என் பவற்றின் ஒத்துழைப்புடனும் இந்த புதிய கட்டடம் அமைக் கப்பட்டது. 'யுனப்ஸ்' நிறுவனத்தின் வழி காட்ட லுடனும், மண்முனைப்பற்று பிர தேச சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் திண்மக் கழிவு முகாமைத்துவத்திட்டத்தின் ஓர் அங்கமாக சேதனப் பசளை தயாரிக்கும் இந்தத் தொழிற் சாலைக் கான புதிய கட்டடம் திறந்து வைக் கப்பட்டது.
இந்த நிகழ்வு மண் முனைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் திருமதி ஜே. அருள்பிரகாசம் தலை மையில் நடை பெற்றது. ஐரோப் பிய ஒன்றியத்தின் திட்ட முகாமை யாளர் ஜேம் றோயோ ஒலிட் மற் றும் யுனப்ஸ் திட்டப்பணிப்பாளர் சிமோன்தா சிலிகலி மற்றும் மண் முனை பிரதேச செயலாளர் வி.வாசு தேவன், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் கே.சித்திரவேல் உட்பட மண் முனைப்பற்று பிரதேச சபை அதி காரிகள், யுனப்ஸ் நிறுவன அதி காரிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
மண்முனைப்பற்று பிரதேச சபைப் பிரிவில் சேகரிக்கப்பட்டு வரும் திண்மக்கழிவுகள் மண்முனைப் பற்று பிரதேசசபையால் நடை முறைப்படுத்தப் பட்டுவரும் இந்தத் திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத் தின் கீழ் இங்கு தரம் பிரிக் கப்படும். இதன் ஓர் அங்கமாக சேத னப்பசளைதயாரிக்கும்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற் கான கட்டடமும் அமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக் கது. (வ)


## மரண அறிவித்தல்கள்

### கதிரித்தம்பி பூபாலசிங்கம்
(சாவகச்சேரி வீரமாகாளியம்மன் கோவில் பூசகர்)



சாவகச்சேரி, சாரதா வீதி, சங்கத்தா னையைச் சேர்ந்த கதிரித்தம்பி பூபால சிங்கம் நேற்று(07.05.2015) வியாழக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பூமாதேவி தம்பதியரின் அன்பு மகனும், பரிமளம் அவர்களின் அன்புக் கணவரும், கோகுலகிருஷ் ணன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (நகுலன்), புஸ்பலதா, புவனேஸ்வரி, பிரேம தர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரூபன் (சாவகச்சேரி பிரதேசசபை), பிரகலாதன், வாகீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரதா வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (41130) (4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 043 3736


# ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி மே 8
வாகனப் பதிவுச் சான்றிதழ் உட்பட ஆவ ணங்களின்றி வாக னத்தைச் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் சாரதிக்கு எதிராக வாகன பதிவுச் சான்றிதழ், சார திய அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரி ஆகியவை இல் லாத நிலையில் வாகனம் செலுத்தியதா கக் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டது. சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நான்கு குற்றங்களுக்காக 16 ஆயிரத்த 500 ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.
இதேவேளை போக்குவரத்து விதிமுறை களை மீறி வாகனம் செலுத்திய ஒருவ ருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் இரு வருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப் பட்டது. (வ–9)


### திருமதி குணசூர்ந்தம்மா (தங்கம்மா) சிமியோன்



பலாலி புனித செபஸ்தியார் ஆலயத்தடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் டாக்டர். சுப்பிரமணியம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணசூர்ந்தம்மா (தங்கம்மா) சிமியோன் நேற்று (07.05.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற பேதுறு சிமியோனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிலிப்பு-எலிசபெத் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான பேதுறு - அருநோதயம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சலோ சப்பு, பிலோமினா, யாகப்பர் செல்வநாயகம் (ஓய்வு பெற்ற அதிபர்), நீற்றம்மா, செபஸ்ரியாம்பிள்ளை மற்றும்P.K. மத்தியாஸ் (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்- கண்டாவளை), இம்மானுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், S.K. மரியதாஸ் (ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்), மாசில் மனோகரி, சாமுவேல் ஜோன்சன் (எழுது வினைஞர்-நிர்வாகக்கிளை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), மரிய மனோகரன் (சாலைப்பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்) ஆகியோரின் அன்புத் தாயும், மேரிகெலன் (ஆசிரியர்- யாழ்/ மயிலணி சைவ மகாவித்தியாலயம்), ஞானரத்தினம் (ஜோசேப் புடைவையகம், சுன்னாகம்), மரீனா மரியடெய்சி, மரியபவளம் (ஆசிரியர்- யாழ். யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜோ நிறோஜன் (ஆசிரியர் -கலாசாலை, கோப்பாய்), நிசாளினி, ஜோ.கலஸ்ரீன், ஜஸ்ரீன் பேனாட் (ஆசிரியர்- இளவாலை கன்னியர் மடம்), ஜோபசில்டா - றெயினோல்ட் (ஆஸ்திரேலியா), ஜோ.கிறேசியன் (உயர் தொழில்நுட்ப கல்லூரி மாணவன்), அனோஜ் டிலக்சன், பிறிஜிற் - பிரபுராஜ் (ஜேர்மனி), லெனோஜினி - கெமில்டன் (ஜேர்மனி), கிறிஷாந், றொசிற்றா, றோஸ் ஜெனற், கிளைபேட் றொசில்டன், பேடினன்கிளறன்ஸ், றியூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபிக்கே யோஜன்னா ( ஜேர்மனி), கெலன்றோக் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனை இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (59542) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.021 224 1260


# நிர்வாகிகள் தெரிவுகள்

வவுனியா, மே 8
வவுனியா நகரசபைக்கு உட் பட்ட நகர வரியிறுப்பாளர் சங் கத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு அண் மையில் இடம் பெற்றுள்ளது.
இதன் தலைவராக செ.சந்திர குமாரா, செயலாளராக க.சிவஞானம், பொருளாளராக ந.கபிலநாத், உப தலைவராக ஜே.கார்த்திகேயன், உப செயலாளராக கோ.சிறிஸ் கந்தராஜா ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளதுடன் நிர்வாக உறுப் பினர்களாக செ.சுபாநாதன், கி.வசந்த ரூபன் எம்.எஸ்.எம்.கலீல், ரி.ஞான சீலன், வை.கருணாநிதி, இ.சஜீந் திரா, ஜே.பி.கிறிஸ்தோபர், மாணிக் கம் ஜெகன், தி.கோபிநாத், எஸ். பொன்னம்பலம், கணக்காய்வாள ராக ல.சதீஸ்குமார், போஷகராக றோய் ஜெயக்குமார் மற்றும் நா.சேனாதிராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (வ–402)

★★★

வவுனியா, மே 8
வவுனியா பத்தினியார் மகிழங் குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் ஆலயமண்ட பத்தில் தாண்டிக்குளம் கிராம அலு வலர் இ.பத்மநாதன் தலை மையில் நடைபெற்றது.
இந்தநிகழ்வுக்கு பிரதம விருந்தின ராக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம் கலந்து கொண் டார்.
இதன்போது புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலை வராக செ.சோதி நாதன், உப தலைவராக ம.திலீபன், செயலா ளராக கு.செந்தூரன், உப செய லாளராக பூ.பத்மநாதன், பொரு ளாளராக கே.சசிதரன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக து.சுரேஸ் குமார், க.பிரசாத், கே.தர்ம லிங்கம், சு.சதுமிலன் திருமதி ந.முல் லைக்கொடி, கே.தேவிகா ஆகி யோ ரும் தெரிவுசெய்யப்பட்டனர். (வ–402)

★★★

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநா யகர் ஆலய பரிபாலன சபைக்கு நடப்பு வருட நிர்வா கிகள் தெரிவு இடம்பெற்றுள் ளது.
கிராம அலுவலர் திருமதி சு.உமா லோஜினி தலைமையில் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் பின்வரு வோர் தெரிவு செய் யப்பட்டனர்.
தலைவராக ந.ராஜமோகன், செய லாளராக சே.சுப்பிரமணியம், பொருளாளராக சி.இராமச்சந்தி ரன், உபதலை வராக இ.இராசநாய கம் மேலும் இரண்டு பெண்கள் உட் பட 9 பேர் கொண்ட நிர்வாக சபை யும் தெரிவு செய்யப்பட்டது. (வ–9)

# நல்லிணக்கத்துக்கு ஆஸி. அரசு உதவும்

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசுக்கும் ஆஸ்திரேலிய அரசுக்கும் இடையில் நல்லுறவு இருக்கின்றது என்று தெரிவித்த ஆஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு மற்றும் எல்லை பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் டட்டன், இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல் லிணக்கச் செயற்பாடுகளுக்கு ஆஸ் திரேலியா தொடர்ந்து உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய அமைச்சர், தனது பயணத்தை முடித்து கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர், கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

இலங்கையின் புதிய அரசுக்கும் ஆஸ்திரேலிய அரசுக்கும் இடையில் நல்லுறவு இருக்கின்றது. இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு ஆஸ்திரேலியா தொடர்ந்து உதவும். இவை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சின்போது எடுத்துரைத்தேன்.

ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளாக வருவதை ஆஸ்திரேலிய அரசு ஒருபோதும் ஏற்காது. அவ்வாறு வந்து, நவ்று தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு குழுவினர் கம்போடியாவுக்கு செல்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அந்த நாட்டுடன் இருக்கின்ற புரிந்துணர்வின் பிரகாரமே இவர்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஏனைய நாடுகளின் அரசுகளுடன் மட்டுமன்றி இலங்கை அரசுடனும் எமக்கு பல் துறைகளிலும் நல்லுறவு இருக்கின்றது என்று சுட்டிக்காட்டிய அவர், நவ்று மற்றும் பப்புவா நியூகினியா தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளுக்குத் தேவையான கல்வி, வைத்தியசாலை, சுகாதாரம் உள்ளிட்ட சேவைகளையும் நாம் செய்து கொடுத்துள்ளோம்.

அதற்கு மேலதிகமாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளுக்கான பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், ஆஸ்திரேலியாவுக்குள் அகதிகளாக நுழைவதை தடுப்பதற்காக புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் – என்றார். (த)

# தேசியக் கொடி விவகாரம்: 2 1/2 மணிநேரம் விசாரணை

கொழும்பு, மே 8

சிறுபான்மை இனங்களை அடையாளப்படுத்தும் பகுதிகள் நீக்கப்பட்ட தேசியக் கொடியை ஏந்தியவாறு அரசுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்டதாகக் கூறப்படும் பிரபல பாடகரும், நடிகருமான மதுமாதவ அரவிந்த மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் லலித் எல்லாவல ஆகியோரிடம் இரகசிய பொலிஸார் நேற்று முன்தினம் புதன் கிழமை சுமார் இரண்டரை மணிநேர விசாரணைகளை மேற்கொண்டனர்.

இலஞ்சஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணைக்காகப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கடந்த 23ஆம் திகதி அங்கு சென்றிருந்தபோது, கோத்தபாயவுக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் ஆணைக்குழுவுக்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போதே மேற்படி திரிபுபடுத்தப்பட்ட தேசியக் கொடி ஏந்தப்பட்டிருந்தது.

இதில், மதுமாதவவும் லலித் எல்லாவலவும் கலந்துகொண்டிருந்தாக இரகசியப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இரகசிய பொலிஸ்க்கு வருமாறு அவ்விருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அங்கு சென்ற அவர்களிடம் பல மணி நேரங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளன.

விசாரணைக்காகச் செல்லும் முன்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த லலித் எல்லாவல, 'திரிபு படுத்தப்பட்ட தேசியக் கொடி விவகாரம் தொடர்பில் விசாரிப்பதற்காகவே என்னை இரகசியப் பொலிஸார்அழைத்துள்ளனர்'– என்றார். (த)

# குருநாகல் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டேன்

## உதய கம்மன்பில கூறுகிறார்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இன்று குருநாகலில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்க முடியாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தக் கூட்டத்துக்குக் கட்சியின் சார்பில் பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைப்பேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவுக்கு எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் பங்கேற்றமை குறித்து இன்று நீதிமன்றில் வழக்கு விசாரணை நடத்தப்படவுள்ளது. இந்த வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகுமாறு நீதிமன்றத்தினால் எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகக் குருநாகல் கூட்டத்தில் பங்கேற்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் எமது கட்சியின் சார்பில் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என உதய கம்மன்பில நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (த)

# கொட்டகெத்தன தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 8

கஹாவத்தை, கொட்டகெத்தன பிரதேசத்தில் தாயும் மகளும் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு, எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய எல்.ஜீ.பிரேமவதி மற்றும் அவரது மகள் எச்.ஜீ.புஸ்பகுமாரி (வயது – 23), ஆகிய இருவரும் கடந்த 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர். குறித்த இரு பெண்களையும் கொலை செய்துவிட்டு அவர்களின் சடலங்களை எரியூட்டினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நாமல் சமிந்த சில்வா, சிசிர குமார மற்றும் எல்.ஜீ.மித்தில ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா டீ லிவ்ரா தென்னகோன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது. வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவிருந்த நிலையிலேயே, அது ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (த)


## மாகாண மட்ட மாபெரும் மாணவர் கலை இலக்கியத் தேர்வு - பரிசு வழங்கல்

தமிழ் வளர்ப்போம்; தமிழால் இணைவோம்

ஓவியங்கள் வரையும் ஓவியங்கள்



மாகாணமட்ட மாபெரும் மாணவர் கலை இலக்கியத் தேர்வுப் பெறுபேறுகள், ஏற்கனவே உங்கள் உதயன் நாளேட்டில்,

| | | | |
|---|---|---|---|
| கட்டுரை பி பிரிவு | – 2015.04.15 | ஓவியம் ஏ பிரிவு | – 2015.04.18 |
| ஓவியம் சி பிரிவு | – 2015.04.16 | கவிதை ஏ பிரிவு | – 2015.04.20 |
| ஓவியம் பி பிரிவு | – 2015.04.17 | கட்டுரை ஏ பிரிவு | – 2015.04.21 |
| சிறுகதை ஏ பிரிவு | – 2015,04.23 தினங்களில் வெளியாகியிருந்தன. | | |

பரிசு மற்றும் சான்றிதழ் பெறுவோர் விவரம் உரிய பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பரிசு வழங்கல் தினம் 2015.05.10 ஞாயிறு 09.20 மணி முதல் 12.30 மணிவரை

இடம்: சபாலிங்கம் அரங்கு, யா/ இந்துக் கல்லூரி.

30 அகவையில் உதயன்

எதிர்கால ஓவிய மற்றும் இலக்கிய சிற்பிகளை வாழ்த்த, பாராட்ட அனைவரையும் அன்புடன் அழைகின்றோம்.

விழா ஏற்பாட்டுச் செயற்குழு





பூகம்பத்தால் அழிந்து போயுள்ள போட்ட நேபாளத்தில் மீட்புப் பணிகளை பின்னுக்குத் தள்ளி அடிப்படை வசதி கூடக் கிடைக்காமல் தவிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளன.

## வடக்கு ஜேர்மனியில் தாண்டவமாடிய சூறாவளி

பெர்லின்,மே 08

டொர்னடோ என்று அழைக்கப்படும் சூறாவளிக் காற்று நேற்று முன்தினம் வடக்கு ஜேர்மனியைப் புரட்டிப் போட்டுள்ளது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டொர்னடோ என்ற பயங்கர சூறாவளிக்காற்றால் பல வீடுகள் கடும் சேதம் அடைந்துள்ளது. வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட கார்கள் அனைத்தும் சுமார் 230 அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டுள்ளன.

பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சீரமைப்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அடுத்த சில தினங்களில், ஜேர்மனியின் வேறுசில இடங்களையும் புயல் காற்று தாக்கக்கூடும் என்று அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (14)

# பெண்ணை எரித்துக் கொன்ற 4 பேருக்கு சாவுத் தண்டனை

காபூல், மே 8

இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை எரித்ததாகக் கூறி 27 வயதுப் பெண் ஒருவரை அடித்துக் கொல்லப்பட்ட வழக்கில் 4 பேருக்கு நீதி மன்றம் சாவுத் தண்டனை விதித் துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த மார்ச் மாதம் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை எரித்ததாக பார்குந்தா என்ற அந்தப் பெண்ணை பட்டப்பகலில் பல ஆண்கள் சேர்ந்து அடித்துக் கொன்றனர். மேலும் ஆத்திரம் தீராத அந்தக்கும்பல் அவரது உடலை அருகில் இருந்த ஆற்றுக்கு எடுத்துச் சென்று தீயிட்டு எரித்தது பின்னர் கருகிய உடலை ஆற்றின் சகதியில் போட்டுள்ளனர். இந்தக் கொடூரத்தை பலர் தங்களது கைத் தொலைபேசியில் படம் எடுத்துள்ளனர். மேலும் பொலிஸாரும் அந்தக் கொடூரத்தை தடுக்காமல் வேடிக்கை



பார்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 49 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். விசாரணையின் முடிவில் தற்போது வெளிவந்துள்ள நீதிமன்ற தீர்ப்பின்படி 4 பேருக்கு சாவுத் தண்டனையும், 8 பேருக்கு 16 வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 18 பேரை நீதிமன்றம் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது. மீதமிருக்கும் 19 பொலிஸாரின் நிலை என்ன? என்பது தெரியவில்லை. அவர்கள் அனைவரும் குற்றத்தைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மிகவும் பழமைவாதிகள் நிறைந்த நாடான ஆப்கானிஸ்தானில் இந்தப் பிரச்சினை மிகப்பெரிய கொந்தளிப்புக்கும் போராட்டங்களுக்கும் காரணமாக அமைந்தது. மேலும் கொல்லப்பட்ட பெண் பல வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும், உண்மையில் அவர் குர்ஆனை எரிக்கவில்லை எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் தீர்ப்பு பற்றி அந்தப்பெண்ணின் தந்தை கூறும் போது, 100 பேருக்கும் மேற்பட்டோர் சேர்ந்து எனது பெண்ணை அடித்துக்கொன்றனர். ஆனால், வெறும் 4 நபர்களுக்கு மட்டும் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளார். (14)

## சல்மான் கானுக்கு இடைக்காலப் பிணை



டில்லி,மே 08

கார் விபத்து வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட நடிகர் சல்மான் கானுக்கு மும்பை உயர் நீதிமன்றம் இடைக்கால பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு இடம் பெற்ற கார் விபத்து வழக்கில் நடிகர் சல்மான் கானுக்கு நேற்றுமுன்தினம் 5 வருடங் கள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது.

இந்த நிலையில் மும்பை உயர் நீதிமன்றத்தில் நடந்த அவரது பிணை மனு மீதான விசாரணையில், சல்மான் கானுக்கு 2 நாள்கள் இடைக்காலப் பிணை வழங்கி மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (14)

## தாய்மார்களுக்கு சிறந்த நாடாக நோர்வே தெரிவு

நியூயோர்க்,மே 8

தாய்மார்களுக்கு தேவையான அனைத்து வசதி மற்றும் பாதுகாப்புகளைக் கொண்ட நாடாக நோர்வே தெரிவு செய்யப்பட்டுள்ளது. நோர்வேயைத் தொடர்ந்து இரண்டாம் இடத்தில் பின்லாந்து உள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த குழந்தைகளைப் பாதுகாப்போம் என்ற தொண்டுநிறுவனம் ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வில், பிரசவத்தின் போது ஏற்படும் தாய்–சேய் உயிரிழப்பு, தாய்மார்களின் ஆரோக்கியம், பாதுகாப்பு, பொருளாதார நிலை போன்ற காரணிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதில் முதல் பத்து இடங்களில் ஐரோப்பிய நாடுகளே ஆதிக்கம் செலுத்தின. 9 ஆவது இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலியா மட்டும் தான், ஐரோப்பாவைச் சேராத ஒரே நாடு. அந்தப்பட்டியலில் 140 ஆவது இடத்தில் இந்தியா உள்ளமை குறிப்பிடத்தக்கது. வழக்கம் போல ஆபிரிக்க நாடுகளே மிக மோசமான நிலையில் உள்ளன. சோமாலியா கடைசி இடத்திலும் அதற்கு மேல் காங்கோ மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகியவை உள்ளன.

## பூமி அதிர்ச்சியால் காத்மண்டு பள்ளத்தாக்கு உயர்ந்தது

நேபாளத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி சக்திவாய்ந்த பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக, காத்மண்டு பள்ளத்தாக்கு உயர்ந்து விட்டதாக அந்த நாட்டின் நில அளவைத்துறை தெரிவித்துள்ளது.

பூமி அதிர்ச்சிக்கு முன்பு, கடல் மட்டத்தில் இருந்து ஆயிரத்து 338 மீற்றர் உயரத்தில் இருந்தது. ஆனால், அது தற்போது ஆயிரத்து 338.80 மீற்றருக்கு உயர்ந்துள்ளது. அதாவது, 80 செ.மீ. உயர்ந்துள்ளது. பூமி அதிர்ச்சி ஏற்பட்ட 4 நாள்களுக்குப் பின்னர், 24 மணி நேரத்தில் நில அளவைத்துறை இதைக் கண்டுபிடித்துள்ளது. இதுபோன்று உலகின் உயர்ந்த மலைச்சிகரமான எவரெஸ்ட் உயர்ந்துள்ளதா என்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. (14)

## இத்தாலியில் நடுக்கடலில் படகு மூழ்கி 40 பேர் சாவு


லிபியா, சிரியா, யேமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவி வரும் உள்நாட்டுப் போர் காரணமாக அங்கு அமைதியற்ற சூழ்நிலை நிலவுகிறது. அதனால் அங்குள்ள பெரும்பாலான மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகிறார்கள். சட்டவிரோதமாகப்; படகுகளில் அளவுக்கு அதிகமாக ஆள்களை ஏற்றிக்கொண்டு மத்திய தரைக்கடல் வழியாகச் செல்வதால் பலமுறை விபத்து ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இத்தாலி அருகே மத்திய தரைக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் 137 அகதிகளை ஏற்றிக்கொண்டு படகு ஒன்று சென்றது. அதன் போது அந்தப் படகு தீப்பிடித்தோ அல்லது வெடித்தோ நடுக்கடலில் மூழ்கியது. உடனே மீட்புப் படையினர் விரைந்து சென்று கடலில் மூழ்கியவர்களைக் காப்பாற்றினர். ஆனால் 40 பேர் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் 5 பேரின் உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டு உள்ளன. (14)



## பிரிட்டனில் இன்று நாடாளுமன்ற தேர்தல்

மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையே பிரிட்டன் நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. 56 ஆவது நாடாளுமன்றத்தை தேர்ந்தேடுபதர்கான பொதுத் தேர்தல் பிரிட்டனில் இன்று நடைபெறவுள்ளது. மொத்தம் உள்ள 650 இடங்களுக்கு அந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் முதல் முறையாக தொழிலாளர் கட்சியும் கன்சர்வேடிவ் கட்சியும் அதிக இடங்களைக் கைப்பற்றும் என்று கூறப்படுகிறது. கடும் போட்டி காரணமாக ஆட்சி அமைப்பதில் என எதிர்பார்க்கப்படுகிறது.



இங்கிலாந்தில் 533 இடங்களுக்கும், ஸ்கொட்லாந்தில் 509 இடங்களுக்கும் வேல்ஸில் 40 இடங்களுக்கும், வடக்கு அயர்லாந்தில் 18 இடங்களுக்கும் வாக்கு பதிவு நடைபெறுகிறது. தொழிலாளர் கட்சி அல்லது கன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்காவிட்டால் கிறிஸ்மஸ் பண்டிக்கைக்கு முன்னதாக அங்கு மீண்டும் தேர்தல் வரக்கூடும் என துணை பிரதமர் நிக் கிலேக் கூறியுள்ளார். பிரதமர் டேவிட் கமரூனின் கன்சர் வேடிவ் கட்சி கடந்த 2010ஆம் ஆண்டு தேர்தலில் 306 இடங்களிலும், தொழிலாளர் கட்சி 258 இடங்களிலும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## துக்கம் தாங்க முடியாத பெண்களுக்கான ஒப்பாரி அறை



டோக்கியோ, மே 08
குடும்பப் பிரச்சினை, காதல் தோல்வி, உறவினர் பிரிவு, பெற்றோர் மறைவு, வேலை அழுத்தத்தினால் ஏற்படும் வெறுப்பு உள்ளிட்ட பல்வேறு மன அழுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குக் குறிப்பாக, பெண்களுக்கு மனம்விட்டு அழுவதற்கென்றே ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள மிட்சுயி கார்டன் யோட்சுயா ஹோட்டலில் தனி அறைகள் வாடகைக்கு விடப்படுகிறது.
அந்த அறைகளை முற்பதிவு செய்துவிட்டு தனியாக வரும் சில பெண்கள் மூடிய கதவுக்குள் தனிமையில் அமர்ந்து வாய்விட்டும், மனம்விட்டும் அழுதுவிட்டு போகின்றனர். கண்ணீர் வராதவர்களுக்கும் அருவியாக கண்ணீரை சுரக்க வைக்கும் சாதனங்களும் அந்த அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. மிகுந்த சோகத்தை வரவழைக்கக்கூடிய கார்ட்டூன் மற்றும் சினிமாப் படங்களையும் பார்க்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.
நான் மிட்சுயி கார்டன் யோட்சுயா ஹோட்டல் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டு அழுது விட்டு வருகிறேன் என்பது வெளி உலகுக்குத் தெரியாத வகையில், அழுது, ஒப்பாரி வைத்து முடிந்தவுடன் கண்களில் இட்டுக்கொள்ளும் ஐலைனர் உள்ளிட்ட மேக்கப் சாதனங்களும் அங்குண்டு. (14)



டுபாய் கடற்கரையோரத்தில் முதல்முறையாக இலவச வயர்லெஸ் இன்டர்நெட் வசதி அமைக்கப்பட்டுள்ளது. பனைமரம் வடிவில் அமைக்கப்பட்டுள்ள அந்த ஸ்மார்ட் பாம் நிலையங்கள் பயனாளிகளுக்கு உபயோகமாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் கர்ப்பம்

## போகோஹறாம் தீவிரவாதிகளின் வெறிச் செயல்

அபுஜா, மே 08
ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல்களிலும் பெண்கள் மற்றும் சிறுமிகளைக் கடத்துவதிலும் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட போகோஹறாம் தீவிரவாத அமைப்பு மேற்கத்திய கல்விக்கு எதிராகவும், மேற்கத்திய நாடுகளின் கலாசாரத்துக்கு எதிராகவும் போர் தொடுத்து வருகிறது. பெண்கள் படிக்கக் கூடாது என்று அது தடை விதித்துள்ளது. கடந்த 6 வருடங்களில் 13 ஆயிரம் பேரை இந்தத் தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். ஆண்களைக் கொல்லும் இவர்கள் பெண்களை பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்துகிறார்கள்.
அண்மையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்குத் தனது ஆதரவைத் தெரிவித்த போகோஹறாம் தீவிரவாதிகள், தங்களது பெயரையும் இஸ்லாமிய மேற்கு ஆப்பிரிக்க மாகாண குடியரசு என்று மாற்றிக் கொண்டனர். கடந்த வருடம் சிபோக் என்ற கிராமத்திலிருந்து 200 இற்கும் மேற்பட்ட பாடசாலைச் சிறுமிகளை அவர்கள் கடத்திச் சென்றது உலகையே பெரும் பரபரப்பில் ஆழ்த்தியது. உலகம் முழுவதும் இந்தச் செயலுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த வாரத்தில் கிட்டத்தட்ட 700 பெண்களை தீவிரவாதிகளிடமிருந்து அந்த நாட்டின் இராணுவத்தினர் மீட்டுள்ளனர். கடந்த வாரம் மட்டும் நைஜீரிய இராணுவத்தினர் 234 பெண்களையும், சிறுமிகளையும் தீவிரவாதிகளிடமிருந்து மீட்டுள்ளனர். சம்பிசா வனப்பகுதியில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 214 பேர் தற்போது கர்ப்பமாக உள்ளமை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. இந்தப் பெண்களை பாலியல் அடிமைகளாகத் தீவிரவாதிகள் பயன்படுத்தி வந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.



இது குறித்து ஐ நா. உணவுத் திட்ட நைஜீரிய செயல் இயக்குநர் பாபாடுன்டே ஓஷோடிமெஹின் லாகோஸில் கூறியதாவது:-
ஏற்கனவே இந்தப் பெண்களுக்கு எச்.ஐ.வி, எய்ட்ஸ் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்களில் 214 பேர் கர்ப்பிணிகளாக உள்ளனர். சிலருக்கு கரு நல்ல வளர்ச்சி அடைந்த நிலையில் உள்ளது. சிலர் தற்போதுதான் கர்ப்பமுற்றுள்ளனர். அவர்களின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அது மட்டுமின்றி, சில பச்சிளம் குழந்தைகளும் மீடகப்பட்டுள்ளனர். இந்தக் குழந்தைகள் வனப்பகுதியில் பிறந்தவர்கள் ஆவர். இப்போதுதான் அவர்கள் வெளி உலகையே பார்க்கிறார்கள் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (14)

## போர் விமானங்களை விநியோகிக்கும் அமெரிக்கா

வொஷிங்டன், மே 08
அமெரிக்காவிடம் இருந்து போர் விமானங்கள், பயிற்சி விமானங்கள், கவச வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் வாங்குவதற்கு பாகிஸ்தான் ஒப்பந்தம் செய்திருந்தது. அதன்படி, பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 14 போர் விமானங்கள்,



59 பயிற்சி விமானங்கள், 374 கவச வாகனங்கள் மற்றும் ஏராளமான போர்த் தளபாடங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.
இவை அனைத்தும் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் அமெரிக்க படையினரால் பயன்படுத் தப்பட்டவை ஆகும். இந்தப் போர்த் தளபாடங்களை இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்பதால், கடந்த காலத்தில் பாகீஸ்தானுக்குப் போர் விமானங்கள் விநியோகம் செய்வதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (14)

## சிறந்த விமான நிலையம்

டுபாய் பன்னாட்டு விமான நிலையம் இந்த வருடத்தின் சிறந்த விமான நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
டுபாய் பன்னாட்டு விமான நிலையம், மத்திய கிழக்கு நாடுகளில் மிகச் சிறந்த விமான நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளிலேயே டுபாய் பல்வேறு வகைகளில் முன்னணியில் உள்ளது. அண்மையில் நடந்த கருத்துக்கணிப்பில் கூட, மக்கள் வாழ்வதற்கு சிறந்த நகரமாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)


## தீவிரவாதிகள் தாக்குதல் ஐ.நா. ஐ.நா. அமைதிப்படையினர் சாவு



கின்ஷாசா, மே 08
ஆபிரிக்க நாடான காங்கோவில் உகாண்டன் ஜனநாயக படை என்ற தீவிரவாத இயக்கம் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்த தீவிரவாதிகளின் தாக்குதல்களால் அந்த நாட்டைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதமாக ஐ.நா. அமைதிப்படை காங் கோவில் முகாமிட்டு தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.
இந்த நிலையில் வடக்கு கிவு மாகாணம் பெனி நகரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிகி கிராமத்தில் அமைதிப் படையினர் வாகனத்தில் வந்து கொண்டிருந்தனர். அதன்போது பதுங்கி இருந்த தீவிரவாதிகள், அமைதிப்படையினர் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தினர். அதில் அமைதிப்படையில் இடம் பெற்றிருந்த தான்சானியாவைச் சேர்ந்த 2 வீரர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 13 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். (14)

## ஈராக்கில் குண்டுவீச்சு

பாக்தாத், மே 08
ஈராக்கில் பிரதமர் அலுவலகம், தூதரகங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலில் முக்கிய பிரமுகர்கள் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். தலைநகர் பாக்தாத் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை தங்கள் வசம் கொண்டு வரும் வகையில் போரிட்டு வருகின்றனர்.
பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் பிரதமர் அலுவலகம், தூதரகங்கள் உள்ள பகுதியில் 2 ரொக்கெட் குண்டுகள் விழுந்து வெடித்தன. அந்தத் தாக்குதலில் உயிர், பொருள்சேதம் எதுவும் ஏற்படவில்லை என ஈராக் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், பிரதமர் அலு வலகம், தூதரகங்கள், மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் தீவிரவாதிகள் நடத்தியதாக்குதலை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (14)



## வசீகரமான இளைஞர்கள் சிறப்பை இழக்கும் பாரிஸ்

பாரிஸ், மே 08
அழகிய இளைஞர்களைக் கொண்ட நகரம் என்ற சிறப்பை பெற்றிருந்த பாரிஸ் தற்போது பின்தள்ளப்பட்டுள்ளது. வசீகரமான அழகுடன் விளங்கும் திருமணமாகாத ஆண்கள் மற்றும் பெண்களைக் கொண்ட நகரம் என்ற சிறப்பு பாரிஸிடமே இதுவரை இருந்து வந்தது.
இந்த நிலையில் அண்மையில் இது தொடர்பாக பிரான்ஸில் நடத்தப்பட்ட ஆய்வில் பாரிஸை பின்னுக்குத் தள்ளி லயான் நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
சுமார் 2 லட்சம் மக்களிடம் நடத்தப்பட்ட அந்த ஆய்வில் லயான் நகரம் முதலிடத்தையும் , நைஸ் இரண்டாம் இடத்தையும், மொண்டிப் பில்லர் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன. இதுவரை முதலிடத்தில் இருந்த பாரிஸ் 20 ஆவது இடத்துக்குத்தள்ளப்பட்டுள்ளது. (14)

# மக்களின் துயர்களைத் துடைக்கும் செஞ்சிலுவைச் சங்கம்

## இன்று சர்வதேச செஞ்சிலுவை தினம்

கு.பாலகிருஷ்ணன்

யஹன்றி டுனான்ட் இனால் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான தொண்டர் நிறுவனம் செஞ்சிலுவைச்சங்கமாகும். அவரது பிறந்ததினமான மே 8ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

மனிதாபிமானம், பாரபட்சமின்மை, சுயாதீனம், ஒருமைப்பாடு, நடுநிலைமை, தொண்டர்சேவை, சர்வதேசமயம் என்பன செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏழு கொள்கைகளாகும்.

ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் இந்த அமைப்பு 191 நாடுகளில் மனித நேயத்தையும், சுய கௌரவத்தையும் பாதுகாக்கின்ற ஓர் அமைப்பாக இன்று செயற்பட்டு வருகின்றது. சொல்பரினா என்ற இடத்தில் ஏற்பட்ட போரில் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்ணுற்ற யஹன்றி டுனான்ட், அந்த மக்களுக்கான மருத்துவச்சேவைகளையும், உயிர் பாதுகாப்புச் சேவைகளையும், வழங்கியதுடன், 40,000இற்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப் பாதுகாத்து இறந்தோரது உடல்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

இந்நினைவில் இருந்து மீளாதயஹன்றி டுனான்ட் 1862இல் சொல் பரினா நினைவுகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு சர்வதேசரீதியாக இந்த அமைப்பின் அவசியத்தை உலகுக்கு உணர்த்தினார். 1863இல் வேறு நால்வரை இணைத்து உலகளாவிய, சர்வதேச சங்கத்தை ஆரம்பித்தார்.

தொண்டர்கள் சர்வதேச சங்கத்தில் இணைக்கப்பட வேண்டும் என்ற காரணத்துக்காக 1864இல் பல்வேறு சங்கங்களையும், இராஜதந்திரிகளையும் இணைத்து முதலாவது ஜெனிவா சாசனத்தை அவர் உருவாக்கினார். இதுதான் இன்று சர்வதேச ரீதியில் செஞ்சிலுவைச் சங்கம் அங்கீகாரம் பெற்ற ஒரு தொண்டர் அமைப்பாக உரு வாவதற்குக் காரணமாயிற்று.

செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடி, வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவை யால் உருவாக்கப்பட்டதாகும். இது யஹன்றி டுனான்ட் பிறந்த சுவிஸ் நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளைச்சிலுவையுடன் சிவப்புப் பின்னணியை மாற்றி அமைத் ததாகும். இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.



செஞ்சிலுவைச் சங்கமானது உலகளாவியரீதியில் செயற்படும் ஓர் அமைப்பாகும். செஞ்சிலு வைச் சங்கம், செம்பிறைச்சங்கம் என்று தேசிய அடிப்படையில் செயற் படுவதுடன், சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம், சர்வதேச செஞ்சிலு வைச் சங்கக்குழு என உலகில் பெரும்பாலான பகுதிகளில் செயற்பட்டு வருகின்றது. உலகில் ஏற்படக் கூடிய இடரினால் பாதிக்கப்படும் மனித சமுதாயத்தின் துன்பங்களைத் துடைத்து, நலிவுற்றிருக்கும் மக்களுக்குஉடன் நிவாரணங்களும், மாற்றுவழிமுறைகளைக் கொண்ட உதவிகளையும், இது வழங்கி வருகின்றது. இயற்கை இடரினால் மட்டுமன்றி ஆயுதப் போராட்டம் நடைபெறும் காலங்களிலும், இடர் வேளைகளிலும், மக்களுக்கான மனிதாபிமான செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்கக் குழுவும் மற்றும் செம்பிறைச் சங்க சம்மேளனமும் உலகளாவியரீதியில் தமது மனிதாபிமான சேவைகளை நேரடியாகவும், தேசியசங்கம் ஊடாகவும், செய்துவருகின்றன.

செஞ்சிலுவைச் சங்க யாப்பானது உன்னதமான குறிக்கோளையும், கோட்பாட்டையும் கொண்டதாகும். இதனால்தான் சர்வதேச மட்டத்தில் இது நிலைத்து நிற்பதற்கு ஏது வாக அமைந்துள்ளது. சர்வதேச சங்கங்களும், தேசியசங்கங்களும், இந்தக் கோட்பாட்டை தேசியரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் செயற்படுத்தி வருகின்றன.

இயற்கை இடர்களான பூமி அதிர்ச்சி, சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வறட்சி, மண்சரிவு போன்றவற்றால் ஏற்படக்கூடிய இடர்களுக்கு முகம் கொடுத்து அதில் பாதிக்கப்படும் மக்களுக்கு உயிர் காப்பு சேவைகளையும், நிவாரணஉதவிகளையும், செய்து வருகின்ற மனிதாபிமான தொண்டர் அமைப்பே செஞ்சிலுவைச் சங்கமாகும். அத்துடன்போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போர் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று மருத்துவ வசதிகள், நிவாரணங்கள் போன்ற உதவிகளை வழங்கி வருகின்றது.

இலங்கையில் 25 மாவட்டங்களிலும் 25 செஞ்சிலுவைச்சங்கக்கிளைகள் செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் யாழ்.மாவட்டக் கிளையும் ஒன்றாகும். 1958ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இளைஞர் மத்தியிலும், பாடசாலை மாணவர் மத்தியிலும், உருவாக்கப்பட்ட இச் செஞ்சிலுவைச் சங்கம் 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறந்த நிர்வாக அமைப்புடன் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.மாவட்டத்தில் நடமாடும் சேவை, மருத்துவசேவை, இரத்ததானம், நிவாரணப்பணி ஆகியவற்றை வழங்குவதுடன் – மக்களுக்குத் தேவை ஏற்படும்போது அதற்கேற்ப தனது சேவையையும் விரிவுபடுத்துகின்றது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னைய போர்க்காலத்தில் சிரமதானம், இரத்ததானம், நடமாடும் மருத்துவசேவை என்பனவற்றைச் செய்ததுடன் 24 மணித்தியால அம்புலன்ஸ் சேவையை மேற்கொண்டு நோய்வாய்ப்பட்ட மக்களை மருத்துவமனையில் சேர்த்தமை யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு என்றும் நீங்காத நினைவாகும்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் 2000இற்கும் மேற்பட்ட வீடுகளை வடமராட்சிப் பிரிவில் அமைத்துக் கொடுத்ததுடன், மீளக்குடியமர்ந்த மக்களுக்கு சுகாதாரசேவைகளையும், நீர்வழங்கல் சேவைகளையும், பாடசாலைகளில் மலசலகூடங்களை அமைத்தல் போன்ற செயற்பாடு களையும் செயற்படுத்தியது. அண்மைக் காலத்தில் மீளக்குடியமர்ந்த தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேசங்களுக்கு மலசலகூட வசதிகளையும், குடிதண்ணீர் வசதிகளையும், மேலும் 28இற்கும் மேற்பட்டகிணறுகளைப் புனரமைத்ததுடன் எட்டு குழாய்க் கிணறுகளையும் அமைத்துக் கொடுத்தது.

மேலும், யாழ்.மாவட்டத்தில் கோப்பாய், சங்கானை, நல்லூர், வேலணை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 5000இற்கும் மேற்பட்ட இந்தியவீட்டுத்திட்டத்தின்கீழான வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவாகளுக்கான வாழ்வாதாரத்தை வழங்குவதற்கான திட்டமும் செஞ்சிலுவைச்சங்கத்திடம் உள்ளது.

அந்த வகையில் செஞ்சிலுவைச் சங்கமா னது சர்வதேசரீதியிலும், தேசிய அடிப்படையிலும், இயற்கை மற் றும் செயற்கை இடர் ஏற்படும் போது பாதிக்கப்படும் மக்களின் துன்பத்தையும், துயரத்தையும் துடைத்து அவர்களின் எதிர்காலத்துக்கான நம்பிக்கையை உருவாக்கும் ஒரு சர்வதேச அமைப் பாகும்.

# எதிர்காலத்துக்கு ஏற்ப தன்னை மாற்றியமைக்கும் ஜெஸ்டெட்னர்

Gestetner OF CEYLON PLC® Total document solutions

1964 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட, பரிபூரண காகிதாதிகள் தீர்வுகளை வழங்கும் ஜெஸ்டெட்னர், கடந்த ஆண்டில் தனது 50 ஆவது வருட பூர்த்தியை பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனமாக கொண்டாடியிருந்தது. எதிர்காலத்துக்கேற்ப தன்னை மாற்றியமைத்துக் கொள்ள முன்வந்துள்ளது.

ஆரம்பத்தில் 3ஆக காணப்பட்டு, தற்போது 21ஆக விரிவடைந்துள்ள வேகமாக வளர்ந்து வரும் வலையமைப்புடன், நிறுவனம் தனது சந்தைப் பங்கையும் விஸ்தரித்துள்ளது. துறையில் காணப்படும் முதல் மூன்று தீர்வுகள் வழங்குநர்களில் ஒன்றாக தன்னையும் நிலைநிறுத்தியுள்ளது.

ஜெஸ்டெட்னர் ஒவ் சிலோன் பிஎல்சி, தனது புதிய வர்த்தக குறியீட்டை சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற வைபவத்தின் போது அறிமுகம் செய்திருந்தது. இந்நிகழ்வு ஏப்ரல் 29ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. புதிய வர்த்தக குறியீடு, விறுவிறுப்பூட்டும் வகையில் சிவப்பு மற்றும் நீல நிறங்களில் அமைந்துள்ளது. தெளிவான 'று' எனும் எழுத்தின் மூலமாக நிறுவனத்தின் மூலமாக வழங்கப்படும் முழுமையான தீர்வுகள் வழங்கப்படுவதை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளதுடன், நேர்த்தியான அம்பு ஒன்றின் மூலம் எய்தப்படும் வளர்ச்சி என்பது பிரதிபலிக்கப்படுகிறது.

முன்னொருபோதுமில்லாத வகையில் ஜெஸ்டெட்னர் தன்னைஉயர்ந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது. புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட அணியினருடன், நிறுவனம் சிறந்த பாதையில் வழிநடத்திச் செல்லும் வகையில் செயலாற்றுவதுடன், அனுபவம் வாய்ந்த நபர்களும் நிறுவனத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். ஜெஸ்டெட்னர் மூலமாக அதிகளவு கவனிப்பு மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட. சேவைகள் வழங்கப்படுகின்றன.

சொந்த, ஒப்பந்தமளிக்கப்பட்ட அல்லது தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும், அவற்றின் நாளாந்த காகிதாதிகள் தேவைகளை சிக்கனமாக நிர்வகிக்கும் பொறுப்பை ஜெஸ்டெட்னர் மேற்கொண்டு வருகிறது. புத்தமைவான வன்பொருள்கள் மற்றும் மென்பொருள்கள் முகாமைத்துவம் போன்றவற்றின் மூலமாக வேலை விநியோகம் மற்றும் இலாபங்கள் போன்றன உறுதியளிக்கப்படுகின்றன.

70 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் நம்பிக்கையை வென்ற மற்றும் மதிப்பைப் பெற்ற நிறுவனம் என்பதுடன், துறைசார் முன்னோடியாக திகழும் ஜெஸ்டெட்னர் நிறுவனத்தின் சேவைகளில் உலகின் முன்னணி அலுவலக தன்னியக்க வர்த்தக நாமங்கள் உள்ளடங்கியுள்ளன. அதன் மூலமாக நம்பிக்கை, தங்கியிருத்தல் மற்றும் பணத்துக்கு பெறுமதி போன்றவை வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

நிறுவனத்தின் விரிவடைந்து செல்லும் பொருள்களில் Ricoh, BenQ, Fujit விற் மற்றும் Lenovo போன்றன உள்ளடங்கியுள்ளன. நஷவா லங்கா பிரைவேற் லிமிட்டெட், (ஜெஸ்டெட்னர் ஓஃவ்செட்) மற்றும் ஜெஸ்டெட்னர் பிரின்டிங் சேர்விசஸ் (பிரைவேற்) லிமிட்டெட், (ஜெஸ்டெட்னர் அவுட்சோர்ஸ்) போன்றவை தாய் நிறுவனமான ஜெஸ்டெட்னர் ஒவ் சிலோன் பிஎல்சி நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன.

ஜெஸ்டெட்னர்நிறுவனத்தின்பிரதான வியாபாரப் பொருள்கள் ஜப்பானிய நாட்டு பொருள்களாக அமைந்துள்ளன. இவற்றின் மூலமாக Ricoh சர்வதேச சந்தையில் முதல் தர நிலையைத் தக்க வைத்துள்ளது. புஜிட்சு தயாரிப்புகள் ஜப்பான் நாட்டில் முதல் தர மடிக்கணினிகள் எனும் நிலையைக் கொண்டுள்ளன. அத்துடன் சர்வதேச சந்தையில் முதல் மூன்று நிலைகளில் ஒன்றை BenQ புரொஜெக்டர்கள் கொண்டுள்ளன. உயர்தரம் வாய்ந்த டிஜிட்டல் அச்சிடல் மற்றும் ஓஃவ்செட் அச்சுப்பிரதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக சாதனங்களை விற்பனை செய்வது மற்றும் வாடகைக்கு வழங்குவது போன்ற செயற்பாடுகளை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

10,000 க்கும் அதிகமான தன்னிறைவான வாடிக்கையாளர்களை இலங்கையிலும், மாலைதீவுகளிலும் கொண்டுள்ளது. நிறுவனம் பெரியளவு திட்டங்களை அரச கல்வித் துறையில் வென்றிருந்தது. துறையில் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை நாடு முழுவதிலும் விற்பனை மற்றும் சேவை பிரிவுகளில் கொண்டுள்ளது. அத்துடன், பல்தேசிய நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகளையும் 15 ஆண்டுகளுக்கு மேலாக பேணி வருகிறது. அத்துடன், தடங்கலில்லாத செயற்பாடுகளையும், பொருள்களையும் வழங்கி வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை உறுதி செய்து வருகிறது.

வாடிக்கையாளர்களின் தன்னிறைவை உறுதி செய்யும் வகையில், விற்பனைக்குப் பிந்திய சேவைகளை வாடிக்கையாளர்களின் பகுதிகளுக்கே சென்று வழங்கும் வலையமைப்பை வழங்கி வருகிறது. அத்துடன், ஆகக்குறைந்த உறுதியளிப்பு நேரத்தினுள் சேவைகளை வழங்குகிறது. இதில் பல மொழிகளில் அழைப்புகளுக்கு பதிலளிக்கும் தொலைபேசி நிலையத்தைக் கொண்டுள்ளதன் மூலமாக நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் அமைந்துள்ளது. பிரதான நகரங்களில் காணப்படும் அதிகளவு பயிற்சிகளைப் பெற்ற தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் உத்தரவாத காலப்பகுதியினுள் இலவச சேவைகளையும் வழங்கி வருகிறது. (த)

## குடாநாட்டைக் காப்பாற்றுவார்களா?

சுன்னாகம் மின்சார நிலையத்துக்கு அண்மையில் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஒருவர் கிணற்று நீரில் ஒயில் கலந்துள்ளதன் பாதிப்பு தற்போது தெரியவருவதாக என்னிடம் கூறினார்.
தாம் செய்கை பண்ணிய வாழைப் பயிர்களின் இலைகள் ஒடிந்து விழுவதாகவும், இதனால் தாம் எதிர்பார்க்கின்ற வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதைவிட சிறுபயிர்களும் பாதிப்பை எதிர்கொள்ளப் போவதால் தமது விவசாய முயற்சிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படப் போவதாகவும் அந்த விவசாயி தெரிவித்தார்.
இதையெல்லாம் கேட்கும்போது குடாநாட்டின் எதிர்காலம் குறித்து கடும் வேதனை ஏற்படுகின்றது. கழிவு ஒயிலால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மட்டுமல்ல, வேறு பாதிப்புக்களும் ஏற்படுமென்பது தெளிவாகத் தெரிகின்றது. குடிதண்ணீரை அங்கிருந்து கொண்டு வருவோம். இங்கிருந்து கொண்டு வருவோம் எனக் கூறுகிறார்களே தவிர, உருப்படியான எந்தவொரு காரியமும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. அரசியல்வாதிகளும் சரி. அரச அதிகாரிகளும் சரி மக்களின் இன்னல்களைக் களைவதற்கு நடவடிக்கைமேற்கொள்வது அவசியமாகும். அதுவும் பேரிடர் ஒன்று சூழ்ந்துள்ள நிலையில் துரிதமாகச் செயற்பட்டு மக்களின் துயரைத் துடைக்க வேண்டும்.
இனியும் காலம் கடத்திக் கொண்டே போனால் குடாநாட் டின் நிலைமை சீர்செய்ய முடியாத ஒன்றாக மாறிவிடும்.
மேலும் குடாநாட்டில் வசிக்கும் மக்கள் இந்த நிலை நீடிக்குமானால் தமக்குத் தேவையான மரக்கறி வகைகள் , வாழைப்பழம் ஆகியவற்றை வெளியிடங்களில் இருந்தே தருவிக்க வேண்டிய நிலை தோன்றிவிடும். ஆகவே குடாநாட்டு நிலத்தடி நீரை ஒயில் கழிவு இன்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டிய நடைமுறைத் திட்டங்கள் உடனடியாக வகுக்கப்பட வேண்டும். அவ்வப்போது கூட்டங்கள் நடத்துவதும் அறிக்கை வெளியிடுவதும் இந்தப் பிரச்சினைக்கு ஒருபோதுமே நிரந்தரமான தீர்வைத் தந்துவிடாது. இது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை என்பதால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியெ தருணம் இதுதான்.

*சு.மகேந்திரன்,*
*உடுவில்*





## ஜனநாயகத்துக்கு விரோதமானது

நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள பெரும்பான்மையின மக்களின் குடியேற்றத் திட்டத்தில் பௌத்த விகாரையயான்று அமைக்கப்பட்டு, பௌத்த சாசன அமைச்சின் கீழ் பதிவுகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகின்றது.
நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் கடந்த 2010ஆம் ஆண்டு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் குடியேறினார்கள். பௌத்த விகாரை ஒன்றையும் அமைத்தனர்.
நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த போர் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களில் கணிசமானவர்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். போர் ஓய்ந்து சுமார் ஆறு வருடங்கள் பூர்த்தியடைந்த நிலையிலும், இவர்களின் துயரங்களுக்குத் தீர்வு காணப்படவில்லை. ஆனால் எந்த முகாந்திரமும் இன்றி பெரும்பான்மையின மக்கள் தாம் நினைத்தவாறு குடியேறுவதற்கும் வழிபாட்டுத் தலத்தை அமைப்பதற்கும் அரசு பூரண ஆதரவு வழங்கி வருகின்றது.
நாவற்குழி யாழ்.நகரத்தினுள் உள் நுழைவதற்கான ஒரு பிரதான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு பாரம்பரியமாகத் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் பெரும்பான்மையின மக்களின் வரவு எதிர்காலத்தில் ஏதோவொரு காரணத்தினால் இனங்களுக்கு இடையில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கக் கூடும். இந்த நாட்டின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இது தெரியவரும்.
தற்போது நாவற்குழியில் ஐந்து குடும்பங்கள் மட்டுமே வசிப்பதாகவும், எழுபத்திரண்டு குடும்பங்கள் பதவுகளை மேற்கொண்டிருப்பதாகவும் பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது.
தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களில் மீள்குடியமர்வதற்கு உரிமை மறுக்கப்பட்ட நிலையில், எங்கிருந்தோ வந்தவர்கள், தாம் விரும்பிய இடத்தில் குடியேறுவதும் அதற்கு அரசு ஆதரவு நல்குவதும் ஜனநாயகத்துக்கு விநோதமானது.

*மா.செல்வன்,கைதடி.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## மைத்திரி-மஹிந்த பேச்சு எழுப்பும் சந்தேகங்கள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்று முடிந்துள்ளது. இந்தச் சந்திப்புத் தொடர்பாகப் பல்வேறு ஊகங்கள் எழுப்பப்பட்டு வந்த நிலையில் சந்திப்பும் முடிவடைந்துவிட்டது.
ஆயினும் இந்தச் சந்திப்புத் தொடர்பில் இரு தரப்பினரும் அடக்கி வாசிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஊடகங்களின் கேள்விகளில் இருந்து தப்புவதற்காக இரு தரப்பும் சில தகவல்களை வெளியிட்டாலும் அவற்றில் உண்மை இல்லை என்று கூறுகின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.
இந்தச் சந்திப்பில் மஹிந்த தெரிவித்த கருத்துக்கள் அனைத்துக்கும் ஜனாதிபதி எதிர்க் கருத்துக்களையே வெளிப்படுத்தியதாகவும். மஹிந்தவின் கோரிக்கைகளை அவர் அடியோடு நிராகரித்துக் கடும் போக்குடன் நடந்து கொண்டதாகவும், இதனால் மஹிந்த சந்திப்பை முடித்து வெளியேறும்போது இறுகிய முகத்துடன் சென்றதாகவும் அங்கிருந்தவர்கள் மூலம் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதனால் இந்தப் பேச்சு மஹிந்தவைப் பொறுத்த வரை பெரும் தோல்வி என்றே அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. மீண்டும் அரசியலுக்குள் நுழையும் கனவுடன் இருந்த மஹிந்தவுக்கு இந்தச் சந்திப்பு மூலம் அந்தக் கனவை மறந்துவிடும்படி கோடி காட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.
இந்தச் சந்திப்பின்போது 5 பிரதான அம்சங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு தொடர்ந்து இருதரப்பினரும் சந்தித்துப் பேசவும் உடன்பாடு காணப்பட்டதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.
இரு தரப்பு சந்திப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான விடயங்களே பிரதானமாக ஆராயப்பட்டன என்று சு.க வட்டாரங்கள் கூறுகின்றன . அடுத்த பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளர், உள்ளூராட்சிச் சபைகளைக் கலைத்தல், அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாகப் போட்டியிடுதல், வேட்பாளர்களுக்கு வேட்பு மனு வழங்குதல், விசேட் குற்ற விசாரணைப் பிரிவு அரசியல் மயமாக்கப்பட்டுச் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகிய ஐந்து விடயங்கள் குறித்து இதன்போது கவனத்திற் கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.
இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, துமிந்த திசாநாயக்க, எம்.கே.டி.எஸ். குணவர்த்தன, பைசர் முஸ்தபா ஆகியோரும், முன்னாள் ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷவுடன் முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, குமார வெல்கம, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், மஹிந்தானந்த அளுத்கமகே, டலஸ் அழகப்பெரும, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ர்ணதுங்க ஆகியோரும் பங்கேற்றனர். இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, சு.க செயலாளர் அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.
இங்கு ஆராயப்பட்ட சகல விடயங்களையும், அடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் ஆழமாக ஆராயவும் இதன்போது உடன்பாடு காணப்பட்டது. அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காக எதிர்காலத்தில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.
ஆனாலும் இந்தச் சந்திப்புக் குறித்து ஐ.தே.க அதிக அச்சம் கொண்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு மைத்திரியும் மஹிந்தவும் இணைந்து திட்டமிடுவதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளன.
ஜனாதிபதி மைத்திரிபால , முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் சந்தித்து நடத்தும் பேச்சை, ரணிலை விரட்டியடிக்கும் ஒரு முயற்சி என்று சு.க பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்திருந்தார்.இந்தச் சந்திப்பின் நோக்கம் இதுவென்றால் இதற்கு நாம் ஒருபோதும் உடன்பட முடியாது. மஹிந்தவின் காலம் முடிந்து விட்டது. அவர் இனி ஓய்வு பெற்று வீடு போகவேண்டும். மஹிந்த இல்லாத சு.கவுடன் இணைந்து செயல்பட நாம் தயார். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ உள்வாங்கப்படும் எந்த ஒரு ஏற்பாட்டுக்கும் இந்நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் உடன்படமாட்டார்கள். எனவே இந்த பேச்சின் நோக்கம் ஒருமுறை பிரதமராகவும், இரு முறை ஜனாதிபதியாகவும் பதவி வகித்த மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புவதாகவே இருக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவரான மனோ கணேசன் கூறியுள்ளார்.
ரணிலை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு இவர்கள் திட்டமிடுகிறார்களோ என்ற சந்தேகம் ஐ.தே.கவுக்கும் ஏனைய சில கட்சிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் தான் மனோ கணேசன் இவ்வாறு கூறியிருக்கிறார். மஹிந்தவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காக மைத்திரியை வேட்பாளர் ஆக்கியது ஐ.தே.க. தான் என்பதையும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.
இந்தச் சந்திப்புக் குறித்து யாரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்றும், ரணிலை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டேன் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருக்கிறார். சு.க. கட்சி சார்பான விடயங்களே இதில் பேசப்பட்டதாக அவர் கூறியிருக்கிறார்.
எது எவ்வாறாயினும், இந்தச் சந்திப்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது என்பது மட்டும் உண்மை. இந்தச் சந்திப்பை எதிர்காலத்தில் தொடர உள்ளதாக சு.க. வட்டாரங்கள் கூறினாலும் முதல் சந்திப்பே மஹிந்தவுக்கு முகத்தில் அடித்தால் போல இருந்தமையால் தொடர்ந்து பேசுவதற்கு அவர் முன்வருவாரா என்பதும் கேள்விக் குறியே.

**பத்தி எழுத்து**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பின் அரசியல் மேகத்தில் வாடை, சோளகக் காற்றுகள்......

● சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது போலவே, தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், நாம்அதிக முக்கியத்துவம் வழங்குகின்றோம். எங்கள் நாட்டில் முப்பத்தொரு சதவீதமான சிறுபான்மையினர் வாழ்கின்றனர். அவர்களை பாதுகாத்தால் மட்டுமே ஒன்று பட்ட ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்ப இய லும். இதனை, ஐக்கிய தேசியக் கட்சியினரான நாம், மிக மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளோம்.

● ஐக்கிய தேசியக் கட்சி, எப்போதுமே ஜனநாயக ஆட்சியை விரும்புகிறது. அந்த வகையில், மூவின மக்களும் ஒன்றுபட்டு உழைக்கும் அரசையே அது விரும்புகிறது.

● அத்தோடு, எமது ஆட்சியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில், வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

● வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம் மீளக் கையளித்து வருகிறோம். கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு காணிகளைக் கையளித்துள்ளோம்.

-- முன்னைய அரசு வழங்கியதை விடவும் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கடந்த மூன்று மாதங்களில் மட்டும்600 மில்லியன் ரூபாவை, நிவாரண நிதிக்கென, ஒதுக்கி உள்ளோம்

மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருப்பவர், பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல. அவர் அத்தோடு தரிக்கவில்லை. அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் நிறைவேற்றபட்டமை, ஜனநாயக ஆட்சிக்கான நல்லதோர் ஆரம்பம் என்றும் சிலாகித்துள்ளார். அது ஜனநாயகத்துக்கான நல்ல திருப்புமுனை என்றும் எடுத்துக் காட்டி உள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், அவர் மேற்போந்த கருத்துக்களை, வெளியிட்டிருந்த போதிலும் --

பதவியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள், சிறுபான்மை இன மக்கள் நலன்நாடிய செயற்பாடுகள், எவ்வாறு அமையும் என்பதைத் தொட்டுக் காட்டுவதற்கேனும் அவர் மறந்து விட்டார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நாட்டில் மாற்றங்கள் தொடரும் என்றும், இளைஞர், யுவதிகளுக்கு பத்து லட்சம் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு வழிபிறக்கும் என்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர், அனுமானமாக விளாசித் தள்ளியுள்ளார்!

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் நிரந்தரமான அரசு அமையும் என்று ஆரூடமும் கூறி உள்ளார் அவர்.

எனினும் --

தமிழ் பேசும் மக்களையும் ஒன்றிணைத்துப் பயணித்தால் மட்டுமே, ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்ப இயலும் என்றும் அமைச்சர் கூறியிருப்பது வாத்ஸவம் தான்.

ஆனால்.......

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிவிட்டார்ல், இரண்டு சிறுபான்மை இன மக்களின் பிரிக்க முடியாத அரசியல், வாழ்வியல் உரிமைகளை வழங்குமா?

அதற்கான அரசியல் நேர்மையும், ஓர்மமும், சிங்கள அரசியல் தலைவர்களிடம், இந்தப் பூமி தலைகீழாகப் (upside down) புரண்டாலும் பிறக்குமா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.....

இலங்கைக்குப் பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த பின்னர், அத்தகைய நல்லெண்ணம் பெரும்பான்மை இனத்தவரிடம் முற்றாகச் சிதைந்து போய்விட்டதால், சவர்க்காரப் பெட்டிப் பேச்சுக்களை, தமிழ் மக்கள் இனியும் உள்ளே விழுங்கமாட்டார்கள்.

தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் இதனை மனதிருத்தி, தம்மைத் திருத்திக் கொள்வது எப்போது?

மொத்தத்தில் தேர்தல்வரும் வேளையில் தினம் தினம் நாலாபக்கமும் இருந்தும், இத்தகைய வாடை, சோளகக் காற்றுகள் மாறி மாறி வீசுவது வழக்கமே! அமைச்சரின் மேற்சொன்ன கருத்தையும் அவற்றில் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்!!



# பயனில்லாத வகையில் நடந்தேறிய மஹிந்த – மைத்திரி சந்திப்பு

■ வந்தியத்தேவர்

இன்றைய அரசியல் சூழ்நிலையால், அரசியல்வாதிகள் பலர் ஆடிப்போயுள்ளனர். மைத்திரிபால சிறிசேனவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையிலான பேச்சுக்களில் ஒரு இணக்கப்பாடுஎட்டப்படுமானால், எங்கே தமது அரசியல் எதிர்காலம் காலியாகி விடுமோ என மஹிந்த புராணம் பாடிக் கொண்டிருந்த விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன, 'உதய கம்மன்பில போன்ற பலர் ஒரு பக்கம் கலக்கத்தில் இருக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரியும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் சந்தித்துப் பேசினார்கள் என்ற தகவல் வெளியான வேளை முதல், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவும் மன முடைந்து போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தேசிய அரசு அமைக்கக் கூடாது. சுதந்திரக்கட்சி தலைமையில் ஐ.ம.சு. கூட்டமைப்பின் ஊடாகவே அரசொன்று அமைக்கப்பட வேண்டும் என்றநிபந்தனைகளைஏற்றுக்கொண்டால் மட்டுமே பேச்சு வார்த்தைக்கு உடன்படுவதாக மஹிந்த நிபந்தனைகள் விதித்ததாகவும் இவை ஏற்றுக்கொள்ளப்பட்டால் தேர்தல் பரப்புரைக்கு மஹிந்த ஆதரவளிப் பார் என்றும் கூறப்பட்டது. மஹிந்த அரசில் சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிக்கு கனவில் மிதந்த வரல்ல. ஆனால் ஆயுள் காலமும் ஆட்சித் தலைவராக இருக்க வேண்டும் வேண்டும் என்ற கனவில் மிதந்தவர் மஹிந்த. அவருக்கு எதிராக ஒருவரை நிறுத்தி மஹிந்தவைத் தோற்கடிக்க வேண் டும் என்பதில் தீவிரமாக இருந்தவர் சந்திரிகா பண்டார நாயக்கா. ஜனாதி பதிக்குத் தெரியாமல் மட்டுமன்றி வெளியிலே தமது நடவடிக்கைகள் எதுவிதத்திலும் கசிந்து விடாத வகையில் நுட்பமாகக் காய் நகர்த்தி மைத்திரி ஜனாதிபதியாவதற்குக் காரணமாயிருந்த முக்கிய பிரமுகர் அவர். மைத்திரிபால சிறிசேன தன்னுடன் முரண்பாடுகள் கொள்ளமாட்டார் என்ற அவரது நம்பிக்கை தற்போது சிறிது ஆட்டம் கண்டுவிட்டது போன்று தெரிகின்றது. மைத்திரி – மஹிந்த சந்திப்பு அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

நாம் மார்க்கும் குடியல்லோம்

> **ஜனாதிபதிக்குத் தெரியாமல் மட்டுமன்றி வெளியிலே தமது நடவடிக்கைகள் கசிந்து விடாத வகையில் நுட்பமாகக் காய்நகர்த்தி மைத்திரி ஜனாதிபதியாவதற்குக் காரணமாயிருந்த முக்கிய பிரமுகர் அவர். மைத்திரிபால சிறிசேன தன்னுடன் முரண்பாடுகள் கொள்ளமாட்டார் என்ற அவரது நம்பிக்கை தற்போது சிறிது ஆட்டம் கண்டுவிட்டது போன்று தெரிகின்றது.**

என்று அப்பர் சுவாமிகள் அருளியிருந்ததை மைத்திரி ஞாபகத்தில் எடுத்துள்ளார் போல் தெரிகின்றது. அதனால் போலும் என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது என்று கூறியுள்ளார். ஜனாதிபதியாக எனக்குச் சந்தர்ப்பத்தை வாங்கித் தந்ததற்காக நான் எவருக்கும் கட்டுப்பட முடியாது என்பதை சந்திரிகாவுக்கு மட்டுமன்றி ஆதரவளித்த ஐ.தே. கட்சித் தலைவர் ரணிலுக்கும், ஏனையோருக்கும் உணர்த்தியுள்ளார். பேச்சுவார்த்தையில் என்னென்ன விடயங்கள் முன் வைக்கப்பட்டன என்ற விடயங்கள் பூரணமாக வெளியாகவில்லையென்றாலும், தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக சுதந்திரக் கட்சி சார்பில் மஹிந்தவை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை நிராக ரிக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சிக் கும் ஐ.தே. கட்சிக்கும் தேசிய அரசு என்ற முறையில் இருக்கும் உறவு ஒன்றும் இறுக்கமானதல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதில் கூட கருத்தொற்றுமை இருந்த தில்லை. சுதந்திரக் கட்சியைத் தோற்கடித்து, பிரதமர் பதவியைப் பிடிக்க வேண்டும் என்பதற்கான காய் நகர்த்தலிலேயே ரணில் கவனமாக உள்ளார். ஜனாதிபதி மைத்திரி சுதந்திரக் கட்சியின் வெற்றியிலேயே கவனம் செலுத்துகின்றார். இதனால் மைத்திரி! மஹிந்த சந்திப்புக் குறித்து மக்களிடையே எதிர்பார்ப்பும் பரபரப்பும் காணப்படுகின்றது.

மைத்திரி – மஹிந்த சந்திப்பை நல்லாட்சிக்கும் சர்வாதிகாரத்துக் கும் இடையிலான ஒரு சந்திப் பாகவே கருத முடியும். மஹிந் தோ தய பெயர்ப் பலகைகளை அழித்து விட்டாலும், பொது மக்கள் மனதில் இருந்து மஹிந்த என்ற பெயரை அழிக்க முடியாது என்ற ஆணவம் மஹிந்தவிடம் உள்ளது.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை தமிழ்த் தலைவர்கள் இப்போது வெளியிட்டுள்ளனர். கல்வி, சுகாதாரம் உட்பட ஏனைய தேவைகள் அபிவிருத்திகளை உள்ளடக்கியதாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசு முன்வர வேண்டும் என்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். இந்த நிலையில் தமிழ் மக்களுக்காக எதையுமே விட்டுக் கொடுக்கத் தயாரில்லாத மஹிந்தவுடன் பேசும் மைத்திரியால் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்துப் பேசி சாதகமான கருத்தை உடன்பாட்டை எட்ட முடியுமா? இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனங்களை இல்லாதொழித்து, தமிழர் நிலங்களில் சிங்களவர் களை குடியேற்ற முயற்சித்தவர் மஹிந்த. ஒரே தேசம் ஒரே மக்கள் என கூவிக் கொண்டு பௌத்த நாடு சிங்கள மக்கள் என்ற கருத்தை விதைத்தவர் அவர். ஒன்றுபட்ட இலங்கையில் அனைத்து மக்களும் சுபீட்சமாக வாழ வேண்டும் என்பதே தனது கேட்பாடு எனத் தெரிவிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் எப்போதுமே ஆட்சி அதிகாரத்தை விரும்பும் மஹிந்தவுடன் பேசி அனைத்து மக்களும் ஏற்றுக்கொள் ளக் கூடிய ஒரு தீர்வைக் காண முடியுமா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நலனுக்காகவும் மஹிந்தவின் விருப்புக்களுக் கும் மட்டுமே மைத்திரி– மஹிந்த சந்திப்பு என்றால் அது எதற்கும் இப்போது அவசரமாக?

# பொன்சேகாவின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது?

● சேரலாதன்



அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள தமது கிராமத்து வீட்டில் சாரமும், ரீசேட்டும் அணிந்தவாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமர்ந்திருந்த காட்சி தமது கண்களை உறுத்தியாக பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார். பொன் சேகாவின் கூற்றைக் கேலியாகக் கூறப்பட்ட ஒன்றாகவே கொள்ள வேண்டும். ஏனென்றால் மஹிந்தவினால் மோசமாகப் பழிவாங்கப்பட்டவர்களில் பொன்சேகா முக்கியமானவர். இராணுவ உயர் பதவிக்குரிய பதக்கங்கள் பறிக்கப்பட்டு, ஓய்வூதிய உரிமைகளை இழந்து, அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத சிறையில் அடைத்து வைக்கப்பட்டு பொன்சேகா மஹிந்தவினால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். அதிகாரமும், ஆணவமும், பழிவாங்கும் எண்ணமும் தலைக்கேறிய நிலையில் காணப்பட்ட மஹிந்த, பொன்சேகாவை ஒரு சிறு துரும்பாகக்கூட மதிக்கவில்லை.

பொன்சேகா யாழ். கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்தபோது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் முயற்சிகள் இடம்பெற்றன. பொதுமக்களின் காணிகளை அபகரித்து உருவாக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றக்கூடாது என்பதில் அவர் கண்டிப்பாக நடந்து கொண்டார். இறுதிப்போரின்போது தமிழ் மக்கள் எதிர்கொண்ட பேரவலங்களுக்கு இவரும் பொறுப்புக்கூற வேண்டிய நிலையில் உள்ளார். மேலும், எப்போதுமே தம்மை ஒரு சிங்கள பௌத்தராக இனம் காட்டிக்கொள்ளும்பொன்சேகா, சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்து வந்துள்ளார்.

தமிழர்கள் எதையும் கேட்டுப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் அல்லர். பெரும்பான்மை இனத்தவர் விரும்பித் தருவதை ஏற்றுக்கொள்வதன் மூலம் அவர்கள் திருப்தி அடைந்து கொள்ள வேண்டும் என அவர் ஒருமுறை தெரிவித்தார். இது தமிழ் மக்களின் மனங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்த கோத்தபாய ஆகியோரின் அறிவுரைகளுக்கேற்ப அப்போதைய இராணுவத் தளபதியான பொன்சேகா தமிழர்களுக்கு எதிரான இறுதிப் போரை வழிநடத்தினார். ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதே அவரது முழுநோக்கமாக இருந்தது. கொல்லப்படுவது தமிழர்கள்தானே என்ற அலட்சியப் போக்கும் அவரிடம் காணப்பட்டது. இதனால் வரலாறு காணாத பேரழிவைத் தமிழர்கள் எதிர் கொண்டனர்.

ஆனால் போர் ஓய்ந்த பின்னர் அதன் வெற்றிக்கு உரிமை கொண்டாடுவதில் பங்காளிகளிடையே பிணக்கு ஏற்பட்டது. தமிழர்களின் அழிவைச் சுட்டிக்காட்டி பெரும்பான்மை மக்களிடத்தில் செல்வாக்கைப் பெறுவதில் போட்டா போட்டியும் ஏற்பட்டது. இதுவே ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவும், பொன்சேகாவும் மோதிக் கொள்ளும் அளவுக்குக் கொண்டு போய் விட்டது. ஜனாதிபதி என்ற வகையில் சகல வளங்களையும் கொண்டிருந்த மஹிந்த, இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் தானே வெற்றி பெற்றதாகவும், தனது வெற்றி மஹிந்தவினால் பறிக்கப்பட்டதாகவும் பொன்சேகா பகிரங்கமாகவே குற்றம் சுமத்தினார். இவரது குற்றச்சாட்டுக்கள் கருத்தில் எடுக்கப்படவில்லை. மாறாக சிறைத்தண்டனையே பரிசாகக் கிடைத்தது.



## மஹிந்த மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமர்ந்தால்

> “
> **முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்த கோத்தபாய ஆகியோரின் அறிவுரைகளுக்கேற்ப அப்போதைய இராணுவத் தளபதியான பொன்சேகா தமிழர்களுக்கு எதிரான இறுதிப் போரை வழிநடத்தினார். ஆட்சி யாளர்களைத் திருப்திப்படுத்துவதே அவரது முழுநோக்கமாக இருந்தது. கொல்லப்படுவது தமிழர்கள்தானே என்ற அலட்சியப் போக்கும் அவரிடம் காணப்பட்டது. இதனால் வரலாறு காணாத பேரழிவைத் தமிழர்கள் எதிர் கொண்டனர்.**

இன்று காட்சிகள் யாவுமே இங்கு மாறிவிட்டன. மஹிந்தவைப் பார்த்து பொன்சேகா இரக்கம் கொள்ளும் அளவுக்கு மஹிந்தவின் நிலைமை பரிதாபகரமான கட்டத்துக்குச் சென்றுவிட்டது. மஹிந்த ஆட்சி அதிகாரத்தை மட்டும் இழக்கவில்லை. மதிப்பையும், மரியாதையையும் இழந்து குற்ற விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இவரால் பழிவாங்கப்பட்ட பொன்சேகா ஜனாதிபதியின் கருணையால் இழந்த யாவற்றையும் திரும்பப் பெற்றுள்ளதுடன் பீல்ட் மார்ஷல் என்ற உயர் கௌரவத்தைப் பெற்று அந்தஸ்தில் உயர்ந்து நிற்கின்றார்.

தான்விட்ட தவறுகளை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொள்பவன் என்றோ ஒருநாள் மன்னிக்கப்படுவான். காலப்போக்கில் சமூகம் அவனை ஏற்றுக்கொள்ளும். ஆனால் முன்னாள் ஜனாதிபதியின் விடயத்தில் இது நடக்கவில்லை. அவர் தாம் புரிந்த தவறுகளை மறுத்து வருவதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றார். மக்களிடம் அனுதாபத்தைத் தேடும் முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இவரது ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டில் என்ன நடந்தது என்பது தெரிந்திருந்தும் ஒருசாரார் மஹிந்தவுக்கு ஆதரவாக இருப்பதையும் காணமுடிகின்றது. மக்களின் இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்துவதன் மூலமாக மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமர முடியுமென்ற நம்பிக்கை இந்த முன்னாள் சர்வாதிகாரியிடம் நிறையவே உண்டு. ஆனால் பொன்சேகாவைப் பொறுத்தவரையில் அவர் அரசியலில் பிரகாசிப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. அவர் தனிக்கட்சி ஆரம்பித்த போதிலும் அதற்கான ஆதரவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆகவே மஹிந்தவுக்கு எதிரான அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியே இல்லை. ஒரு வேளை மஹிந்த ஆட்சிக் கதிரையில் அமர்ந்து விடக்கூடிய நிலை ஒன்று உருவாகுமானால், பொன்சேகாவின் கதி என்னவாகுமோ தெரியவில்லை.


ஆகவே, மஹிந்தவின் தற்போதைய நிலை தொடர்பாக பொன்சேகா இரக்கவுணர்வை வெளிக்காட்டுவதை விடுத்து தமது எதிர்காலம் தொடர்பாகச் சிந்திப்பதே பொருத்தமுடையதாக இருக்கும். மஹிந்தவுக்கும் – பொன்சேகாவுக்கும் இடையிலான இழுபறி இன்னமும் முடிவடையவில்லை. நீடிக்கத்தான் போகின்றது.

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 600 | 700 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 550 | 500 | 500 | 600 | 450 |
| பாரை | 550 | 500 | 500 | 450 | 600 | 360 |
| சுறா | 500 | 450 | 500 | 650 | – | 400 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 450 | 320 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 500 | 350 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 350 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 350 | 400 | 300 | – |
| கிழாக்கன் | 550 | 650 | 350 | 400 | – | – |
| ஒரா | 400 | 300 | 350 | 350 | – | – |
| திரளி | 150 | 250 | 250 | 300 | 300 | – |
| நகரை | 150 | 250 | – | 300 | – | 300 |
| ஆடை | 150 | 150 | 400 | 120 | 150 | 140 |
| ஓட்டி | 300 | 150 | 250 | 300 | 400 | 150 |
| திருக்கை | 150 | 300 | 300 | 250 | 200 | 140 |
| பாலை | 350 | 300 | 280 | 400 | 400 | – |
| வாளை | 100 | 150 | – | 350 | – | 250 |
| ஸொய் | 100 | 150 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | 200 | 250 |

# தேங்காயில் புதைந்துள்ள சத்துகள்

தேங்காய் சேர்க்காத குழம்பு வகைகள் குறைவு. அதில் இருந்தே தேங்காயின் பெருமையை புரிந்து கொள்ளலாம். தென்னை மரத்தின் கனிதான் தேங் காய் என்றாலும் அது பருப்பு வகையோடு பிரித்து அறியப்படுகிறது. தேங்காயில் பல அத்தியாவசிய சத்துக்கள் அடங்கியுள்ளன. அதிக ஆற்றல் வழங்கக்கூடி யது. வைட்டமின்கள், தாதுக்கள் மிகுதியாக கிடைப்பதால் முழு உணவாகவே தேங்காயைச் சாப்பிடலாம். மனிதனுக்கு அழ கும் ஆரோக்கியமும் தரும் உணவு தேங்காய். அருந்திய உடனேயே புத்துணர்ச்சியை அளிக்கக் கூடியது, இளநீர். அசைவ உணவு சாப்பிடாதவர் கள், கண்டிப்பாக தேங்காயை சாப்பிட வேண்டும். ஏனெனில், தேங்காயில் கொழுப்புச் சத்து, புரதம், தாது, டன்டனிக் அமிலம், விற்றமின் ஈ மற்றும் நீர்ச்சத்தும் உள்ளன. சராசரியாக 400 கிராம் உள்ள தேங்காயை சாப்பிட்டு தண்ணீர் பருகினால், இறைச்சி உண்பதற்கு நிகரான ஆற்றல் கிடைக்கும். அதாவது அன்றைய தினத்திற்கு உடலுக் குத் தேவையான தாது உப்புக் கள், வைட்டமின்கள் மற்றும் ஆற்றலை உடலுக்கு வழங்கி விடும். அதிக அளவில் கொழுப் புச்சத்தும், புரதச்சத்தும் தேங் காயில் நிறைந்துள்ளன. 100 கிராம் தேங்காய் பருப்பு 354 கலோரிகள் ஆற்றல் வழங்கக் கூடியது. மற்ற பருப்பு, கொட்டை வகைகளைவிட அதிக அளவில் பூரிதமாகும் கொழுப்புகளைக் கொண்டுள்ளது. ஆரோக்கிய மான வாழ்க்கைக்கு தேவை யான அனைத்து சத்துகளும் தேங்காயில் அடங்கி உள்ளது. நீரிழிவுக்கு தேங்காய் மிகவும் பயன்தரக் கூடியது. புதிய இளநீரில் உள்ள நீரானது நீரிழிவு நோயை போக்கக் கூடியது. தாய்ப் பாலுக்கு இணையானது. தேங்காய் எண்ணெய் உடலை குளிர்ச்சியுடன் பாதுகாக்கும். உடலில் உள்ள திசுக்களுக்கு புத்துயிர் ஊட்டுவதில் தேங்காய்க்கு நிகர் தேங்காய் தான். தேங்காய் பாலை மலமிளக்கியாகவும் சிறுநீர் கோளாறுகளுக்கும் எலும்புருக்கி நோய்க்கும் பயன்படுத்துகின்றனர்.



# ஞானச்சுடர்



## ஆன்மிகச் சிந்தனை

கஷ்டங்களும், தடைகளும் அதிகமாக இருக்கும்போது தான் விடாமுயற் சியும் அதிகம் தேவைப்படுகிறது. இறைவனது கருணையால் எல்லாம் சாதகமாகவே அமைகின்றன. இறை வனைச் சரணடைந்து அவனது நினைவில் நாள்களைக் கழித்து வாருங்கள். அதனால் எல்லா நலன் களும் உண்டாகும். இதில் சந்தேகம் இல்லை. மேலும் மனமுருகிப் பிரார்த் தனையும் செய்ய வேண்டும்.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உண்மைக்குப் பயமில்லை

கைம்மாறு கருதாமல் பிறருக்கு உதவுபவனே உயர்ந்த மனிதன். ஆன்மிகத்தில் நாட்டம் வைத்தால் உண்மையான இன்பத்தை அடையலாம். உண்மையைப் பின்பற்று பவர்கள் யாரிடமும் பயப் படத்தேவையில்லை. மனத்தூய்மை இருக்குமானால், இந்தப் பிறவி யிலேயே கடவுளை அடைய முடியும்.

ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற சக்தியும், தூய் மையும், மகிழ்ச் சியும் நிறைந்திருக்கின்றன. நீங்கள் எதை நம்புகிறீர்களோ, அதுவாகவே மாறி விடுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 5 | | 4 | | | |
| 2 | | | 7 | | | | | 9 |
| 9 | 5 | 8 | | | 3 | 7 | | |
| 4 | | | | 3 | 1 | 6 | | 5 |
| | | 6 | | | | 3 | | |
| 8 | | 5 | 9 | 7 | | | | 2 |
| | | 1 | 6 | | | 8 | 7 | 3 |
| 3 | | | | | 2 | | | 6 |
| | | | 3 | | 7 | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 5 | 6 | 8 | 2 | 7 | 3 |
| 7 | 6 | 3 | 9 | 4 | 2 | 5 | 1 | 8 |
| 2 | 5 | 8 | 1 | 3 | 7 | 9 | 4 | 6 |
| 8 | 9 | 1 | 7 | 5 | 4 | 3 | 6 | 2 |
| 4 | 3 | 7 | 6 | 2 | 9 | 1 | 8 | 5 |
| 5 | 2 | 6 | 8 | 1 | 3 | 7 | 9 | 4 |
| 9 | 7 | 4 | 3 | 8 | 5 | 6 | 2 | 1 |
| 6 | 8 | 5 | 2 | 9 | 1 | 4 | 3 | 7 |
| 3 | 1 | 2 | 4 | 7 | 6 | 8 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நாளை

## சித்திரை-26 சனிக்கிழமை 09.05.2015

திதி: சஷ்டி பி.இ. 05.30 வரை

நட்சத்திரம்: பூராடம் மு.ப.11.46 வரை

சுபநேரம்: 02.54-04.24 வரை

இராகுகாலம்: 08.54-10.24 வரை

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 60 | 60 | 30–80 | 60 | 50 |
| கத்தரி | 70 | 60 | 70 | 100 | 70–80 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 120–160 | 120 | 100–120 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40–50 | 60 | 60 |
| பயிற்றை | 60 | 60 | 60–80 | 40 | 70–80 | 40 | 100 |
| பாகல் | 100 | 100 | 120 | 100 | 80–100 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | – | 90 | 80 | 50–60 | 100 | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 120 | 120 | 100 | 90–100 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 70 | 60–100 | 60–100 | 80 | 60–80 | 80 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 25–30 | 40 | 40 |
| தக்காளி | 80 | 100 | 70–100 | 80 | 60–80 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 40 | 40–60 | 40 | 60 |
| கீரை | 20 | 40–50 | 30 | 10 | 20–30 | 40 | 35 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 40 | 20–30 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 40 | 60 | 40 | 50 | 35–40 | 80 | 80 |
| புடோல் | 70 | 50 | 60 | 60 | 40–60 | 60 | 60 |
| கோவா | 40 | 50 | 30–50 | 50 | 30–40 | 80 | 80 |
| வெண்டி | 100 | 50 | 60–100 | 80 | 80–100 | 60 | 60 |
| போஞ்சி | 140 | – | 160 | 160 | 120–140 | 180 | 140 |
| லீக்ஸ் | 180 | 160 | 160 | 160 | 160–180 | 200 | 120 |
| தேங்காய் | 60 | 25–40 | 60 | 50 | 40–60 | 60–70 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 90–100 | 120 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 170 | 250 | 200–220 | 180 | 120 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30–40 | 20 | 20 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 | 80 | 50–60 | 120 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 120 | 100–120 | 140 | 160 |

# பெண்கள் எத்தகையவர்கள்..



ஆண், பெண் என்ற பிரிவெல்லாம் இப்போது போயே போச்சு! ஆணுக்குரிய அனைத்து வேலைகளையும் பெண்கள் செய்கின்றனர். ஆனால் பெண்ணுக்குரிய அனைத்து குணங்களையும் ஆண்கள் பெற்றிருக்கின்றனரா என்றால் அதுதான் இல்லை என்கிறது ஓர் உளவியல் ஆய்வு. எந்த இடத்திலும், எந்தச் சூழ்நிலையையும் தனக்கு ஏற்றாற்போல் மாற்றிவிடும் பக்குவமும், திறமையும் பெண்களுக்கு மட்டுமே உண்டு. எவரையும் பார்த்த மாத்திரத்தில் அவர்களின் குணங்களை ஓரளவு புரிந்து விடும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் வசீகரமும் பெண்களிடம் இருந்தால் இன்னும் சிறப்பு. அழகும், அறிவும், அடுத்தவர்களைப் புரிந்து கொள்ளும் குணங்களும், நல்ல பழக்க வழக்கங்களும் உள்ள பெண்களுக்கு எப்போதுமே முன்னேற்றம் என்பது தொட்டு விடும் தூரம்தான்.

> “ உடல் ஆரோக்கியத்துக்கான விடயங்களிலும் ஆண்களை விட பெண்களே சிறந்து விளங்குகின்றனர் என்கின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள்.

குழந்தைகள் மீதான விருப்பம், ஆண்மைக்குரிய விடயங்கள், உடல் ரீதியான கவர்ச்சி, கருணை உள்ளம் இவையே பெண்கள் தெரிவு செய்த குணங்கள். இயல்பாகவே குழந்தைகளுக்கு பெண்கள் என்றால் மிகவும் விருப்பமான விடயம். அதே குணம் ஆண்களுக்கும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். நிர்வாகத் திறன் என்பது பெண்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. குடும்ப நிர்வாகம், அலுவலக நிர்வாகம் மற்றும் தொழில் நிர்வாகம் என்பது பொறுமை குணத்துடன் செயல்படும் பெண்களுக்கு கடவுள் கொடுத்த வரம் என்றும் சொல்லலாம். தலைமைப் பண்புக்குரிய குணங்களான பணிவு, துணிவு, கனிவு என மூன்றும் ஒருங்கே அமைந்துள்ளதால் பெண்கள் தலைமையை பெரும்பாலான நிறுவனங்கள் ஏற்றுக் கொள்கின்றன. பெண்கள் பார்வை என்பது மிகவும் கூர்மையானது என்கிறார்கள் கணவன்மார்கள். அவர்கள் ஒரு வீட்டையோ அல்லது மனிதர்களையோ ஒரு முறை பார்த்தாலே போதும், துல்லியமாகக் கணித்துவிடுகின்றனர். அதே போல் தங்களுடைய கணவன்மார்களின் தவறுகளை... மனதில் இருக்கும் விடயங்களை குறிப்புகளால் உணர்ந்து கொள்ளும் திறன் படைத்தவர்கள் பெண்கள். அதனால்தான் கல்யாணமான ஆண்கள், தங்கள் மனைவியிடம் மிகவும் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்கின்றனர்.

இன்றைய நவநாகரிகப் பெண்கள் இணையத் தளம், ஈமெயில் போன்ற நவீன தொழில் நுட்பத்திலும் சிறந்து விளங்குகின்றனர். அது மட்டுமன்றி, ஷொப்பிங், பயணம் போன்ற அவசியமான விடயங்களுக்கு மட்டுமே இவற்றைப் பயன்படுத்துகின்றனர் என்றும் கூறப்படுகிறது. சேமிப்பிலும் சிறந்தவர்களாக விளங்குகின்றனர் பெண்கள். உடல் ஆரோக்கியத்துக்கான விடயங்களிலும் ஆண்களை விட பெண்களே சிறந்து விளங்குகின்றனர். என்கின்றனர் மருத்துவ ஆய்வாளர்கள். எப்போதும் பெண்களுக்கேமுன்னெச்சரிக்கைஉணர்வு அதிகம். மேலும் எதை யும் நன்கு யோசித்து செயல்படும் குணம் கொண்ட பெண்கள் அவசரப்பட மாட்டார்கள் என்பதால், அவர்களுக்கு மன அழுத்தம் என்ப தும் குறைவு. இதனால் அவர்கள் அடிக்கடி சின்னச் சின்னசிக்கல்களில் சிக்கிமுழிப்பதில்லை என்பதும் பெண்களுக்கான சிறப்பு.






# மே மாத ராசி பலன்கள்

## சிம்மம்

**(மகம், பூரம்,உத்திரம் முதல் பாதம் முடிய)**

அதிகார தோரணையுடன் காணப்படும் சிம்மராசியினரே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படமாட்டீர்கள். உங்கள் வழி தனி வழி என்று செயற்படுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். நல்லது எது கெட்டது எது என்று பிரித்துப் பார்த்து செயற்படுவீர்கள். எதிர்பாராத சில திருப்பங்களால் காரிய வெற்றி கிடைக்கும்.

குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து அதன் மூலம் அவர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வழக்குகளைத் தள்ளிப் போடுவதும் சமாதான முறையில் பேசி தீர்த்துக் கொள்வதும் நல்லது.



தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். நிதானமாகப் பேசுவதன் மூலம் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். புதிய கிளைகளைத் தொடங்குவீர்கள்.

### உத்தியோகத்தர்களுக்கு

உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தில் பண வரவுக்கு குறைவிருக்காது என்றாலும் வேலைப்பளு கூடத்தொடங்கும். சிலருக்கு விரும்பத்தகாத இட மாற்றங்களும் உண்டாகலாம். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகவும் நேரிடலாம். சிலருக்கு புதிய வேலைகளுக்கு மாறவும் வாய்ப்புண்டாகும். அதே நேரம் சக ஊழியர்கள் ஒத்துழைப்புடன் இருக்க மாட்டார்கள். அவர்களிடம் நெருக்கம் வேண்டாம்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு பெயரும் புகழும் கிடைக்கும். உங்கள் திறமை பளிச்சிடும். வேலைக்குத் தகுந்தவாறு சுறுசுறுப்புடன் பணியாற்றி குறித்த நேரத்துக்குள் முடித்துக் கொடுத்து நற்பெயர் எடுப்பீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களுக்கு கணவரிடம் ஒற்றுமை அதிகரிக்கும். மற்றவர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். குழந்தைகளால் சந்தோஷம் அடைவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தர்ம காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். பழைய கசப்புகளை மறந்து இன்பமாகப் பொழுதைக் கழிப்பீர்கள்.

### மாணவர்களுக்கு

மாணவர்கள் நன்றாகப் படித்தால் அதற்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் சாதிக்கும் யோகத்தை அடைவார்கள். மற்றபடி பெற்றோர்களின் ஆதரவு இருப்பதால் உங்களின் கோரிக்கைகள் நிறைவேறக்காண்பீர்கள்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**

**ஞாயிறு, புதன், வெள்ளி**

### மகம்

இந்த மாதம் எதிலும் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதாரணமாக பேசுவது நல்லது. வாழ்க்கை துணையுடன் இருந்த மனஸ்தாபங்கள் விலகும். நண்பர்கள், உறவினர்கள் வருகை இருக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

### பூரம்

இந்த மாதம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கடும் முயற்சிகள் பலன் தரும். செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் மேல் கவனம் செலுத்துவீர்கள். தேவையான உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

### உத்திரம் 1

இந்த மாதம் அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களைப் பற்றிக் கூறுவதைத் தவிர்ப்பது நல்லது. கடன் பிரச்சினை தீரும். எதிர்ப்புகள் அகலும், தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகளும் நீங்கும். நோய் நீங்கி ஆரோக்கியம் உண்டாகும். புதிய சொத்து வாங்கும் போதும் சொத்தை விற்கும் போதும் கவனம் தேவை.

# பெண்கள் அழுதால் ஆண்கள்...

நான் அப்படி என்ன சொல்லிட்டேன்னு இப்படி நீ கூப்பாடு போட்டு, அழுறே... இந்த வாசகம் கேட்காத வீடுகளே இருக்க முடியாது. அந்த அளவுக்கு கணவன், மனைவி இடையே நடைபெறும் சின்னச் சின்னச் சண்டைகளின் போது மூக்கைச் சிந்தாத மனைவிகளைப் பார்க்காமல் இருக்க முடியாது. மேலும் பெண்கள் எதற்கெடுத்தாலும் அழுகிறார்கள் என்பது ஆண்கள் பொதுவாக வைக்கும் புகாராகவும் உள்ளது. சில இடங்களில் விதி விலக்காக, பெண்களால் ஆண்கள் அழுகிற சம்பவங்களும் நடைபெறுகின்றன. அது வேறு விடயம். ஆனால் பெண்கள் அழும்போது அதை ஆண்கள் வெறுக்கிறார்களாம். அழுதே காரியத்தைச் சாதித்து விடுகிறார்கள் என்றும் எரிச்சல் படுகிறார்களாம்.

பெண்கள் அழும்போது ஆண்கள் சந்திக்கும் அவஸ்தைகளாக இதைக் கூறுகிறார்கள்... ஒரு பெண் அழத் தொடங்கி விட்டால்,ஆண்களுக்கு கையும் ஓடுவதில்லையாம், காலும் ஓடுவதில்லையாம். எப்படி இந்த அழுகையைச் சமாளித்து சமாதானப்படுத்துவது என்பதில் அவர்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறதாம். சமாதானப்படுத்த முயன்றால் அழுகை கூடுமாம், அவர்கள் கோருவதை நிறைவேற்றுவதாக அல்லது கவனிப்பதாக உறுதியளித்தால் மட்டுமே அழுகை குறைகிறதாம். இது ஆண்களுக்கு எரிச்சலைக் கொடுக் கிறதாம். பொது இடங்களுக்கு, கடை போன்றவற்றுக்குச் செல்லும்போது தான் கேட்டதை அல்லது விரும்பியதை வாங்கிக் கொடுக்காமல் போகும் ஆண்களிடம், காரியத்தைச் சாதிக்க பல பெண்கள் பொது இடம் என்றும் பாராமல் கண்களை கசக்குகிறார்களாம். அப்போது ஆண்களுக்கு பெரும் தர்மசங் கடமாகி விடுகிறதாம். பொது இடத்தில் தான் ஒரு ஜென்டில்மேனாக நடந்து கொள்ளத்தான் ஒவ்வொரு ஆணும் விரும்புவானாம். எனவே இதைப் பயன்படுத்தி பல பெண்கள் கண்களைக் கசக்கியோ அல்லது கசக்கு வது போல நடித்தோ காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்களாம். இது போன்ற சம்பவங்களில் ஆண்களுக்கு டென்ஷனாகி விடுகிறதாம். இருந்தாலும் பொறுத்துக் கொண்டு, சரி சரி அழாதே, வாங்கித் தர்றேன் என்று பல்லைக் கடித்தபடி கூறி அமைதிப்படுத்துகிறார்களாம். சாதாரண பிரச்சினைகளைக் கூட பெரிய அளவுக்கு கொண்டு சென்று விடுகிறார்கள் பெண்கள் என்பது பல ஆண்களின் புகாராக உள்ளதாம். ஒன்றுமே இல்லாத பிரச்சினையைப் பெரிதாக்கி கண்ணீர் வடிக்கிறார்கள் என்கிறார்கள் அவர்கள். அதாவது சும்மா கேட்டால் கிடைக்காது என்று கருதும் விஷயத்தை கண்ணீர் கலந்து கேட்கிறார்களாம் பெண்கள். இதையும் பல ஆண்கள் விரும்புவதில்லையாம் நேர்மையாக, நேருக்கு நேர், தைரியமாக, தெளிவாக பேசி கேட்கும் பெண்களைத்தான் ஆண்களுக்குப் பிடிக்கிறதாம். இதனால் கண்ணீர் விட்டு காரியம் சாதிக்க நினைக்கும் பெண்களை ஆண்கள் வெறுக் கிறார்களாம்.

# தெரிந்து கொள்வோம்



நீர்யானையின் உதடுகளின் நீளம் ஏறத்தாழ 2 அடி.

எலிகள் ஓராண்டில் 105 குட்டிகள் வரை இனப்பெருக்கம் செய்யும்.

காட்டுத்தீ பள்ளமான பகுதிகளை விடவும் விரைவாக மேல்நோக்கிப் பரவும்.

உடலை குளிர்விப்பதற்காக முன்னங்காலை நக்கும் பழக்கம் கங்காருகளுக்கு உண்டு.

இன்னும் 100 பில்லியன் ஆண்டுகள் எரியும் அளவுக்கு சூரியனிடம் சக்தி மிஞ்சியிருக்கிறது.

'செல்பிஷ்' என்ற பொருள்படும் கிரேக்க வார்த்தையிலிருந்தே 'பர்பிள்' என்ற நிறத்தின் பெயர் உருவானது.

ஒரு பிரமாண்ட சிப்பியில் 6.4 கிலோ எடையுள்ள முத்து எடுக்கப்பட்டது.

நெருப்புக்கோழியின் கண்கள் அதன் மூளையை விடப் பெரியது.

ஒவ்வொரு ஆண்டும் 20 லட்சம் விலங்குகள் விமானத்தில் பறக்கின்றன.

7,240 கிலோ மீற்றர் தொலைவுக்கு விரிந்துள்ள சீனப்பெருஞ் சுவர், கிட்டத்தட்ட ஆபிரிக்கா கண்டம் அளவு நீளமுள்ளது.

# ஆரோக்கியமாக வாழ...



ஒரு ஊரில் ஒரு பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டுக்குள் ஒரு குகை. குகையின் உள்ளே சுருண்டபடி படுத்திருந்தது அந்த நரி. குகைக்கு வெளியே வந்து நின்ற கரடி 'நரியாரே! உமக்கு என்ன நேர்ந்தது! ஏன் குகையை விட்டு இரண்டு நாளாக வெளியேவரவில்லை' என்று சத்தமாக கேட்டது. கரடி காட்டுக் கத்தலாக கத்தியும் குகையின் உள்ளே எந்த சத்தமும் இல்லாமல் இருக்கவே கரடி குகையின் உள்ளே சென்றது. சுருண்டு படுத்திருந்த நரியைக் கண்டதும் நரியாரே உமக்கு என்னாயிற்று. இப்போதும் உமக்கு உடல் நிலை சரியில்லையா? அடிக்கடி இப்படி சுருண்டு படுத்துக் கொள்கிறீரே என்று அன்போடு கேட்டது. 'கரடியாரே! நான் என்ன செய்வது? எனக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் ஆகிவிடுகிறது. அதன் காரணமாக உடலும் சோர்வடைகிறது. நாள்பட நாள்பட எனது உடலும் மெலிந்து கொண்டே போகிறது எனக் கவலையுடன் கூறியது. அதனைக்கேட்ட கரடி நரியாரே நீர் இரை சாப்பிட்டு முடித்ததும் அப்படியே படுத்துக் தூங்கி விடுகிறீர் உமது உடலை வலுப்படுத்த நீர் துளியளவு மனதால் நினைக்க மாட்டீர் சாப்பிடுவதும் தூங்குவதுமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றீர். ஆதனால்தான் உமக்கு அடிக்கடி உடல் நிலை சரியில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றது. கரடியாரே என் உடல்நிலை இப்படியே இருந்தால் என்னால் எழுந்து நடக்க முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு உடல் பருமன் அதிகாரித்து படுத்த படுக்கையாகி விடுவேன். எனது உடல் நிலை சீராக நீ எனக்கு உதவி செய்வாயா என்று கேட்டது நரி. நரியாரே மெல்ல எழுந்து என்னோடு வாரும். நாம் இருவரும் சிறிது நேரம் உற்பயிற்சி செய்யலாம் என்றது கரடி. நரியும், கரடியும் ஒரு மரக்கிளையின் அருகே வந்தன. கரடி உடனே மரக்கிளையைப் பிடித்து ஊஞ்சலாடத் தொடங்கியது. அதனைப் பார்த்து நரியும் சிறிது நேரம் ஆடியது. கரடி வேகமாக ஓட ஆரம்பித்தது. நரியும் பின்தொடர்ந்து வேகமாக ஓடியது. சிறிது தூரம் சென்றது கரடி. கரடி வேகமாக நடக்கத் தொடங்கியது அதனைத் தொடர்ந்து நரியும் வேகமாக நடக்கத் தொடங்கியது.

தனது உடலில் மெல்ல மெல்ல சிறுசிறு மாற்றம் ஏற்படுவதை நரி உணர்ந்தது. அதே நேரம் கரடி நரியாரே உமது உடல்நிலை இப்போது எப்படி இருக்கிறது? ஏதோ உற்சாகம் நிரம்பியவர் போன்று காணப்படுகின்றீரே என்று கேட்டது. ஆமாம் கரடியாரே எனக்கு உற்சாகமாகத்தான் இருக்கிறது. இதனைப்போன்று தினமும் உடற்பயிற்சி செய்தால் எனது சோம்பல் எல்லாம் மறைந்துவிடும். என் உடலும் உறுதியாகிவிடும் என்றது நரி. அன்று முதல் நரி தினமும் கரடியோடு சேர்த்து கொண்டு தன் உடலை உறுதியாக்கிக் கொண்டது. நமது உடல் உறுதியாக இருந்தால்தான் நாம் ஆரோக்கியமாக வாழ முடியும்.


# எரிபொருள் சிக்கனத்தின் முதல்வன்!

DIVI SHAKTHI POWERTRAC®



- என்ஜின் மூலம் அதிகமான சுழற்சி வலு கிடைப்பதால் அதிக பலத்துடன் இழுத்துச் செல்லும் ஆற்றல்.
- சிறப்பான டீசல் சேமிப்பு
- அதி சிறப்புவாய்ந்த ஃபோர்ட் பரம்பரையின் சொத்து.

2 வருட உத்தரவாதம்

துரித அழைப்பு : நிரோஷன் 071 0 657 108
தீபால் 071 0 321 447

DIVI SHAKTHI POWERTRAC
பணம் விளையும் இயந்திரம்


DIVI SHAKTHI

16, ... 031 4873714. ... 031 2226365
...: agrocon2@sltnet.lk


# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# தேள்கள்



தேள் கணுக்காலிகள் பிரிவைச் சேர்ந்த உயிரினமாகும். தேள்களில் கருந்தேள் உள்ளிட்ட பல வகைகள் உள்ளன. இதன் உடல் கணுக்களால் ஆனது. இது ஆறு கால்களும் இரண்டு முன்பக்கக் கொடுக்குகளும் கொண்டிருக்கும். இதன் வால் கணுக்களாகவும் நுனியில் ஒரு நச்சுத்தன்மையுள்ள கூர்மையான கொடுக்கும் கொண்டிருக்கும். முன்பக்கக் கொடுக்குகள் இரையைக் கவ்விப் பிடிப்பதற்கும் பின்பக்கக் கொடுக்கு இரை அல்லது எதிரிகள் மீது நஞ்சைப் பாய்ச்சிக் கொல்வதற்கும் உதவுகின்றன.

# திட்டம் வகுத்துச் செயற்படுதல் நாளாந்த வேலைக்கு உறுதுணை

## வடமாகாண முதலமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 8

ஒரு விளையாட்டு வீரருக்கு குறிக்கோள் இருக்க வேண்டும். இத்தனை வேகத்தில் நான் ஓட வேண்டும், இன்னவாறு விளையாடி வெல்ல வேண்டும் என்றெல்லாம் திட்டம் வகுப்பது ஒரு நல்ல விளையாட்டு வீரருக்கு அழகு. காரியாலயத்திலும் இதேவாறான ஒரு திட்டம் வகுத்தல் எமது நாளாந்த வேலைக்கு உறுதுணையாக அமையும் என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முதலமைச்சர் வெற்றிக் கிண்ணத்திற்கான அமைச்சுக்களுக்கு இடையிலானவிளையாட்டுவிழாவடமாகாண கல்வி, கலாசாரம், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையில் நாயன்மார்கட்டு, பாரதி விளையாட்டுத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

விளையாட்டுக்கள் பலவிதமான நன்மைகளை தருகின்றன. உடலைக் கெட்டியாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்திருக்க உதவுகின்றன. உளரீதியாகப் பார்த்தோமானால் குழுவாக ஒன்று சேர்ந்து செயற்படும் மனப்பாங்கை விளையாட்டுக்கள் வளர்க்கின்றன. அதே நேரத்தில் விட்டுக் கொடுக்குந் தன்மை, வெற்றி தோல்வியைச் சமமாக அனுகும் தன்மை, ஆளுமையுள்ளவராக சிந்தித்துச் செயலாற்றக் கூடிய திறமையை விளையாட்டுக்கள் வளர்க்கின்றன.

விளையாட்டுக்களில் ஈடுபடுவதால், அவற்றிற்காக எம்மைத் தயார் பண்ணுவதால் நாங்கள் எங்கள் திணைக்களத்தின் அல்லது அமைச்சின் நாளாந்த வாழ்வு முறையிலும் சில நன் மாற்றங்களைக் கொண்டுவர முடிகின்றது. போட்டிகளில் கலந்து கொள்ளும்போது வெல்லவேண்டும் என்ற ஆவலும் வெல்வேன் என்ற திடசங்கற்பமும் போட்டியாளர்களுக்கு அவசியம். இலக்கை அண்மித்த நிலையில் வெல்வேனா மாட்டேனா என்ற கேள்வி பூதாகாரமாக மனதில் எழும்போது ஒருவரின் வெற்றியை நோக்கிய ஆவலும் திடமான முயற்சியுமே அவரை வெற்றி கொள்ளச் செய்கின்றன. எமது அலுவலகங்களிலும் இப்பேர்ப்பட்ட ஆவலும் முயற்சியும் எம்மை ஊக்குவித்து முன்னோக்கிச் செல்ல வைக்கின்றது. எவ்வளவுக்கு இப்பேர்ப்பட்ட குணங்களை நாங்கள் விருத்தி செய்கின்றோமோ அவ்வளவுக்கு அலுவலகங்களிலும் நாங்கள் எங்கள் நாளாந்த நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கும். எமது மனங்களை வலுவாக வைத்திருக்கவும் நினைத்ததை அடையும் மனப்பக்குவத்தைப் பெறவும் இவை யாவும் உதவி புரிகின்றன.

நாங்கள் எவ்வளவுதான் வெல்ல வேண்டும் என்ற திடமான எண்ணத்துடன் இருந்தாலும் எம்முள் மிகக் கெட்டிக்காரனான ஒரு போட்டியாளன் கூட பல தடவைகள் தோல்வியைத் தழுவ நேரிடுகின்றது. ஆனால் தோல்வியில் இருந்து விடுபட அந்தப் போட்டியாளர் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளே அவரை அடுத்த முறை வெல்ல வைக்கின்றது. இதையும் எமது காரியாலய வாழ்க்கையில் நாம் சேர்த்துக் கொள்ளலாம். நான் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியில் முடியக் கூடும். ஆனால் நான் துவண்டு விடக் கூடாது. அடுத்த கட்டத்தில் வெற்றியைப் பெற மனதை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இது விளையாட்டுக்கள் எமக்குப் புகட்டும் இன்னொரு பாடம்.

தானும் தன்பாடும் என்று குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து வேலை செய்பவர்கள், கணினியின் முன்னால் தமது காலத்தைக் கழிப்பவர்கள் கட்டாயமாக ஏதாவது விளையாட்டுக்களில் அல்லது தேகப் பயிற்சிகளில் பங்கு பற்ற வேண்டும். இது காலக் கிரமத்தில் ஒரு தனிமையையும் ஏக்கத்தையும் கொண்டு வருகின்றது. எனவே மனச்சோர்வு, மன ஏக்கம் ஆகியன வராதிருப்பதை விளையாட்டுக்கள் தடுக்கின்றன். விளையாட்டுக்கள் தன்னம்பிக்கையை வளர்க்கின்றன. சுற்றி இருப்பவர்களுடன் மனம் விட்டுப் பேச வசதி அளிக்கின்றன. சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதை விளையாட்டுக்கள்தடுக்கின்றனஎன்றுகூடசமூகவியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்என்றுதெரிவித்தார். (த–4)

# மிதிவெடியகற்றும் பணியாளர்களின் நிறுத்தம் சட்டப் பிரச்சினைக்குரியது

## மீள்குடியேற்ற அமைச்சர் கூறினாராம்

கிளிநொச்சி, மே 8

பணியாளர்களை வேலையில் இருந்து இடை நிறுத்தவேண்டுமானால் 3மாத காலத்திற்கு முன்பே அறிவிக்கப் படல் வேண்டும். இவ்வாறு முன்னறிவித்தல் இன்றிப் பெரும் எண்ணிக்கையான பணியாளர்கள் நிறுத்தப்படுவது சட்டப் பிரச்சினைக்குரிய விடயம் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார் என கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் கூறினர்.

ஹலோட்ரஸ்ட் நிறுவனம் நிதிப் பற்றாக்குறை, ஒப்பந்தகாலம் முடிவு என்று காரணம் கூறி அந்த நிறுவனத்தில் பணியாற்றிய 450 மிதிவெடி அகற்றும் பணியாளர்களை இடை நிறுத்தியுள்ளது. ஒப்பந்த காலம் முடியும் வரை தங்களையும் ஏனைய பணியாளர்களுடன் இணைத்து வேலை தாருங்கள் என்று கோரிக் குறித்த பணியாளர்கள் நிறுவனத்தின் முன்னால் 3தடவைகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்ட மத்திய வங்கியின் காரியாலய திறப்பு விழாவுக்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சரிடம் மிதிவெடி அகற்றும் பணியாளர்களுடைய பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் எடுத்துக் கூறினார்.

இதன்போது பணியாளர்கள், ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தினர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், மேலதிக அரச அதிபர் ஆகியோரை அழைத்து நேரில் கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:–

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் பணியாளர்களுடன் சமரசத்துக்குச் செல்ல வேண்டும். தவறின் தொழில் திணைக்களத்தின் ஊடாகச் சட்ட நடவடிக்கைக்குச் சென்றால் நிறுவனத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே வேலையில் இருந்து நீக்குவதானால் அவர்களுடைய மூன்று மாதத்துக்கான பணத்தை வழங்கவேண்டும் அல்லது மூன்று மாதத்திற்கு முன்பே அறிவித்திருக்கவேண்டும். எனவே பணியாளர்கள் விடயத்தில் இணக்கப்பாட்டுக்குச் செல்ல வேண்டும் –என்றார். (த–21)

# முகமூடித் திருடர் அட்டகாசம் பெண் உட்பட இருவர் காயம்

தென்மராட்சி மே 8

மீசாலை, வேம்பிராய், மந்துவில் பகுதிகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் ஒரே நேரத்தில் முகமூடித் திருடர்களின் அட்டகாசத்தினால் பெண் உட்பட இருவர் காயமடைந்தனர்

மீசாலை வடக்கு வேம்பிராய்ப் பகுதியில் வீடொன்றின் கதவை உடைத்து இரண்டு திருடர்கள் உள்நுழைந்த போது வீட்டுக்காரர் விழித்துக் கூக்குரலிட்டதால் அவர்கள் பெண்ணைக் கத்தியால் வெட்டிவிட்டுத்தப்பியோடியுள்ளனர். அதே நேரத்தில் மீசாலை மேற்கில் உள்ள வளவுக்குள் நுழைந்த திருடர்கள் சமையலறை ஜன்னலைப் பிரிக்க முற்பட்ட வேளையில் வீட்டுக்காரர் விழித்துக் கூக்குரலிடவே கொட்டனால் தலையில் தாக்கிவிட்டு ரோர்ச் மற்றும் கத்தி ஆகியவற்றைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இதன்போது வெட்டுக்காயத்துக்கு இலக்கான மீசாலை வடக்கு வேம்பிராயைச் சேர்ந்த தசநந்தன் கோகிலா (வயது 30), கொட்டனால் தாக்கியதில் தலையில் காயம் ஏற்பட்ட மீசாலை மேற்கைச் சேர்ந்த சிவப்பிரகாசம் சிதம்பரநாதன் ( வயது 65 ) ஆகியோர் சாவகச்சேரி மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மந்துவில் பகுதியிலும் சில வீடுகளில் திருடர்கள் மேற்கொண்ட முயற்சி அயலவர்களால் முறியடிக்கப்பட்டபோதிலும் திருடர்களைப் பிடிக்க முடியவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (த–9)

## சாவகச்சேரி பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர்

தென்மராட்சி, மே 8

சாவகச்சேரி பிரதேச சபையில் வெற்றிடமாகக் காணப்பட்ட உறுப்பினர் பதவிக்கு புதியவர் நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து பொறுப்பேற்றுள்ளார்.

சபையின் உறுப்பினராகவிருந்த எட்வின் விஜயரத்தினம் காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு வெங்கடேஸ்வரன் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (த–9)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கட்சி தாவினார் முன்னாள் மேயர்

கல்முனை மாநகர முன்னாள் மேயரும் மெட்ரோ பொலிற்றன் கல்லூரியின் ஸ்தாபகருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தேசிய காங்கிரஸில் இருந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்துள்ளார்.

நேற்று முன்தினம் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வின்போதே அவர் அதில் இணைந்து கொண்டுள்ளார். தேசிய காங்கிரஸின் கிழக்கு மாகாண இளைஞர் அமைப்பாளரான சிராஸ் மீராசா ஹிப் தற்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளராக கட்சித் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனால் நிய மிக்கப்பட்டுள்ளார். (த–10)

# மரண அறிவித்தல்கள்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## இளையதம்பி கணபதிப்பிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கணபதிப்பிள்ளை நேற்று (07.05. 2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், பாலமுரளிதரன், மதிவண்ணன், திகழ்மதி, சுதாமதி, டுசியந்தன், காலஞ்சென்ற சோதிமதி மற்றும் லோகேஸ்வரன், செல்வினி ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதாம்பிகை, பத்மினி, றஞ்சித்குமார், மகிவஜா, சுதர்ணா(வாசு) ஆகியோரின்அன்புமாமனும், சிந்து, யக்ஷன், டினுஸ், சபின், சம்சியா, நிதர்சன், செந் துஜா, லக்ஸ்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளிகோயில் வீதி, பத்தமேனி,
அச்சுவேலி. 077 5142021

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னத்தம்பி சிவராசா



(முன்னாள் நடத்துனர்-C.T.B)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராசா நேற்று (07.05.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜினி தேவியின் அன்புக் கணவரும், சிவறஞ்சினியின் (சட்ட உதவி ஆணைக்குழு யாழ்/மல்லாகம் நீதிமன்றம்) அன்புத் தந்தையும், மயூரனின் (Leafset Engineering Company - Colombo) அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான நடராசா, நாகம்மா மற்றும் தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு, ஏழாலை.
0776679793

தகவல்: ஜெ.ஜெயசதாத்
(பேறாமகன்-சதாத்)

## திருமதி ஞானாம்பிகை கனகசபை



சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும், தற்போது இந்தியாவில் வசித்தவருமான திருமதி ஞானாம்பிகை கனகசபை 05.05.2015 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சந்தனம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சுகுணாவதி, ஞானசபேசன் மற்றும் சிற்சபேசன் (ஜேர்மனி), பிறேமாவதி (இந்தியா), காலஞ்சென்ற புனிதவதி மற்றும் நடனசபேசன் (ஜேர்மனி), சத்யவதி (ஜேர்மனி), கலாவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சந்தானம் மற்றும் சண்முகராஜா (இந்தியா), இந்திராகாந்தி (ஜேர்மனி), மகேந்திரன் (கனடா), குணாளன் (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சர்வேஸ்வரி (கொழும்பு), மகேசன் (கனடா), சொர்ணகாந்தி (பேபி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் விஜயதேவி (கனடா), காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2015 புதன்கிழமை இந்தியாவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0016478477706-Canada,
00491755242495-Germany,
00919843168862-India.
0778986290-Colombo,
0212230883-Jaffna.

தகவல்:
குடும்பத்தினர்.

# அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்துள்ளன இப்போது

## *ஹிட்லருக்கு பின் இந்த நிலைமை என்று குற்றம் சாட்டுகிறார் மஹிந்த*

கொழும்பு, மே 8
ஹிட்லருக்குப் பின்னர் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பது தற்போதைய அரசாங்கத்திலேயே என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டமையானது நல்லாட்சியின் மற்றுமொரு பழிவாங்கும் முயற்சி எனவும் அவர் கூறியுள்ளார்.

வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை சிறைக்குச் சென்று சந்தித்து விட்டு வெளியில்வரும் போது ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லாட்சியின்மற்றுமொருமுடிவை காண வந்தேன். இது தெளிவான சிவில் வழக்கு. கடன் வாங்குவதும், கடன் கொடுப்பதும். கடனைச் செலுத்துவது போன்ற விடயங்கள் சிவில் வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவை. சிவில் வழக்கொன்று எப்படிக் குற்றவியல் வழக்காக முடியும் என்பது எனக்குப் புரியவில்லை.

இந்தக் காலத்தில் பல விடயங்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. திரிபுபடுத்தப்படுவது நல்ல காரியமாக இருக்காது. சீ.டப்ளியூ என்பது வர்த்தக நிறுவனம் அதில் கடன் கொடுக்கவும் முடியும் கடனைப் பெறவும் முடியும். பெற்ற கடனை மீண்டும் செலுத்தவும் முடியும். கடன் செலுத்தப்பட்டும் விட்டது.

அத்துடன் இது அரச நிறுவனமும் அல்ல. அது கூட்டுத்தாபனம். இது பொதுச் சொத்துகள் தொடர்பான சட்டத்துக்குள் அடங்காது. எனினும் இதனைப் பொதுச் சொத்துக்கள் சட்டத்துக்குள் கொண்டு வந்துள்ளனர். சரியாக பஸில் ராஜபக்ஷவின் சமுர்த்தி வழக்குப் போன்றது:

அமைச்சரவைக்கு அமைச்சர் ஒருவரை நியமிப்பது இலஞ்சமாம். அப்படியானால் தற்போதுள்ள பிரதமர் பதவியில் இருந்து அனைத்துமே இலஞ்சம். தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக அரசியல் பழிவாங்கல் என்பது தெளிவானது. இது தவறு என நான் எண்ணுகிறேன்.

இது குறித்து நேற்று நாங்கள் பேசினோம். குறிப்பாக இந்த சட்ட வரைவு அதாவது வர்த்தமானி அறிவித்தல் பற்றிப் பேசினோம்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்படவிருந்த நடவடிக்கைகள் நடக்கவில்லை. பிரதமர் ஒருவருக்கு பொலிஸ்மா அதிபரின் அதிகாரங்களைப் பெற முடியாது. பிரதமர் உட்பட அமைச்சரவை உப குழு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொலிஸ் மா அதிபரின் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

இது தெளிவாக அதிகாரங்களை ஓரிடத்தில் குவித்துள்ளது. ஹிட்லருக்குப் பின்னர் இவ்வாறு நடந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது–என்றார். (த)

# சம்பூரை விடுவிக்கும் பத்திரத்தில் கைச்சாத்து

யாழ்ப்பாணம், மே 8
சம்பூரில் முதலீட்டு வர்த்தக வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட, பொது மக்களுக்குச் சொந்தமான 818 ஏக்கர் காணியை மீளக் கையளிக்கும் நோக்குடன், குறித்த வர்த்தக வலயத்தை இரத்துச் செய்யும் வர்த்தமானிப் பத்திரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை கையெழுத்திட்டுள்ளார்.

மேலும் கடற்படையினர் வசமுள்ள 230 ஏக்கர் காணியும் விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பிரதேசத்தில், கடந்த 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கைகாரணமாகஅங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். மக்கள் இடம்பெயர்ந்தசந்தர்ப்பத்தில் அவர்களது காணிகளை கடற்படையினரும், இராணுவத்தினரும் ஆக்கிரமித்து வைத்திருந்தனர்.

இந்த நிலையில் சம்பூர் பிரதேசத்தில் அனல் மின் நிலையம் ஆரம்பிப்பதற்காக, குறித்த பகுதியிலுள்ள பொதுமக்களின் காணிகள் அவர்களின் அனுமதியின்றி, முதலீட்டு வர்த்தக வலயமாக மஹிந்த அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனை எதிர்த்து அந்த மக்கள் தமது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்தி வந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில், சம்பூர் மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில்நேற்றுக்காலைகொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னான்டோ ஆகியோருக்கு இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது, குறித்த காணிகளை மீளவும் பொதுமக்களுக்கு கையளித்து மீள்குடியமர்வுக்குரிய ஒழுங்குகள் தொடர்பில் பேசப்பட்டது.

இதன் பின்னர் மதியமளவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, இந்தக் குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்களை அடுத்து, முதலீட்டு வர்த்தக வலயமாக பிரகடனப்படுத்தியதை இரத்துச் செய்யும் வர்த்தமானிப் பத்திரத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டார்.

இதன் மூலம், 818 ஏக்கர் நிலப் பரப்பு விரைவில் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படவுள்ளது. அத்துடன் கடற்படையினர் வசமுள்ள காணியும்விரைவில்விடுவிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (த–5)

# தூக்கில் தொங்கிய இளைஞர் சடலமாக மீட்பு

கரவெட்டி பகுதி தேவாலயம் ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவன் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அந்தோனி ராஜ் (வயது–19) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தனது தாயாருடன் தேவாலயத்திற்குச் சென்ற இளைஞன் இரவு தேவாலயத்தில் உள்ள அறையில் தாயாருடன் தங்கியுள்ளார். அதிகாலை வேளை தங்கிய அறைக்கு அருகில் உள்ள இன்னொரு அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனைக் கண்ட தேவாலயத்தின் குருவானவர் இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளைஞனின் தாயார் மற்றும் குருவானவர் ஆகியோரிடருந்து வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காகமந்திகைஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் நேற்று இரவு 7.00மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த–109–ரி)

# பஸ் போக்குவரத்துப் பிரச்சினை; ஆராயப் 13 பேர் கொண்ட குழு

வடக்கு மாகாணத்தினுள் மாவட்டங்களுக்கிடையிலான பஸ் போக்குவரத்தில் இருந்த முரண் நிலையைத் தீர்க்க முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் 13 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. நேர முகாமைத்துவத்தை அந்தக் குழு செயற்படுத்தி முரண் நிலையைத் தீர்க்கும் என்று யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களுக்கிடையேயான போக்குவரத்தில் நேர முகாமைத்துவம் பேணப்படவில்லை. அதனை விடப் பெரிய பிரச்சினையாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களுக்கு 40 வீதமும் தனியார் பஸ்களுக்கு 60 வீதமும் என்ற அடிப்படையில் இலங்கையில் பஸ்கள் பயணிகள் சேவையில் ஈடுபடுகின்றன. ஆனால் வடக்கில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் 40 வீதத்தையும் தாண்டிச் சேவையில் ஈடுபடுகின்றன. அதனால் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தனியார் பஸ்காரர்கள் கூறுகின்றனர். அது பற்றிய தீர்வை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தவுள்ளதாக அவர்கள் அறிவித்திருந்தனர். இந்நிலையில் இரண்டு தரப்பினரையும் அழைத்து வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதன் பின்னரே 13 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அவர்கள் குறிப்பிட்டதொரு ஒழுங்குமுறையில் பணியில் ஈடுபட்டு அரச மற்றும் தனியார் பஸ்களின் நேரத்தைக் கண்காணித்துக்கொள்வர். கண்காணிப்பின் படி இரண்டு தரப்பினரதும் பஸ்கள் சேவையில் ஈடுபடும். அடுத்த மாதம் தொடக்கம் இந்த நடைமுறை நடைமுறைக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது. தவிர ஏனைய மாவட்டங்களிலும் இந்த முறை இனிவரும் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(த–4)

# சிறுமி துஷ்பிரயோகம் ; குடும்பஸ்தர் கைதானார்

யாழ்ப்பாணம்,மே 8
வீட்டில் யாரும் இல்லாத சமயம் தனிமையில் இருந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முனைந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாவடிப் பகுயில் இடம்பெற்றுள்ளது.

பெற்றோர் வெளியே சென்ற வேளை தனிமையில் இருந்த ஓட்டுமடம் பகுதியை சேர்ந்த 13 வயது சிறுமியை 40வயதுடைய தாவடிப் பகுதியை சேர்ந்த நபர் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளதாகச் சிறுமியின் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தாவடிப் பகுதியை சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி வளர்மதி நகுலேஸ்வரதாசன்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி நேசரத்தினம் செல்லப்பா
அவர்கள் காலமாகியதை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
சேவையாளர் சங்கம். (சி.15776) (45.7.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



எமது வித்தியாலய ஆசிரியை திருமதி கு.இரவீந்திரன் அவர்களின் தந்தை
கந்தப்பிள்ளை முருகுப்பிள்ளை
கடந்த 06.04.2015 அன்று சிவபதம் எய்தினார். அன்னாரின் மறைவு குறித்து 31ஆம் நாளில் எமது அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் கழகம்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் - கோண்டாவில்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 14.09.1942
மறைவு 08.04.2015
சோமசுந்தரம் கந்தசாமி
(மருந்தாளர் - மாவிட்டபுரம்)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

எமது தந்தை நோயுற்றபோது அருகில் இருந்து பராமரித்தவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி.

இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

39/9, திசை வீரசிங்கம் சதுக்கம், 2ஆம் குறுக்குத்தெரு, எல்லை வீதி, மட்டக்களப்பு.
குடும்பத்தினர், பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரமக்கள். (59562)(10)

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 22 09 1944
மறைவு: 08 04 2015
அமரர் இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை
(முன்னாள் தொழில்நுட்பவியலாளர், சங்கானை ப.நோ.கூ.சங்க மின்தூறியாலை)

கடந்த 08.04.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கின் பிரிவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலி துண்டு பிரசுரம், பதாதைகள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மேலும் பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தோர்க்கும் எமது குடும்பம் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"மாணிக் மஹால்" பிரதான வீதி, பண்ணாகம். 0771536224 (59559)(10)
குடும்பத்தினர்.

# கொந்தளித்தது கொல்கத்தா வெளியேறியது டெல்லி

யூசுப் பதானின் அதிரடியும் யாதவ், ரசலின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும், சாவ்லாவின் இலக்கு வேட்டையும் கைகொடுக்க 13 ஓட்டங்களால் கொல்கத்தாவிடம் தோல்வியடைந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது டெல்லி.

டெல்லி எதிர் கொல்கத்தா அணிகளுக்கிடையிலான ஆட்டம். பெரும்பாலும் அடுத்த சுற்றுக்கு முன்னேறிவிடும் என்ற நிலையில் உள்ள அணிகளுள் கொல்கத்தாவிற்கும் அதிகப்படியான வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால்டெல்லியின் நிலைமைதான் பரிதாபம். கொல்கத்தாவை வென்றால் ஏதோ ஒரு நம்பிக்கையில் தொடரில் தொடர்ந்து போரிடலாம். மாறாக தோல்வியடைந்தால் தொடரை விட்டு வெளியேறும் பரிதாபம் பஞ்சாப்பைத் தொடர்ந்து டெல்லிக்கும் ஏற்படும்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் உத்தப்பாவுடன் கம்பீர். வழங்கம் போல நிதான ஆரம்பம். வழக்கம் போல கம்பீரே முதலில் பவிலியனுக்கும் சென்றார். பாண்டேயும் உத்தப்பாவும் சற்று அதிகமாக நிதானித்து விட்டார்கள். ஓட்டங்கள் சிறிது நேரம் ஸ்தம்பித்துப் போய் நின்றன. 31 பந்துகளில் 32 ஓட்டங்களைப் பெற்று உத்தப்பா ஆட்டமிழந்தார். மொத்தத்தில் உத்தப்பாவின் இன்னிங்ஸ் இலக்குச் சரிவை தடுத்ததே தவிர வெற்றிக்கான வேறு வழிவகைகளைச் செய்யவில்லை. சற்றும் எதிர்பார்க்கப்படாமல் களமிறக்கப்பட்டார் சாவ்லா. எடுத்துக் கொண்ட பந்துகளுக்கு அவரின் பங்களிப்பும் சொல்லிக் கொள்ளும் படியாக இல்லை. பந்துகளை வீணடிக்க எவரும் தவறவில்லை. களத்தில் யூசுப் பதான். மற்றவர்கள்வீணடித்த பந்துகளை தனிநபராகச் சரிசெய்தார். 24 பந்துகளில் 42 ஓட்டங்களை விளாசினார். சூர்யக்குமார் யாதவ்வும் ரசலும் பத்து ஓட்டங்களைத் தாண்டவில்லை. ரசல் சகலதுறை ஆட்டத்தில் கொல்கத் தாவின் தூண் என்பதை நேற்றைய ஆட்டத்தில்அவர் பொய்ப்பித்தார். ரசலின் இடத்தை நிரப்ப களத்தில் போத்தா. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தை வீச ஷகீர்கான். தொடர்ச்சியாக நான்கு பவுண்டரிகளை அடித்து நொறுக்கினார். துவண்டு கிடந்த கொல்கத்தா துள்ளி எழுந்தது. முதல் மூன்று பந்துப்பரிமாற்றங்களிலும் 16 ஓட்டங்களை மட்டுமே வழங்கியிருந்த ஷகீர் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் மட்டும் 18 ஓட்டங்களை வாரி வழங்கினார். முடிவில் கொல்கத்தா 171–7.

யாதவ், நரைன், சாவ்லா, ஹொக், ரசல் இவ்வாறான பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டு 172 ஓட்டங்களைப் பெறவேண்டும். சற்று கடினம் ஆனால் டெல்லியின் துடுப்பாட்டப் பலத்தால் சாத்தியப்படுத்தலாம். களத்தில் அகல் வாலுடன் அய்யர். நிதானத்தில் ஆரம்பித்து நிதானத்திலேயே சென்று கொண்டிருந்தனர். இலக்குகளும் விழுந்த பாடில்லை. ஓட்டங்களும் குவிந்த பாடில்லை. மொத்தத்தில் ஆட்டம் ஒருநாள் பாணியில் சென்று கொண்டிருந்தது. இலக்குகள் விழாததால் வெற்றி வாய்ப்பு பஞ்சாப்புக்கு அதிகம் என்று சொல்லக் கூடிய அதே நேரம் ஓட்டங்கள் குவிக்கப்படாததால் வெற்றி வாய்ப்பு கொல்கத்தா வுக்கும் இருக்கத்தான் செய்தது. பத்தாவது பந்துப்பரிமாற்றத்தில் மனோஜ் திவாரியின் ஆட்டம் 25 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பந்துகளை ஏராளமாக வீணடித்துச் சென்றார் திவாரி. அடுத்த பந்துப்பரி மாற்றத்தில் அய்யரும் விடைபெற டெல்லி 71–2. டுமினி ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் யாதவ் பத்து ஓட்டங் களுடனும் கடந்த ஆட்டத்தில் அரைச் சதம் விளாசிய யுவராஜ்டக்கிலும் வெளியேற ஆட்டம் கொல்கத்தாவிடம் சாய்ந்தது. டெல்லியின் இறுதி நம்பிக்கையாக களத்தில் நின்ற டுமினியும் பவிலியன் திரும்ப கொல்கத்தாவின் வெற்றி உறுதியானது. டெல்லியின் இறுதிக்கட்ட போராட்டங்களும் பய னற்றுப்பொக முடிவில் டெல்லி 13 ஓட்டங்களால் தோல்வியடைந்து அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது. (ரி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**தவறிவிட்டது**

ப. வரதராஜா ஆகிய எனது 731851450V இலக்க முடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இன்சுரன்ஸ், ரக்ஸ் அடங்கிய பேர்ஸ் ஆஸ்பத் திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 6171474

**புதிய வீடு வாடகைக்கு**

வவுனியா வேப்பங்குளம் றோட், பட்டானிச்சூர், பட்டக்காடு என்னும் இடத்தில் நவீன வசதிகளுடன் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், நிறுவன ஊழியர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777 474741
வீட்டைப் பார்வையிடுவதற்கு
Facebook Id:- Kirushnasamy Jeyakumar

**துன்பம் தீர அருள்வாக்கு**



குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத் தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள் வாக்குக்கூறப்படும்.

வெள்ளவத்தை பேர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானேஸ்வரி அம்மன் அவர்கள் 04, 05, 06,04.2015 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்.

தொடர்புகளுக்கு: ஞானவைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

பூசை நேரம்:
முற்பகல் 10.30 மணி, மாலை 4 மணி

* கலாசார உடையுடன் வருகைதரவும்.

T.P: 021 221 9127

(58340)(4.3.7)

**Personal/group class**
(English / Tamil)


A/L Chemistry & Biology
A/L Science & Technology
Theory & 37 years past papers கற்பிக்கப்படும்.
T.P: 077 5477931


## சுனில் நரைனுக்கு எச்சரிக்கையுடன் அனுமதி

நடப்பு ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தர் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் மீண்டும் பந்து வீச இந்தியக் கிரிக்கெட் சபை நிபந்தனையுடன் அனுமதியளித்துள்ளது.

கொல்கத்தா அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைனின் பந்துவீச்சு விதிகளுக்குட்பட்டதாக இல்லையென தெரிவித்து நடப்பு ஐ.பி.எல். தொடரில் உட்திரும்பும் பந்தை வீசுவதற்கு அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால், நடப்பு ஐ.பி.எல். தொடரில் சில ஆட்டங்களில் விளையாடிய நரைன் தடை விதிக்கப்பட்டதையடுத்து கொல்கத்தா அணிக்காக விளையாடவில்லை. இந்த நிலையில், சுனில் நரைனுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்து அவரை மீண்டும் பந்துவீச இந்தியக் கிரிக்கெட் சபை அனுமதியளித்துள்ளது.

மீண்டும் ஒரு தடவை பந்தை விதிகளுக்கு முரணாக வீசும் பட்சத்தில் நரைனுக்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும் என்றும் இந்தியக் கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனை அடுத்து நேற்றைய ஆட்டத்தில் மீண்டும் நன்ரன் களம் இறங்கினார். (த–ரி)




**INVITATION TO BID**
**Implement Construction Works**
**(ITB/NLDP/2015/03)**

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. The Governance for Local Economic Development Programme (GLED) is UNDP Sri Lanka's new flagship programme for strengthening governance capacities at District, Divisional and Provincial levels and improving socio-economic opportunities in vulnerable regions in the country.

GLED will focus on increasing the capacity of sub-national level governance institutions, civil society, the private sector and communities in order to foster access to enhanced public sector service delivery, socio-economic development, and social cohesion across the identified lagging regions, while securing the transition from recovery to development in the North and East. The Programme will help communities increase their production and "value-added" capacities and make use of productive infrastructure, new technologies and knowledge. Strengthened engagement with the private sector will increase the sustainability of livelihoods initiatives. Given the sub-national variations in Sri Lanka's human development index, GLED offers a comprehensive and targeted response.

To this effect, UNDP in Sri Lanka invites eligible National and or International Civil Works contractors meeting the respective minimum level of ICTAD registration to submit Bids for the following on an *urgent basis*.

| Lot Number | Description of Civil Works | Minimum ICTAD Registration and Experience | Refundable Bid Security |
|---|---|---|---|
| 01 | Reconstruction / Rehabilitation of the salt water exclusion barrage and erect bund in Poonakary DS Division (Phase I) | C6 | 1% of Bid Offer |

Eligible Civil Work Contractors are encouraged to bid. Those bidders,who wish to submit Bids must show proof of resources, financial capacity through the required level of ICTAD registration and similar projects successfully undertaken within the last 12 months for the cumulative bid price. The UNDP will ***NOT*** accept partial bids within the given work and such bids will be rejected.

The Technical Drawings, Bill of Quantity (BOQ), Scope of Works and all solicitation bid documents will be made available for download free of charge from www.lk.undp.org (operations > procurement) from 27th April 2015 – 18th May 2015.

**The *deadline* for submission of the bids is 2.00pm,18th May2015Sri Lanka time** and all bids must be sealed and delivered to the address below. *All late* offers will be rejected and returned to the bidder unopened. The bids will be opened immediately after the closure of the submission time and bidders are encouraged to participate in the bid opening.

**Head of Procurement/Administration**
United Nations Development Programme (UNDP)
202-204 BauddhalokaMawatha
Colombo 07, Sri Lanka

UNDP reserves the right to accept or reject any bid. The procurement process will be governed by the rules and regulations of the United Nations Development Programme (UNDP).

202-204, BauddhalokaMawatha, Colombo 7, Sri Lanka • P.O. Box 1505
Telephone: 94 (1) 2 580691-8Fax: 94 (1) 2590038 • email: procurement.lk@undp.org

# தேர்தல் முறையில் மாற்றம் சிறுபான்மை இன்று முடிவு

கொழும்பு, மே 8

தேர்தல் முறை மாற்றத்தை கோரும் 20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நிலைப்பாட்டை இன்று எடுக்கவுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது:-

கடந்த 29ஆம் திகதி ஜனாதிபதியால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட 20ஆவது திருத்த யோசனைகள், சிறு கட்சித் தலைவர்களால் பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும்.

சிறு கட்சிகளின் நடவடிக்கைக் குழு ஏற்கனவே பலமுறை கூடி இந்த விவகாரம் தொடர்பான கொள்கை ஆவணம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற பிரதமருடனான சந்திப்பிலும், நேற்றுக் காலை தேர்தல் ஆணையாளருடன் நடைபெற்ற சந்திப்பிலும் இவை தொடர்பாக ஆராயப்பட்டன.

இந்நிலையில் அனைத்துச்சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் விடுதியில் கூடி, நடவடிக்கைக் குழு தயாரித்துள்ள ஆவணத்தை ஆராய்ந்து முடிவு எடுக்க உள்ளனர்.

இந்தக் கூட்டம் தொடர்பான அழைப்புகள் அனைத்து சிறு கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

# புதிய உறுப்பினர் பவன் மாவையுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், மே 8

வட மாகாணசபை உறுப்பினராக நேற்று முன்தினம் புதன்கிழமை சத்தியப் பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக்கொண்ட க.சிவனேசன் (பவன்) தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவைக் கட்சி அலுவலத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினராக வடக்கு மாகாண சபை பேரவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட புளொட் அமைப்பைச் சேர்ந்த கந்தையா சிவனேசன் (பவன்) சத்தியப் பிரமாண நிகழ்வைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை மரியாதையின் நிமித்தம் சந்தித்து எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். (த)

## நாளை மின் தடை

தென்மராட்சி, மே 8

தென்மராட்சி பிரதேசத்தில் நாவற்குழி தொடக்கம் சங்கத்தானை பெரிய அரசடி வரையான மின் மார்க்கத்தில் வேலைகள் நடைபெறவுள்ளதால் நாளை மின்தடை ஏற்படுமென மின்சார சபையினர் அறிவித்துள்ளனர். (த-9)

## வேள்ட் விஸன் நடத்தும் கௌரவிப்பு

வேள்ட் விஸன் நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் சிறுவர்கள் தொடர்பான பணியில் ஈடுபட்டவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நாளை சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் அ.கி.றொசைறோ தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ண குமார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் நன்னடத்தை அலுவலர் திருமதி எல்.வரதீஸ்வரி , சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மேற்பார்வை குடும்ப நல அலுவலர் திருமதி ரி.சந்திரேஸ்வரி ஆகியோரும் கலந்து கொள்வர். (த-9 )

# ஒய்வூதியர்களுக்கான மானிய உதவி உயர்வு

வலி.வடக்கு மே 8

அரச சேவைகள் நம்பிக்கை நிதியத்தினால் ஒய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானிய உதவித் திட்டத்தின் அளவு கடந்த மாதம் ஏப்ரல் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் எஸ்.பீ.ராஜநாயக்க இலங்கையில் உள்ள அனைத்து அரச சேவை ஒய்வூதியர் நம்பிக்கை நிதியத்துக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இது வரைகாலமும் அங்கத்துவப் பணமாக அறவிடப்பட்ட அங்கத்துவப் பணத்தின் அளவு ஐம்பது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மானியமாக வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மரணப் பணிக்கொடையாக வருடம் ஒன்றுக்கு ஆயிரத்து 750 ரூபா என்ற அடிப்படையில் ஆகக்கூடிய தொகையாக 11ஆயிரத்து 900 ரூபா வழங்கப்பட்டது.

தற்போது இந்த தொகையில் மாற்றம் செய்யப்பட்டு ஒரு வருடத்துக்கு உட்பட்டவர்களுக்கு 3ஆயிரம் ரூபாவும், இரண்டு வருடத்துக்கு மேற்பட்டவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாவும், மூன்று வருடங்களுக்கு மேற்பட்டவர்களுக்கு 15ஆயிரம் ரூபாவும் என அதிகரிக்கப்பட்டுள்ளது.

கண் சிகிச்சைக்கு இதுவரை காலமும் ஒரு கண்ணுக்கு 4ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் இரண்டு கண்களுக்கும் 8ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது இந்த தொகையானது ஒரு கண்ணுக்கு 5ஆயிரம் ரூபா வீதம் இரண்டு கண்களுக்கும் 10ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

வைத்தியசாலைக் கொடுப்பனவானது ஒரு நாளைக்கு 250 ரூபா வீதம் 15 நாள்களுக்கு 3ஆயிரத்து 750 ரூபா வழங்கப்பட்டது. தற்போது இந்த தொகையில் ஆகக்கூடியது பத்து நாள்களுக்கு ஒரு நாளைக்கு 500 ருபா என்ற அடிப்படையில் 5ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதயம், மூளை, சிறு நீரகம், புற்று நோய் போன்ற சத்திரசிகிச்சைகளுக்கு ஒரு சிகிச்சைக்கு மட்டும் 10ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது இந்த தொகையானது 15ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒய்வூதியர்களின் பிள்ளைகளுக்கான பட்டப்படிப்புக்கு முதல் இரு பிள்ளைகளுக்கு வருடாந்தம் 5ஆயிரம்ரூபாவழங்கப்பட்டது.இந்ததொகையானது தற்போது 6ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒய்வூதியர்கள் நன்மை அடையக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-86)

## மட்டு மாவட்ட அபிவிருத்திக்கு ரூ. 7451.8 மில்லியன் ஒதுக்கீடு

மட்டக்களப்பு, மே 8

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள 1222 அபிவிருத்தித் திட்டங்களுக்காக 7451.8 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சருமான அமீர் அலி தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துகு மத்திய அரசினால் 3 ஆயிரத்து 567 மில்லியன், கிழக்கு மாகாண சபையால் 657 மில்லியன், திட்டங்களுக்கு பொறுப்பான அமைச்சுக்களால் 1895 மில்லியன், அரச சார்பற்ற நிறுவனங்களினால் 688.8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் பொன் செல்வராசா, பா. அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்கள், திணைக் களங்களின் தலைவர்கள், மாநகர ஆணையாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-10)

# டக்ளஸின் காலில் விழுந்து செயற்பட்டவர் அனந்தராஜ்

## சாடுகிறார் குலநாயகம்

யாழ்ப்பாணம், மே 8

மஹிந்தவுடனும் பஸிலுடனும் தொடர்பு கொண்டு வேலை செய்வேன் எனக் கூறிப் பின்னர் டக்ளஸின் காலி விழுந்து செயற்பட்டவர் அனந்தராஜ் எனச் சாடியுள்ளார் வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் சூ.சே.குலநாயகம்.

07.04.2015 உதயன் பத்திரிகையில் 21ஆம் பக்கத்தில் "குலநாயகத்தை ஏன் பதவிநீக்கவில்லை" என்ற தலையங்கத்தில் வெளிவந்த வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் ந.அனந்தராஜின் கடிதம் பற்றி அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அரசியலில் தொடர்ந்து ஒரே கட்சியில் செயற்பட்டு வந்த என்னைப் பற்றிக் கேள்வி கேட்கும் யோக்கியம் அனந்தராஜுக்கு இல்லை. என்னைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கே உண்டு. மத்திய செயற்குழுவென்றால் என்னவென்று தெரியாத அனந்தராஜ் நான் கடந்த பத்து ஆண்டுகளாக வகித்து வரும் நிர்வாகச் செயலா ளர் பதவி பற்றி என்ன தெரிந்து வைத்திருக்கிறாரென்று தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுசரணையாக தான் இயங்கியதைச் சாதகமாக்கி பயிற்றப்பட்ட ஆசிரியராக அதிபர் தரம் 3 இல் இருந்த அனந்தராஜ் அதிபர் தரம் 1 ஐக் கொண்ட 1 'ஏபி' பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அதிபர் பதவி பெற்றார். பின் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப் படையுடன் இணைந்து செயற்பட்டு வந்த ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியில் இணைந்தவர். நகர சபையில் ஆதரவு பெறுவதற்காக டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பை ஏற்படுத்திய அனந்தராஜ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியில் இணைந்தவர். தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் காப்பாற்ற வேண்டுமென்று கூறுவது வெறும் கோமாளித்தனமாகும்.

ஒரு அரசியல் கட்சி என்றாலும் கட்சி அமைப்பு என்றாலும் என்னவென்று தெரியாதது போன்றே நகர சபைத் தலைவர் பதவி என்றால் என்னவென்று தெரியாத பேர்வழி அனந்தராஜ்.

ஈ.பி.ஆர்.எல்.எப். என்கின்ற கட்சியூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நகர சபைத் தேர்தலில் ஒரு வேட்பாளராக நின்றவர். இலங்கைத் தமிழரசுக் கட்சி வேறெந்தக் கட்சிக் காரருக்கும் உரித்துடைய கட்சி அல்ல. யாழ்ப்பாணத்தில் அசோக் ஹோட்டலில் காட்டுத் தர்பார் நடத்தியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் தமிழரசுக் கட்சியாலும் முன்னெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒருவாறாக நுழைந்து விட்டு தற்போது சண்டித்தனப் போக்கை கையாள்கின்றார்கள். எதற்கும் அருகதையற்ற அனந்தராஜ் மாவை சேனாதிராசாவுக்கு கடிதம் எழுதுவதும் அதனைப் பத்திரிகைக்கு கொடுப்பதன் மூலம் தாம் பிரபல்யம் ஆகலாம் என்ற குள்ளநரித்தனத்தை மக்கள் புரிந்து கொள்வர்.

தமிழ் பேசும் இனத்தின் தலைவனாக விளங்கும் பெருந் தலைவர் சம்பந்தனுடன் இணைந்த தலைவராக மாவை சேனாதிராசா செயற்படுவதை அகில உலகமும் அங்கீகரித்து நிற்கின்றது. இதனை புரிந்து கொள்ளாமல் அனந்தராஜ் சன்னதமாடுகின்றார்.

பதவி மோகத்தால் நகர சபைத் தலைவராக வந்தவுடன் வந்த வழியையும் மறந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் பஸில் ராஜபக்ஷவுடனும் தொடர்பு கொண்டு வேலை செய்வேன் எனக் கூறி பின் டக்ளஸ் தேவானந்தாவின் காலில் விழுந்து செயற்பட்ட ஆனந்தராஜ் நகர சபையின் இரண்டு ஈ.பி.டி.பி உறுப்பினர்களினதும் ஆதரவைப் பெற்றுக் கொண்டார்.

தனக்கு ஆதரவாக இருந்த உறுப்பினர் ஒருவருக்கு இறைச்சிக் கடை கூறு விலை கோரும் விடயத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெற்று 100 ரூபா முத்திரையில் கையொப்பம் இட்டுக் கொடுத்து கடிதத்தை தாம் வைத்திருந்து நகர சபைக்கு வருகை தந்த கட்சிப் பொதுச் செயலாளரிடம் அனந்தராஜ் தெரிவித்திருந்தார். ஈ.பி.டி.பி உறுப்பினர் அக்கடிதத்தின் போட்டோப் பிரதியை நகர சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்த போது அதிர்ச்சியுற்ற நான் கூட்டுப் பொறுப்பு என்ற வகையில் பெரும் சிரமத்துக்கு உள்ளானோம். இலஞ்ச ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்குமானால் குறித்த சபை உறுப்பினரும் உடந்தையாக இருந்த காரணத்துக்காக தலைவரும் (ஆனந்தராஜ்) சிறை செல்லவேண்டி ஏற்பட்டிருக்கும். இவ் விடயத்தால் சக உறுப்பினர்களின் ஆதரவை இழந்த நிலையில் தான் மூன்று மாதங்களில் பதவியை விட்டு விலகி வெளிநாட்டுக்குச் செல்ல இருப்பதாகக் கூறி குறித்த உறுப்பினரின் பதவி விலகல் கடிதத்தைக் கட்சிப் பொதுச் செயலாளரிடம் கையளித்தார்.

இதன் பின்னரும் சக உறுப்பினர்களின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முயலாது எதிர்ப்போக்கையே கடைப்பிடித்து வந்த சமயம் சபைக் கூட்டம் ஒன்றில் எதிர்பாராத வகையில் உப தலைவர், தலைவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்தார். அந்தக் கூட்டம் முடிவடைந்த பின் என்னையும் சிவாஜிலிங்கத்தையும் அழைத்துப் பேசிய போது அந்தப் பிரேரணை இப்போதைக்குத் தேவையில்லை என நாம் கூறிச் சென்றோம். ஆனால் சில தினங்களிலேயே தலைவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்க விசேட கூட்டத்தை அனந்தராஜ் கூட்டியிருந்தார். இந்தக் கூட்டத்திலும் கூட நான் எனது கருத்துக்களையும் கூறி பிரேரணையை விலக்கிக்கொள்வது பற்றி சிந்திக்ககலாம் என்று கூறியிருந்தேன். அதேபோல சிவாஜிங்கமும் தனது கருத்துக்களைக் கூறுகையில் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் தலைவர் சட்டப்படி பதவி இழக்கமாட்டார். ஆனாலும் தன்மானம், சுய கௌரவம் பார்ப்பவர்கள் பதவி விலகுவது வழமை என்று கூறி சபையை பத்து நிமிடங்கள் ஒத்தி வைத்து நம்பிக்கை இல்லாப் பிரேரணையை விலக்கிக் கொள்வது பற்றி தீர்மானிக்கலாம் என்றார். ஆனால் அனந்தராஜ் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விட்ட போது, நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஜனநாயகம் பற்றிக் கூறுகின்ற அனந்தராஜ் பதவி விலகவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மேதினத்தைசாவகச்சேரியில் கொண்டாடியபோது சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் ஆதரவைக் கோரி சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பணிப்புரை விடுத்திருந்தது. ஆனால் "மே" தினத்தன்று கஜேந்திரகுமார் அணியினர் மேடையில் தோன்றி எமது கட்சியையும் கட்சித் தலைவர்களையும் மிக மோசமாக விமர்சித்தவர் அனந்தராஜ். கட்சி மாறி நின்ற காரணத்துக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாகப் பெற்றுக்கொண்ட நகர சபைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கவேண்டியவர். அவ்வாறு இருக்க பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசாவை அனந்தராஜ் விமர்சித்திருக்கும் முறை அநாகரிகமானதும் முட்டாள் தனமானதுமாகும். என்றுள்ளது. (த)

## வட்டு.பிரதேச மருத்துவமனைக்கு சிரங்குநோய் மருந்து கையளிப்பு

வலி.வடக்கு, மே 8

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் நிலவும் சிரங்கு நோய்க்கான மருந்துத் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து நோயாளர்களின் நன்மை கருதி வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் சிரங்கு நோய்க்கான ஒரு தொகுதி மருந்து வகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.



வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி இந்து வாலிபர் சங்கத்திடம் சிரங்கு நோய்க்கான மருந்து தேவை அவசியமாகக் காணப்படுவதாக விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 15 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட மருந்துகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பல்வேறு சமூகப் பணிகளையும் பல திட்டங்களின் கீழ் மேற்கொண்டு வரும் நிலையில் சுகாதாரச் செயற்திட்டதின் கீழ் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (வ-86)



கிழக்கிலங்கையில் வரலாற்றுச்சிறப்புமிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழாவை முன்னிட்டு அம்பாளின் நகர்வலம் அண்மையில் ஆலயத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஆரம்பமானது. (வ-40)

## துர்நாற்றம் வீசும் சங்கானை சந்தை மலசலகூடம்

சங்கானை, மே 8

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை மரக்கறிச் சந்தைக்குள் அமைந்துள்ள மலசல கூடத்தில் துர்நாற்றம் வீசுவதால் பொதுமக்கள், வியாபாரிகள் எனப் பலரும் அசௌகரியத்துக்குள்ளாகி வருகின்றனர்.

மேலும் குறித்த மலசல கூடத்துக்கு அருகில் உள்ள வியாபார நிலையங்கள் ஓடக்கரை வீதியைப் பாவனை செய்வோர் எனப்பலரும் தினமும் மூக்கைப் பொத்தியபடி செல்ல வேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒழுங்கான சுத்திகரிப்பின்மையும் இதற்குக்காரணமாகும். கழிவு எடுக்கும் பௌசர் இயந்திரம் மூலம் ஓரிரு தடவை சுத்தப்படுத்தினாலும் துர்நாற்றம் வீசுவதைத் தவிர்க்க முடியாமலுள்ளதாக அந்தப்பகுதி மக் கள் விசனம்தெரிவிக்கின்றனர். (வ-29)

# தென்மராட்சியில் மீண்டும் டெங்கு

தென்மராட்சி, மே 8

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து, கடந்தவாரம் பெய்த மழையை அடுத்து மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாத இறுதியில் பெய்த கடும் மழையின் பின்னர்- ஏப்ரல் முதல் வாரத் தில் டெங்கால் 10 பேர் பாதிக்கப்பட்டதாகவும் அதன்பின்னர் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் கடந்தமாத இறுதியில் பெய்த மழையின் பின்னர் நேற்று முன்தினம் வரை 5 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நுளம்பு அதிகம் காணப்படுவதற்கு போதிய பாதுகாப்பை மக்கள் ஏற்படுத்தவில்லை என்று கருத முடிகிறது. சுகாதாரப் பகுதியினரும் பல தடவைகள் டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட வேளைகளில் தம் மீது வழக்குத் தொடுத்து விடுவார்கள் என்ற அச்சத்தால் மக்கள் தமது குடியிருப்புப் பகுதிகளை துப்புரவாக்கி வைத்திருந்தனர். அதன்பின்னர் அதனைக் கவனிப்பதில்லை. எனவே மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வரை மழை பெய்யும் காலங்களில் டெங்கின் தாக்கம் அதிகரித்துச் செல்லும் என்பதை மறுக்க முடியாது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த 4 மாதங்களில் டெங்கால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மானிய உர அளவை அதிகரிக்க வலியுறுத்து

முல்லைத்தீவு, மே 8

கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்படுகின்ற மானிய உரத்தின் அளவு குறைக்கப்பட்டதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வழங்கப்படும் உரம் போதாத நிலையில் உள்ளதாகவும் அதனை முன்பு வழங்கிய அளவைப் போன்று வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

பயிர்ச்செய்கைநிலமானது செயற்கை உரத்துக்கு பழக்கப்பட்டு விட்டதால் உரத்தின் மூலமே விவசாயத்துறையை அதிகரித்துக் கொள்ள முடிகிறது. தற்போது ஏக்கருக்கு 76 கிலோ யூரியா வழங்கப்படுகிறது. ஆனால்அதனைவயற்செய்கைக்கும் உப உணவுப் பயிர்களுக்கும் இடுவதற்குபோதாத நிலை காணப் படுகிறது. எனவே மானிய உரத்தை சற்று கூடிய அளவில் வழங்க வேண்டும் எனவும் அடி உரம் நெல் விதைக்கும் போது (புளுதி விதைப்பின்போது) காலம் தாழ்த்தி கமநல சேவை நிலையத்துக்கு வருவதால் அவைகளை உழவிலே போட முடியாத நிலை ஏற்பட்டு வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (வ-500)

## போத்தல் கள் உற்பத்திக்கு ஆவன செய்ய வேண்டும்

### ஒட்டுசுட்டான் கள் உற்பத்தியாளர்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு,மே 8

எமது கள் உற்பத்தியை போத்தலில் அடைக்க ஆவன செய்யுங்கள். நாம் நட்டமடைகிறோம் என்று ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கள் உற்பத்தியை மேற்கொள்ளும் உற்பத்தி யாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

"நாம் கஷ்டத்தின் மத்தியில்இந்தத் தொழிலை மேற் கொள்கின்றோம். சில் நேரங் களில் கூடுதலாக கள் சேரும் போது விற்பனையாகாது. ஊற்ற வேண்டியுள்ளது. அதன் போது விகிதாசாரப்படி ஒவ்வொரு தொழிலாளியிலும் கழிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல நிகழ்வுகள் இடம்பெறும்போதும் தேர்தல் நடைபெறும் போதும் பல தடவைகள் கள் விற்பனை இல்லாத போது கள்ளை ஊற்ற வேண்டிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாக வெசாக் தினமான 3, 4 ஆம் திகதிகளில் மதுசாலை பூட்டப்பட்டபோது எமது உற்பத்தியை விற்பனை செய்ய முடியாது நட்டமடைந்துள்ளோம்.

எனவே இங்கு வெளி மாவட்டங்களிலிருந்து போத்தல் கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் எமது மாவட்டத்தில் போத்தலில் கள் அடைக்கும் அனுமதியை வழங்கினால் நாம் பயனடைவோம்.

போத்தலில் கள் அடைக்க அனுமதி வழங்கப்பட்டால் நாம் உற்பத்தி செய்யப்படும்கள்ளைஊற்றவேண்டியதில்லை.நாமும்பயனடைவோம். எமது சங்கத்துக்கும் இலாபம் ஏற்படும். அத்துடன் அதன் மூலமும் தொழில் வாய்ப்பையும் சிலர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். எனவே எமது உற்பத்தி மூலம் நட்டமடையாது வாழ்வாதர்ரத்தை மேம்படுத்த இந்த மாவட்டத்தில் உள்ள சங்கத்தின் மூலம் போத்தல் கள் அடைக்க அனுமதி வழங்கி மேம்பாடடைய வழிசெய்ய வேண்டும்" என்றும் அவர்கள் தெரி வித்தனர். (வ-500)

## நீர்கொழும்பில் சிக்கியது அபூர்வ வடிவமான மீன்



நீர்கொழும்பு கடற்கரையில் அபூர்வமான கடல் வாழ் உயிரினம் ஒன்று மீனவர்களுக்குக் கிடைத்தது. மீனைப் போன்று இருக்கும் இந்த உயிரினத்தின் மேல் பகுதியில் மானுக்கு இருப்பதை போன்ற புள்ளிகள் காணப்படுகின்றன. உலகில் பூமியில் வாழும் உயிரி னங்களுக்கு ஈடான உயிரினங்கள் கடலில் வாழ்வதாக மீனவர்கள் நம்புகின்றனர்.அவ்வாறான உயிரினங்கள் கடல் சிங்கம், கடல் பாம்பு என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றன இதனை எப்படி அழைக்கலாம்? (வ)

## சிறுவர் பேரவை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே 8

யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் பேரவைக்கான நிகழ்வுகள் வேலணை மத்திய கல்லூரியில்நாளைசனிக்கிழமைகாலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

கே.என்.எச். நிறுவகத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும் சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனும் கலந்துகொள்வார்கள்.

சிறுவர் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட சிறுவர்களை ஒருங்கிணைத்து நிகழ்வு நடைபெறும். (வ-[illegible])

# சுகாதார அமைச்சின் அணிகள் அபாரம்



யாழ்ப்பாணம், மே 8

வடக்கு மாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரிலும் பெண்களுக்கான தாச்சித் தொடரிலும் சுகாதார அமைச்சு அணிகள் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின.

நேற்று முன்தினம் புதன்கிழமை நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் சுகாதார அமைச்சு அணியை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் சுகாதார அமைச்சு அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

பெண்களுக்கான தாச்சித் தொடரின் இறுதியாட்டத்தில் சுகாதார அமைச்சு அணி எதிர்த்து முதலமைச்சர் செயலக அணி மோதிக் கொண்டது. இதில் சுகாதார அமைச்சு அணி 3:1 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.(த-ரி-23)

# கலைமகள் மகுடம்

கரணவாய், மே 8

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட துடுப்பாட்டத் தொடரில் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் 25ஓட்டங்களால் வவுனியா விபுலானந்தக் கல்லூரியைத் தோற்கடித்து நடப்புச் சம்பியனாகியது.

நாணயச் சுழற்சியல் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 95 ஓட்டங்களை குவித்தது. அதிகபட்சமாக புவிமாறன் 45 ஓட்டங்களையும், சஜிதரன் 13 ஓட்டங்களையும், தனு 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விபுலானந்தக் கல்லூரி சார்பாக டினேஸ் ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய விபுலானந்தக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரி மாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களை மட்டும் பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக டினேஸ் 32 ஓட்டங்களையும் தனுசன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் புவிமாறன் 4 இலக்குகளையும் கிரிதரன், நிரோஜன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(த-ரி-108)

# வசந்த ஸ்ரீ, ஆவரங்கால் மத்தி அபாரம்

யாழ்ப்பாணம், மே 8

சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் தற்பொழுது மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் சண்டிலிப்பாய வசந்த சிறி விளையாட்டுக்கழக அணியும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்து. 3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-ரி-23)

# ஈகிள்ஸ் 'ரி-20' தொடர் ஆரம்பமாகிறது நாளை

யாழ்ப்பாணம், மே 8

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 'ரி-20' தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு மன்னார் பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமகின்றது.

ஆரம்ப நிகழ்வில் விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், வடமகாண சபை உறுப்பினர் குணசீலன் மற்றும் இலங்கைக் கிரிக்கெட் சபையின் வடமாகாண மாகாண மன்னார் மாவட்ட முகமையளார் சித்தாத் பெர்ணன்டோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் முதலாவது லீக் ஆட்டத்தில் மன்னார் றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.லயன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(த-ரி-23)

# பருத்தித்துறையை பந்தாடிய கரவெட்டி

கரணவாய், மே 8

பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியை 28 ஓட்டங்களால் வீழ்த்தி இவ்வருட மாவட்டச் சம்பியனாகியது கரவெட்டிப் பிரதேச செயலக அணி.

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் அணியும் கரவெட்டிப் பிரதேச செயலர் அணியும் கடந்த திங்கட்கிழமை கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதானத்தில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கரவெட்டிப் பிரதேச செயலர் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பிரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அதிகபட்சமாக சீலன் 22 ஓட்டங்களையும், சுகந்தன் 19 ஓட்டங்களையும், அனுசயந்தன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் பருத்தித்துறைப் பிரதேச செயலகம் சார்பாக றஞ்சித், செந்தூரன், கோகுலன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ரமேஸ், மதன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 89 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பருத்தித்துறை பிரதேச செயலர் அணிக்கு கரவெட்டிப் பிரதேச அணியின் பந்து வீச்சு ஆரம்பம் முதலே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. ஓட்டங்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் அணி 60 ஓட்டங்களைப் பெற்று 28 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அதிகபட்சமாக கோகுலன் 21 ஓட்டங்களையும் ரஞ்சித் 18 ஓட்டங்களையும் செந்தூரன் 7 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் குணதீபன் 4 இலக்குகளையும் செந்தூரன், உமைசுதன் , அனுசயந்தன் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(த-ரி-108)

# மாகாண மட்டப் போட்டிகள் நாளை ஆரம்பம்

வலி. வடக்கு, மே 08

வட மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே வருடாந்தம் நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டியின் ஒருகட்டமான அரை மரதன் ஓட்டப் போட்டி 09ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து ஆரம்பமாகி முல்லைத் தீவில் முடிவடையவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் பத்து வீர வீராங்கனைகள் என சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இந்த மரதனில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வெளி மாவட்டங்களில் இருந்து செல்லும் பாடசாலை வீர வீராங்கனைகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தூர இடங்களில் இருந்து வந்து கலந்து கொள்ள வீர வீராங்கனைகள் முதல் நாள் வந்து தங்குவதற்கு வசதியாக தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஆண்களுக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் பெண்களுக்கு முல்லைத்தீவு சுப்பிரமணியம் வித்தியாலயத்திலும் இட வசதிகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ரி-86)

# தாதியர் தினத்தை முன்னிட்டு

## நாளை மறுதினம் துடுப்பாட்டத் தொடர்

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு வடமாகாண வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர் அணிகளுக்கிடையில் துடுப்பாட்டத் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது. வவுனியா பொது வைத்தியசாலையினால் அமரர் ந.கனகரட்னம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் இந்தத் தொடர் நாளை மறுதினம் காமினி மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரி)

# கரை கண்டது கலைமகள்

கரணவாய், மே 8

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய ஐந்து அணிகள் மாகாண மட்டத் தொடர்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

19 வயது ஆண்களின் துடுப்பாட்ட அணி, 19 வயது பெண்களின் துடுப்பாட்ட அணி, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட அணி, 19 வயது வலைப் பந்தாட்ட அணி, 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்ட அணி ஆகியவையே மாகாண மட்டத் தொடர்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

(த-ரி-108)

# வவுனியா மாவட்ட கரப்பந்தாட்ட முடிவுகள்

## சிங்கள மொழிப் பாடசாலைகள் மிகவும் வலுவான ஆதிக்கம்

வவுனியா, மே 8

வவுனியா மாவட்டமட்டப் பாடசாலைகளிற்கிடையிலான கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

**ஆண்கள் பிரிவு**

15வயது ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் சிறிசுமண மகா வித்தியாலய அணியை எதிர்த்து பறக்கும் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 2:1 என்ற செற்கணக்கில் சிறிசுமண மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி பெற்றுக்கொண்டது.

17வயது ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் சிறிசுமண மகா வித்தியாலய அணியை எதிர்த்து கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி மோதியது. இதில் 2:0 என்ற செற்கணக்கில் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை அழகல்ல மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

19வயது ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் சிறிசுமண மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் 2:1 என்ற செற்கணக்கில் சிறிசுமண மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

**பெண்கள் பிரிவு**

15வயது பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் சிறிசுமண மகா வித்தியாலய அணியை எதிர்த்து தர்மபால மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 2:0 என்ற நேர் செற்கணக்கில் சிறிசுமண மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை அழகல்ல மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

17வயது பெண்கள் பிரிவின் இறுதியர்ட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து சிறிசுமணி மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 2:0 என்ற நேர் செற்கணக்கில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை தர்மபால மகா வித்தியால அணி பெற்றுக் கொண்டது.

19வயது பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 2:1 என்ற செற்கணக்கில் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்தை கல்மடு மகா வித்தியாலய அணி பெற்றுக் கொண்டது.

(ரி-422)




# மும்பையை வீழ்த்துமா சென்னை?



நடப்பு ஐ.பி.எல்.தொடரின் இன்றைய லீக் ஆட்டத்தில் சென்னை எதிர் மும்பை அணிகள் பலப் பரீட்சை நடத்தவுள்ளன. நடைபெற்று முடிந்த லீக் ஆட்டங்களில் பெரும்பாலான வெற்றிகளுடன் முதலிடத்தில் உள்ளது சென்னை. இந்த நிலையில் சென்னையின் வெற்றிப் பயணம் இந்த ஆட்டத்திலும் தொடருமா? இல்லையா? என்பதே சென்னை ரசிகர்கள் மத்தியில் தற்போதுள்ள கேள்வி.

சென்னையின் துடுப்பாட்டத்தைப் பொறுத்த மட்டில் சிமித், மக்கலம், ரெய்னா, பிளாஸிஸ், டோனி, ஜடேஜா, அஸ்வின் என்று பஞ்சமில்லாத பட்டாளம் உள்ளது. பந்து வீச்சுக்கும் குறைவில்லை. ஆனால் கைவிரலில் ஏற்பட்ட காயம்காரணமாக கடந்த சில ஆட்டங்களில் விளையாடாத அஸ்வின் இன்றைய ஆட்டத்தில் களமிறங்குவதும் சந்தேகமே. அஸ்வின் இல்லாதமை சென்னையின் பந்துவீச்சு வரிசையில் வெற்றிடத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. இதனை டோ்னி உணராமலும் இல்லை. சென்னை தற்பொழுது மிகவும் பாதுகாப்பான நிலையிலேயே உள்ளது. இதனால் காயத்துடன் அஸ்வின்விளையாடுவதிலும் பார்க்க சற்று கூடுதல் ஓய்வில் இருப்பதை டோனி விரும்பும் பட்சத்தில் சென்னையின் பந்துவீச்சு வரிசையில் இன்றும் தளம்பல்கள் ஏற்படலாம். ஆனால் சகலதுறை அசத்தலினால் சென்னையை பாதுகாப்பாக கரைசேர்க்கும் பிராவோ உள்ளமை சென்னைக்கு இரட்டிப்புப் பலம்.

மும்பையைப் பொறுத்த மட்டில் ஆரம்பத்தில் சில சொதப்பல்கள் இருந்தாலும் அதனை சரிசெய்து தற்பொழுது மிகவும் சிறந்த போர்மில் உள்ளது. கடைசியாக எதிர்கொண்ட நான்கு ஆட்டங்களிலும் வெற்றியைப் பதிவுசெய்து கடந்த வருடத்தைப்போல நடப்பு வருடத்திலும் கடைசிக்கட்ட அசத்தலைக் கையிலெடுத்துள்ளது. ஆனால் தொடர்ச்சியாக நான்கு வெற்றிகள் பெற்ற வரிசையில் ஐந்தாவது வெற்றியை மும்பையால் இன்று சென்னையுடன் போராடி பெறமுடியும் என்பது நிச்சயம் சாத்தியமானதல்ல. ஏனெனில் மும்பை பலம்பெற்றிருப்பினும் சென்னையை வீழ்த்தக்கூடியளவு பலம் இன்னமும் மும்பைக்கு இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. (த-ரி)

## பஞ்சாய் பறந்தது பஞ்சாப்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பெங்களூர் எதிர் பஞ்சாப் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் தோல்வியுற்றதன் மூலம் தொடரில் இருந்து பரிதாபமாக வெளியேறியுள்ளது பஞ்சாப்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் எதிர்கொண்ட பத்து ஆட்டங்களில் எட்டு ஆட்டங்களில் பஞ்சாப் தோல்வியடைந்துள்ளது. இதனையடுத்து அடுத்துவரும் ஆட்டங்கள் அனைத்தையும் வென்றாலும் பஞ்சாப் தொடரை விட்டு வெளியேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாகும் பொழுதெல்லாம் பவிலியனில் அமர்ந்து ஆட்டமும் பாட்டமுமாக ரசித்துக்கொண்டிருந்த பிரீத்தி ஜிந்தா இப்பொழுதெல்லாம் மைதானத்துக்கே வருவதில்லையாம். அத்துடன் நின்றுவிடாது இந்தத் தொடர் தோல்விகளுக்கெல்லாம் காரணமான ஆஸி வீரர்களை மீண்டும் ஆஸ்திரேலியாவுக்கே அனுப்பப்போகிறாராம். இதே பிரீத்தி ஜிந்தாதான் ஆஸி வீரர்கள் எனது சொத்துக்கள் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)

## சாதனைக்கு வந்த சோகம்

தங்கம் வென்ற முன்னணித் தடகள வீராங்கனைகள் விஷம் குடித்துள்ள சம்பவம் இந்தியாவையே பரபரப்பாக்கியுள்ளது.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நீர் விளையாட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வந்த வீராங்கனையில் ஒருவர் விஷம் அருந்தி சாவடைந்துள்ளார். மேலும் மூன்று வீராங்கனைகள் ஆபத்தான நிலையில் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த 4 வீராங்கனைகளில் இருவர் தங்கப் பதக்கம் வென்றவர்கள் ஆவார்கள்.

மூத்த வீரர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தந்த தொந்தரவே தற்கொலை முயற்சிக்கு காரணம் என்று வீராங்கனைகளின் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பாக இந்திய மத்திய விளையாட்டு துறை உயர் அதிகாரிகள் விசாரணை நடத்த உத்தவிட்டுள்ளார். (த-ரி)

## இது நல்லாயிருக்கே!



ஐ.பி.எல். தொடரின் தற்போதைய விதிமுறைகள் முற்றிலும் வீரர்களுக்குச் சாதகமாக உள்ளன. இதன்படி காயம் அடைந்த வீரர்கள் கவலைப்படத் தேவையில்லை. இவர்களுக்கு ஒப்பந்த தொகையில் பாதி வழங்கப்படும். ஒரு ஆட்டத்தில் கூட விளையாடாத முகமது ஷமி, ரூபா 2.12 கோடியை (இந்திய மதிப்பில்) அள்ளிச் செல்கிறார்.

ஐ.பி.எல். சம்பள விதிமுறை வீரர்களுக்குச் சாதகமாக உள்ளது. ஒப்பந்தம் செய்யப்பட்ட வீரர் காயம் அடைந்தாலும் அணியின் பயிற்சி முகாமிற்கு ஒரு நாள் மட்டும் வந்திருந்தாலும் சம்பளத் தொகையில் பாதி வழங்கப்படும். ஆட்டத்தின்போது காயம் அடைந்து விலகினால், முழுத் தொகையையும் வழங்க வேண்டும்.

இந்த விதிமுறையால் அதிகம் பயன் அடைந்தவர் டில்லி அணியின் முகமது ஷமி. இவர் ரூபா 4.25 கோடிக்கு (இந்திய மதிப்பில்) வாங்கப்பட்டவர். இந்திய அணிக்காக உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய போது முழங்கால் காயத்தால் அவதிப்பட்டார். இந்த நிலைமை தொடரப்படவே டெல்லிக்காக விளையாட முடியாத சூழ்நிலை சமிக்கு ஏற்பட்டது. இதனால் சமி ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகினார். ஆனாலும் மேற்குறிப்பிட்ட விதிமுறையின்படி அவருக்கு ஒப்பந்தத்தில் பாதித்தொகை வழங்கப்படவுள்ளது.

சில ஆட்டங்கள் மட்டும் மும்பைக்காக விளையாடி காயமடைந்து நாடுதிரும்பிய பின்ஞ் ஆட்டத்தின்போது காயமடைந்ததால் ஒப்பந்தத்தின் முழுத் தொகையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி)

## தோல்வியின் விளிம்பில் பங்களாதேஷ்



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் யுனிஸ்கான், ஷபிக் ஆகியோரது சதமும் அசார் அலியின் இரட்டைச்சதமும் யுனைட் கான், சாஜ் ஆகியோரது பந்துவீச்சுப் பலமும் கைகொடுக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் பலமான நிலையில் உள்ளது.

பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் தொடர் தற்பொழுது பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் 323-3 என்ற பலமான நிலையில் இருந்தது. அசார் அலி 127 ஓட்டங்களுடனும் மிஷ்பா 9 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக களமிறங்கினார்கள். மேலதிகமாக எந்தவொரு ஓட்டத்தையும் பெறாமல் பவிலியன் திரும்பினார் மிஷ்பா. அசார் அலி தொடர்ந்தும் நங்கூரம் போட்டது போல் நிலைத்து நின்றார். அசாருடன் இணைந்தார் ஷபிக். ஆரம்பத்தில் நிதானித்த இணைப்பாட்டம் பந்துகள் இசைவாக்கம் அடைந்ததும் நிலையானது. இணைப்பாட்டத்தை கச்சிதமாகப் பயன்படுத்தி அசார் தனது முதலாவது இரட்டைச் சதத்தைக் கடந்தார். ஷபிக்கும் விட்டுவிடவில்லை. ஷபிக்கின் பெயரில் சதம்ஒன்று பதிவானது. பாகிஸ்தான் மிகப்பலமான நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபொழுது அசாரின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அசாரின் வழியில் ஷபிக்கும் நடையைக் கட்டினார். பின்வரிசை வீரர்கள் ஏதோ சுமாரான பங்களிப்பை வழங்க பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸை 557-8 என்ற நிலையில் இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக இஸ்லாம் 3 இலக்குகளையும் சஹிட் மற்றும் ஹொசைன் தலா 2 இலக்குகளையும் ஷகிப் அல் ஹசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

558 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் பங்களாதேஷின் இன்னிங்ஸிற்காக களத்தில் இக்பாலுடன் கையிஸ். ஒருநாள் ஆட்டங்களிலும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்திலும் சதங்களை அள்ளி விளாசிய இக்பாலால் நேற்று நான்கு பந்துகளுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஹக்கியூவும் அணியைக் கைவிட பங்களாதேஷ் 38-2. கையிஸும் முகமதுல்லாவும் சிறிது நேரம் தாக்குப் பிடித்தனர். இணைப்பாட்டத்தை அனுமதிப்பது எவ்வளவ பெரிய தவறு என்று உணர்ந்து கொண்ட சாஜ் கையிஸின் விக்கெட்டை தூக்கி எறிந்தார். முகமதுல்லாவும் சிறிது நேரத்தில் விடைபெற சாஜ்ஜின் பந்தில் மீண்டும் ஒரு போல்ட் அரங்கேறியது. ரஹிம் 12 ஓட்டங்களுடன் பவியன் திரும்ப இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் பங்களாதேஷ் 107-5. பாகிஸ்தானை சமன் செய்ய பங்களாதேஷ் இன்னமும் 450 ஓட்டங்களைப் பெறவேண்டும்.

ஆட்டத்தின் மூன்றாம் நாள் இன்றாகும் ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (த-ரி)

## பெடரர் அதிர்ச்சித் தோல்வி



உலக இரண்டாம் தர வீரர் ரோஜர் பெடரர் மட்ரிட் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் ஆஸ்திரேலிய வீரர் கிர்கியோஸிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளார்.

ஸ்பெயின் தலைநகர் மட்ரிட் நகரில் நடந்து வரும் மட்ரிட் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் சுற்றில் உலக தர வரிசையில் இரண்டாம் நிலையில் உள்ளவரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஆஸ்திரேலியாவின் இளம்வீரர் நிக் கிர்கியோஸை எதிர் கொண்டார். இந்த ஆட்டத்தில் கிர்கியோஸ் 7-6, 6-7, 6-7 என்ற கணக்கில் பெடரரை வென்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார். கிர்கியோஸ் மூன்றாம் சுற்றில் அமெரிக்காவின் ஜான் இஸ்னரை எதிர் கொள்ள உள்ளார். (ரி)




## ஸ்பெயின் ரென்னிஸ் முடிவுகள்

ஸ்பெயினில் நடைபெறும் மாட்ரிட் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் காலிறுதியில் விளையாட, முன்னணி வீராங்கனைகளான பெத்ரா குவித்தோவா (செக் குடியரசு), மரியா செரபோவா (ரஸ்யா), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

மூன்றாவது சுற்றில் ரஸ்யாவின் அனஸ்டேசியா பாவ்லியுசென்கோவாவுடன் நேற்று மோதிய குவித்தோவா 6–1, 6–4 என்ற நேர் செற்களில் எளிதாக வென்றார். மற்றொரு 3ஆவது சுற்றில் ரஸ்யாவின் மரியா ஷரபோவா 6–2, 4–6, 7–5 என்ற செற் கணக்கில் கரோலின் கார்சியாவை (பிரான்ஸ்) போராடி வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். முதல்தர வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் தனது 3ஆவது சுற்றில் விக்டோரியா அசரென்காவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் செரீனா 7–6, 3–6, 7–6 என்ற செற் கணக்கில் 2 மணி, 43 நிமிடம் வரை போராடி வென்றார். (த–ரி)

# போராடி வென்றது ஹைதராபாத் முதலிடத்தை இழந்தது ராஜஸ்தான்



மோர்கனின் அதிரடி அரைச்சதமும் தவானின் நிதான அரைச்சதமும் கைகொடுக்க 7 ஓட்டங்களால் ராஜஸ்தானை வீழ்த்தியது ஹைதராபாத்.

ராஜஸ்தான் எதிர் ஹைதராபாத் அணிகளுக்கிடையிலான ஆட்டம். ராஜஸ்தான் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடிப்பதற்கு சென்னையுடன் போட்டிபோடும் ஒரு அணி. ஹைதராபாத் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறுவதற்காக மும்பை, டெல்லி, பெங்களூர், கொல்கத்தா போன்ற அணிகளுடன் போட்டிபோடும் ஒரு அணி. சுருங்கச் சொல்லின் கௌரவப் போராட்டம் ராஜஸ்தானுக்கு கட்டாயப் போராட்டம் ஹைதராபாத்துக்கு.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ஹைதராபாத்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. களத்தில் தவானுடன் வோர்ணர். வழக்கம் போல சுமாரான தொடக்கம். வழக்கத்துக்கு மாறாக முதலில் வோர்ணர் ஆட்டமிழந்தார். தவானுடன் இணைந்தார் ஹென்றிக்ஸ். தவான் அடித்தாட ஹென்றிக்ஸ் நிதானமாகச் சென்றுகொண்டிருந்தார். சிக்சர்களும் அவ்வப்பொழுது இடம்பெறத் தவறவில்லை. அரைச்சதத்தை தவான் தொடும் வேளையில் இணைப்பாட்டத்தை முடித்துக்கொண்டார் ஹென்றிக்ஸ். இடத்தை நிரப்பினார் இங்கிலாந்தின் அணித்தலைவர் மோர்கன். அரைச்சதம் கடந்து தவான் விடை பெற்றதும் அதிரடி இல்லாமல் போனது என்ற எண்ணங்களை முழுவதுமாகப் பொய்யாக்கினார் மோர்கன். இருநூறுக்கு குறையாத சராசரியில் அடித்து நொருக்கி 23 பந்துகளில் அரைச் சதத்தை எட்டினார். ஹைதராபாத் இருநூறு ஓட்டங்களை எட்டக்கூடிய அதிரடியில் பயணிக்க அடித்தளம் அமைத்த மோர்கன் 68 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இறுதிக்கட்ட அதிரடிகளும் கைகொடுக்க 201–4 என்ற இலக்கை அடைந்தது ஹைதராபாத்.

120 பந்துகளில் 202 ஓட்டங்கள். ராஜஸ்தானால் எட்டிவிட முடியும். ஆனால் சற்றுக் கடினம். களத்தில் ரஹானேயுடன் வற்சன். ராஜஸ்தானை பேணிப்பாதுகாக்கும் ரஹானே நேற்று பத்து ஓட்டங்களையே பெறாததுதான் பரிதாபம். வற்சனும் பதின்மத்தில் பவிலியன் திரும்ப ராஜஸ்தான். 30–2. சிமித் ஒரு முனையில் போராடினாலும் நாயரும் கூடாவும் நிலைக்கத்தவறி ஒருவர் பின்னர்ஒருவராக பவிலியன் திரும்ப ராஜஸ்தானின் தோல்வி வெளிச்சமானது. ஆனாலும் விடவில்லை பல்க்நெர். சிமித்துடன் இணைந்து அதிரடியாகப் பயணித்து ராஜஸ்தானின் பக்கமும் வாய்ப்புக்கள் உள்ளன என்று நிரூபித்தார். சிமித் அரைச்சதத்துடன் விடைபெற்றதும் சாம்சன் அடித்து நொறுக்கினார். சாம்சனை நிலைக்க விடாது போல்ட்டாக்கினார் புவனேஸ்குமார். ஒன்பதாவது வீரராக களமிறங்கிய மொறிஸிம் விடவில்லை. சந்தித்த பதினொரு பந்துகளில் மூன்றை சிக்சராகவும் இரண்டை பவுண்டரியாகவும் மாற்றினார். என்னதான் போராடினாலும் ராஜஸ்தானால் 194 ஓட்டங்களையே பெற முடிந்தது. முடிவில் ஹைதராபாத் 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று 10 புள்ளிக ளுடன் ஐந் தாவது இடத்தில் உள்ளது. (த–ரி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
920 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்.
Register now : 0779 789 456 / 021 221 7781
No. 40, Palaly Road, Jaffna.(அரியாலை)
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

Nation popular travels & tours

விசேட சலுகை
சென்னை 22850/=
ROME 45450/=
LONDON 45500/=
FRANKFURT 43500/=
PARIS 45500/=
Branches
128, Brown Road
Jaffna
0214920920
#27 Lower St.Andrews Place
Colombo-15
0114375357
#179A railway station road
vairavapuliyankulam
vavuniya
0244930830
Head Office
#16 1/2
E.S.Fernando Mawatta
Colombo-06
0114651199
0773083820

Campus first form
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்படும் பல்கலைக்கழக முதல் படிவம் (FIRST FORM) வெளிவந்து விட்டது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். அங்கீகாரம் பெற்ற யாழ்.மாவட்ட முகவர்.
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 9881 (கி.15774) (45.3.7)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
முகாமைத்துவ உதவியாளர்கள்
மற்றும்
சுங்க திணைக்கள காவலர் தேர்வு
ஞாயிறு 10.00 மணி
அதிபர் சேவை தரம் III
ஞாயிறு 01.00 மணி
T.P:- 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

பங்களாவுடன் கூடிய காணி விற்பனை
திருகோணமலை நிலாவெளி பீச் ஹோட்டலுக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய 07 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பங்களாவுடன் கூடிய காணி ஹோட்டல் நடத்துவதற்கு ஏற்ற வகையில் உடனடியாக விற்பனைக்குண்டு. நீர்த்தடாகம் (Lake View) உள்ளது.
T.P. 077 312 1328
(59544) (45.3.7)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1 : 09-05-2015
Batch 2 : 11-05-2015
Batch 3 : 13-05-2015
Batch 4 : 16-05-2015
No.15 1/2, Siriampiyady Lane, (Above Sathosa SM) Jaffna. Tel :021-2224550 0777585913, 0777222422, 071429935
கிழமை நாளுக்கான மாலை வகுப்புகள் 2.30 - 5.00 மணி வரை புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது
அலுவலகர்களுக்கு/உத்தியோகத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 09/05/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.